Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්


பக்கம் 24 ரூபா 30.00

செப்ரெம்பர் 10 - 16, 2015

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1134

# எதிர்க்கட்சி தலைமை?





## கிழக்கு பல்கலைக்கழக

காணாமல் போனோர் கதி!



## ஆடம்பரத்தின் நிறைவு ஆரவாரத்தின் ஆரம்பம்

கோவை நந்தன்



## உள்ளக விசாரணையா? சர்வதேச விசாரணையா?

## கண் திருஷ்டி

“கல்லடி பட்டாலும், கண்ணடி படக்கூடாது” என்று பெரியோர்கள் கூறுவதுண்டு. காரணம் கல்லால் ஏற்படும் வேதனை தற்காலிகமானது, ஆனால், கண் திருஷ்டியின் விளைவுகளோ பல ஆண்டுகளுக்கும் ஏன் பல பிறவிகளுக்கும்கூட தொடரக்கூடியது. மனிதர்கள் அனுபவிக்கும் திருஷ்டி துன்பங்களும் அவர்களுடைய பூர்வஜென்ம செயல்களின் பலன்களே என்பதில் ஐயமில்லை.

கண் திருஷ்டியைக் களையும், சஹஸ்ர தீப தரிசனம் நோய்த் துன்பங்கள், கடன்தொல்லைகள் போன்ற துன்பங்களை இறை வழிபாடுகள், தீர்த்த யாத்திரைகள் போன்ற ஆன்மீக சாதனங்களால் முற்றிலும் தணிக்கமுடியாது என்பது உண்மையே. ஆயினும் அத்துன்பங்களின் விளைவுகளை நிச்சயமாக இறைவழிபாடுகளால் ஓரளவு குறைத்துக்கொள்ளலாம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மேலும், எத்துன்பத்தையும் ஏற்றுக்கொள்ள தேவையான மனஉறுதியைப் பெற ஆன்மீக சாதனம் ஒன்றுதான் வழி என்பதையும் யாராலும் மறுக்கமுடியாது. பொறாமை சக்திகளின் வெளிப்பாடு அதிகம் சேர்ந்து பாதிப்பை ஏற்படுத்தும் நிலையையே நாம் திருஷ்டி என்று அழைக்கிறோம்.

(தொடரும்)

ஆன்மீகம்

## உண்மையான மகிழ்ச்சி

பாரம்பரிய யூதர்கள் நோன்பு இருக்கிறபோது, தாங்கள் நோன்பு இருப்பது மற்றவர்களுக்கு தெரியவேண்டும் என்பதற்காக, முகத்தில் வெள்ளை பூசிக்கொள்வார்கள். நோன்பு ஒன்றும் அவ்வளவ கடினமான ஒன்று அல்ல தான். காலையில் சூரியன் தோன்றுவதற்கு முன்பிலிருந்து, சூரியன் மறையும்வரை நோன்பு இருப்பது அவ்வளவு கடினமான ஒன்றல்ல. ஆனாலும், நோன்புமூலமாக தங்கள் உடலையே கடவுளுக்கு காணிக்கை அளிப்பதாக, அவர்கள் நம்பினர். நோன்பு இருப்பதையோ, அவற்றில் குற்றம் கண்டுபிடிப்பதிலோ இயேசு குறை காணவில்லை, குறைகாணவும் விரும்பவில்லை.

கிறிஸ்தவ வாழ்வு என்பது நமக்கு துன்பங்களைக்கொடுக்கிற வாழ்வு அல்ல, நம்மை எப்போதும் கஷ்டத்தில் வைத்து பார்க்கவேண்டும் என்ற வாழ்வு. மாறாக, நாம் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்று அழைப்புவிடுக்கின்ற வாழ்வுதான்.

ஆனால், அது உண்மையான, ஆழமான மகிழ்ச்சி. போலித்தனமான மகிழ்ச்சி அல்ல. பரிசேயர்களின் மகிழ்ச்சி சட்டங்களை பிற்போக்காக கடைப்பிடிக்கிற போலித்தனமான மகிழ்ச்சி. இதைத்தான் இயேசு கண்டிக்கிறார். நமது வாழ்வில் மகிழ்ச்சி உண்மையானதாக இருக்கவேண்டும். ஆழமான-தாக இருக்கவேண்டும். போலித்தனமான மகிழ்ச்சியாக இருக்கக்கூடாது. அப்படிப்பட்ட மகிழ்ச்சி வேண்டி இறைவனை மன்றாடுவோம்.

## அல்லாஹ்வின் நல்லடியார்கள்

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள், உங்களை யாராவது அவமானத்துக்குள்ளாக்கினால் உங்களுடைய குறைகளில் எதையேனும் வைத்து உங்களை மானபங்கப்படுத்தினால் நீங்கள் அவருடைய குறைகளை சுட்டிக்காட்டி அவரை மானபங்கப்படுத்த வேண்டாம். ஏனெனில் அவருடைய செயலே அவனை கஷ்டத்துக்குள்ளாக்கப் போதுமானதாகும் என்று.

ஆதாரம்: அபூதாவூத்.

ஆம். இவ்வாறு இறைதூதர் அவர்கள் அறிவுறுத்துவதெல்லாம் நல்லொழுக்கமுள்ள மனிதர்கள் நானிலத்தில் உருவாகவேண்டும் என்பதற்காகவே. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தனக்கு கொடுமை இழைத்தவர்களைக்கூட பெருமனதோடு மன்னித்தார்கள்.

உத்தம நபியின் இந்த உயரிய பண்புகள் எம்மிடையே வரவேண்டும். அப்போதுதான் நாம் அல்லாஹ்வின் நல்லடியார்கள்.

எம்.சி.கலீல், கல்முனை - 05

---

### கவிதைப்போட்டி 1131



• பாராட்டுக்குரியது •

## கனத்துவிட்ட கவலைகள்

முளைத்துவிட்ட இந்த
பிஞ்சுப் பருவங்களோடு
முதிர்ந்துவிட்ட பருவமும்
சேர்ந்துவிட்டபோது
இதன் மனதில்
கனத்துவிட்ட கவலைகளும்
கலைந்து விட்டதோ
கவலைகள் மறந்துவிட்ட
இந்தப் பிள்ளைகள் போல.

யோகன்,
அனுராதபுரம்.




# கவிதைப் போட்டி இல 1134



### காப்பாற்றுவாரா?

உள்ளே இருப்பதோ
கொலை வெறியர்கள்
வெளியில் நிற்பதோ
அப்பாவிக் குழந்தைகள்
இவர்களைக் காப்பாற்றத்
துடிப்பதோ இந்த
வயோதிப மாது
காப்பாற்றுவாரா?

இஷாரா பேகம் ஜெமில்,
கண்டி.

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 21. 09. 2015

கவிதைப் போட்டி இல. 1134 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## குழந்தைத்தனம்

ஓடி ஒளிந்து விளையாடும்
சிறுசுகளோடு இங்கே
கூடி விளையாடுதே - நாளை
அடிவாங்கும் பெரு
இதுதான் வயது - என்பது
முதிர்ந்தவர்களின்
குழந்தைத்தனம் என்பதோ.

இளம்பிறை, அநுராதபுர வீதி.

## பாதிப்பு!

தாத்தா
பேய், பிசாசு என்று
பிஞ்சு உள்ளங்களை
பேதலிக்க வைக்காதே
நாளை ஒரு நாள்
நமக்குத்தான்
பாதிப்பு!

எம்.சி. கலீல்.
கல்முனை - 05.

## சங்கடம்

உள்ளே இருப்போரால்
வெளியில் வரத் துணிவில்லை
வெளியில் இருப்போரால்
உள்ளே செல்லத் துணிவில்லை
அரசியலிலும் திருமணத்திலும்
இதுதான் பெரும் சங்கடம்.

அ.சந்தியாகோ,
கண்டி.

---

# உங்கள் பக்கம்

## அபாயநிலையிலுள்ள பாலங்கள்

கிளிநொச்சி, அக்கராயன் பிரதான வீதியின் புதுமுறிப்பு குளத்துக்கு அண்மித்த பகுதியிலிலுள்ள இரு பாலங்களின் அருகே ஆபத்தான குழிகள் காணப்படுவதால் பெரிய விபத்துக்கள் ஏற்படும் அபாயநிலை காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி, புதுமுறிப்பு ஊடாக அக்கராயன் செல்லும் பிரதான வீதியின் புதுமுறிப்புச்சந்திக்கு அண்மித்த பாலத்தின் அருகே பாரிய குழி காணப்படுவதுடன், வீதியும் மிக ஒடுங்கியதாகவே காணப்படுகின்றது.

மிக ஆபத்தான நிலையில் குறித்த பகுதி காணப்படுவதனால், இதன் ஊடாகப் பயணிக்கும் வாகனங்களும் பொதுமக்களும் பெரும் விபத்துக்களை எதிர்கொள்ளும் நிலைகள் காணப்படுகின்றன. அத்துடன், இதற்கருகிலுள்ள மற்றுமொரு பாலமும் மிக ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது. இதனால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றது.

ஆகவே, இந்தப்பகுதி மக்கள் மீள்குடியேறி ஐந்து வருடங்களுக்கு மேலாகியும் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும் இந்த வீதிகள் இதுவரை புனரமைக்கப்படாமல் உள்ளது. இவ்வாறான வீதிகளைப் புனரமைத்துத்தருமாறு உங்கள் பக்கமூடாகக் கோரிக்கை விடுக்கின்றோம்.

ம.சோதிநாதன், அக்கராயன்குளம்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்: (E-mail):-
thinamurasu@live.com

---

# வாசகர்சாலை

## வாசகன் கவலை!

தினமுரசு தினப்பதிப்பு வராது என அறிந்தவுடன் கவலைப்பட்டேன். வாரமலரும் ஒருவாரம் வரவில்லை. பின்பு அடுத்தவாரம் அது வெளியாகி இருந்தது. அதையிட்டே நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். முரசு கொஞ்சம் வித்தியாசமாக வெளிவந்துள்ளது. முரசு எப்போதும் நிற்கவே கூடாது.

என்.கவி, வவுனியா.

## ஏமாற்றிவிட்டாய்!

முரசு, சூடு சுவை, சுவாரசியம் குன்றாமல் வந்துகொண்டு இருக்கின்றது. சென்றவாரம் இடிஅமீன் தொடரைக் காணவில்லையே. முரசு எங்களை ஏன் ஏமாற்றிவிட்டாய். இனி ஏமாற்றமாட்டாய் என நினைக்கின்றேன்.

மீண்டும் இடி அமீன் தொடர் வெளிவரவேண்டுமெனக் முரசை வினயமாகக் கேட்டுக்கொள்ளும் வாசகன்.

எம்.ராகவன், மன்னார்.

## நிறைவேற்றுவாயாக...

**வணக்கம்!** அரசியல் தொடங்கி அறிவியல்வரை அனைத்துமே கலக்கு கலக்குகிறது. விளையாட்டு செய்திகள், காதிலை கந்தசாமி, லேடீஸ் ஸ்பெஷல், வெளிநாட்டுக் கட்டுரை என்பவை பிரமாதமாக உள்ளது. முரசில் கட்டுரைமயமாகத்தான் இருக்கிறது. அதன் அளவை குறைக்கவேண்டும். வாசகர்களின் ஆசைகளை முரசு நிறைவேற்றுவாயா?

ஆர்.சாஜிரா, யாழ்ப்பாணம்.

### செப்ரெம்பர் - 10




செயல் சிறிதோ பெரிதோ, தம்மால் செய்யக்கூடியவற்றைச் சலிப்பின்றி செய்பவரே போற்றுதற்குரியவர்.

சிசரோ

# கிராமிய பொருளாதாரம் முன்னேற்றமடைவது அவசியம்

**ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா**



**வடபகுதியிலுள்ள தரிசு நிலங்கள் பயிர்செய் நிலங்களாக மாற்றப்படுவதன் ஊடாகவும், கால்நடை வளர்ப்பை முன்னெடுப்பதன் ஊடாகவுமே கிராமிய பொருளாதாரத்தை முன்னேற்றமடையச் செய்ய முடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், பருவகால மழை தொடங்கவுள்ள நிலையில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடபகுதியில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசு நிலங்களாக காணப்படுகின்றன.

அத்தரிசு நிலங்களின் மண்வளத்தை கருத்தில்கொண்டு அங்கு பயிரிடக்கூடிய தானியம் உள்ளிட்ட பயிர் வகைகளை பயிரிட்டு அதனூடாக அந்நிலங்களை பயிர்செய் நிலங்களாக மாற்றம் பெறச் செய்யவேண்டும்.

அதுமட்டுமன்றி ஆடு, மாடு, கோழி உள்ளிட்ட கால்நடைகளை வளர்ப்பதனூடாக கிடைக்கப் பெறக்கூடிய நன்மைகளை கருத்தில் கொண்டு அவற்றை வளர்ப்பதற்கும் அவற்றினூடாக சுய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் மக்கள் முன்வரவேண்டும். குறிப்பாக பயிரச்செய்கைகளில் ஈடுபடும்போது நல்லினங்களை பயிரிடுவது மட்டுமன்றி மக்களின் நல்வாழ்வை பாதுகாக்கும் பொருட்டு செயற்கை உரம் மற்றும் கிருமிநாசினி வகைகளை பாவிக்க வேண்டும் என்பதுடன் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புக்கள் தொடர்பிலும் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்று தெரிவித்த டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கால்நடை வளர்ப்பிலும் பின்பற்றக் கூடியதான வழிமுறைகள் தொடர்பிலும் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார். இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கும் பட்சத்திலேயே தனிநபர் பொருளாதாரம் மட்டுமன்றி கிராமிய பொருளாதாரத்தையும் சிறப்பான முறையில் முன்னேற்றம் காண செய்யமுடியும்.

அந்தவகையில் மக்கள் தமக்கான வாழ்வாதார மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்தி முன்னேற்றம் அடைய செய்யும் வகையில் சந்தர்ப்பங்களை உருவாக்குவது மட்டுமன்றி கிடைக்கப்பெற்ற, பெறுகின்ற வாய்ப்புகளையும் உரிய முறையில் பயன்படுத்தி முன்னேற்றம் காணவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகுமென்றும் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சுட்டிக் காட்டினார்.

## தலைமன்னார்-இராமேஸ்வரம் தரைவழி பாலம் குறித்து ஆலோசனை

இலங்கையின் தலைமன்னாரையும், தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்தையும் தரைவழியாக இணைக்கும் பாலத்தை அமைக்கும் திட்டம் தொடர்பாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பொருளாதார நிபுணர்கள் மற்றும் துறைசார் வல்லுனர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவின் பொருளாதார நிலையை மேம்படுத்துவது தொடர்பாக, பாரிய தொழில் நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள், வங்கிகளின் அதிகாரிகள், பொருளாதார நிபுணர்கள், அமைச்சர்களுடன் முக்கிய ஆலோசனை ஒன்றை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில், தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் தரைவழி இணைப்பு பாலத்தை அமைப்பது தொடர்பாக முன்மொழியப்பட்டுள்ள திட்டம் தொடர்பாகவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பொருளாதார வல்லுனர்களுடன் கலந்துரையாடியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, எதிர்வரும் 14ஆம் திகதி இந்தியாவுக்கு தனது முதல் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், எதிர்வரும் 15ஆம் திகதி நடத்தவுள்ள பேச்சுக்களின் போதும், இந்த தரைவழிப்பாதை திட்டம் குறித்து இந்தியப் பிரதமர் பேச்சு நடத்தவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அதிகரித்த அகதிகளால் திணறும் ஐரோப்பா

பெரும் எண்ணிக்கையிலான அகதிகள் ஜேர்மனியின் எல்லையைக் கடந்து பயணிப்பதால் ஐரோப்பா பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. இந்த ஆண்டு 8 இலட்சம் அகதிகளை தமது நாட்டை வந்தடைவார்களென எதிர்பார்ப்பதாக ஜேர்மனி தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தைவிட இருமடங்கிற்கும் அதிகமாக அகதிகள் தம்நாட்டை வந்தடைவார்களென எதிர்பார்ப்பதாகவும் ஜேர்மனி குறிப்பிட்டுள்ளது.

அகதிகள் தொடர்பான பிரச்சினைகளைச் சமாளிக்கும் ஐரோப்பிய யூனியனில் முன்னணி நாடாக ஜேர்மனி விளங்குகின்றது. தமது நாட்டால் முடிந்தளவு உதவிகளை அகதிகளுக்கு வழங்கிவருகின்றது.

ஜேர்மனியின் வடமேற்கு மாநிலமான ரோவர் சாக்சனியில் அகதிகள் வந்தடைந்துள்ளதோடு, தம்மைப் பதிவு செய்துகொள்வதற்காக நீண்ட வரிசையில் காத்திருப்பதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முகாம்களில் தங்கியிருக்கும் அகதி மக்களுக்கு உணவு மற்றும் குடிநீர் போன்றவற்றை உள்ளூர் தொண்டு நிறுவனத்தினர் வழங்கிவருகின்றனர்.

கடந்த பல தசாப்தங்களில் தற்போதைய அதிகரித்த அகதிகளின் வருகை ஐரோப்பிய யூனியனுக்கு பாரிய நெருக்கடியை அளித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. மேலும் ஐரோப்பிய யூனியனின் உறுப்பு நாடுகளான ஜேர்மனி மற்றும் சுவீடன் ஆகியவை ஐரோப்பாவிற்கு வரும் அதிகளவிலான அகதிகளை உள்ளெடுத்து அவர்களுக்கான வசதிகளை செய்து கொடுப்பதில் பாரிய சவால்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சிக்கியது வெளிநாட்டு நாணயத்தாள்கள்

ரூபாய் 27இலட்சத்து 98 ஆயிரத்து 618 ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்களை தன்னுடைய பயணப்பையில் மறைத்துவைத்து கொண்டு டுபாய் நோக்கி செல்வதற்கு வருகைதந்த தெமட்டக்கொடையைச் சேர்ந்த 36 வயதான ஒருவரை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்துள்ளதாக சுங்கப்பிரிவினர் அறிவித்துள்ளார்.

## சீனி மற்றும் கிழங்கிற்கான வரி அதிகரிப்பு

இறக்குமதி செய்யப்படும் சீனி மற்றும் கிழங்கிற்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி 1 கிலோ கிராம் சீனி 12 ரூபாவினாலும் 1 கிலோ கிராம் கிழங்கு 10 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சீனியின் சந்தை விலைகளில மாற்றம் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் உற்பத்திகளை ஊக்கப்படுத்தும் வகையில் இறக்குமதி செய்யப்படும் கிழங்குகளின் வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

## வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் பொறுப்பேற்றார்

நாடாளுமன்ற புனரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளராக நியமனம் பெற்ற டபிள்யூ.எம்.வீ.நாரம்பனாவ தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

அமைச்சின் காரியாலயத்தில் அவர் நேற்று(09) கடமைகளை பொறுப்பேற்றார். இதன்போது, அமைச்சின் மேலதிக செயலாளர்களான கே.டபிள்யூ.டி.என். அமரதுங்க (அரசு), பீ.கே.எஸ்.ரவீந்திர (மேம்பாட்டு திட்டமிடல்) மற்றும் அமைச்சின் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டு இருந்தனர்.

தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள 44 அமைச்சுக்களுக்கான செயலாளர்கள், முன்னரே நியமிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜெனீவா செல்ல அனுமதிக்காவிடின் பதவி துறப்பேன்! - எச்சரிக்கிறார் அனந்தி

ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமர்வில் கலந்துகொள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு அனுமதியளிக்காவிட்டால் பதவி துறக்கப் போவதாக அக்கட்சியின் வட மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் எச்சரித்துள்ளார். ஐ. நா. மனித உரிமைகள் பேரவை அமர்வில் தமிழ் தேசியக கூட்டமைப்பு கலந்துகொள்வது பற்றி இன்னமும் முடிவெடுக்கவில்லை என அறிவித்துள்ளது.

ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமர்வில்கலந்து கொள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு அனுமதியளிக்காவிட்டால் பதவி துறக்கப்போவதாக அக்கட்சியின் வட மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் எச்சரித்துள்ளார். ஐ. நா. மனித உரிமைகள் பேரவை அமர்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொள்வது பற்றி இன்னமும் முடிவெடுக்கவில்லை என அறிவித்துள்ளது.

வட மாகாணசபை சார்பாக உறுப்பினர்கள் ஜெனிவா கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாதெனவும், தனிப்பட்ட முறையில் வேண்டுமானால் அங்கு செல்ல முடியும் என்றும் வடமாகாணசபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஏற்கனவே தெரிவித்திருந்தார். இந்த நிலையில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான அனந்தி சசிதரன், சிவாஜிலிங்கம் ஆகியோர் ஜெனீவாவுக்கு செல்ல தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள அனந்தி சசிதரன், வடக்கு மாகாணசபை அவைத் தலைவரின் இந்த கருத்து மன வேதனை அளிக்கின்றது. நான் ஒரு பாதிக்கப்பட்ட பெண்ணாகவும் சமூக ஆர்வலராகவுமே ஜெனீவா மாநாட்டில் கலந்துகொள்ள செல்கின்றேன். ஜெனீவா அமர்விற்கு செல்வது குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இறுதி நிலைப்பாட்டை கட்சியின்உயர்பீடம் அறிவிக்க வேண்டும். எனினும் மனித உரிமைகள் மாநாட்டில் கலந்து கொள்ளச் செல்வதற்கான அனுமதியை கட்சியின் தலைமைப்பீடம் மறுத்தால் பதவியை இராஜினாமா செய்வேன் என்றும் கூறினார்.

## யாழ்ப்பாணத்தில் 43 இடம்பெயர்ந்தோர் முகாம்கள்

இலங்கையில் போர் முடிந்து ஆறு ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னரும், அங்கு வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் இன்னும் இடம்பெயர்ந்த நிலையிலேயே வாழ்ந்துவருவதாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் தெரிவித்துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் இடம்பெயர்ந்தவர்களின் 43 முகாம்கள் இருப்பதாக தாங்கள் நடத்திய ஆய்வில் தெரியவந்திருப்பதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

1500 குடும்பங்களைச் சேர்ந்த 6000 பேர் வரையில் இந்த முகாம்களில் வாழ்ந்துவருவதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் எந்தவொரு இடம்பெயர்ந்தோர் முகாம்களும் இல்லை என்று மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அரசாங்கம் கூறிவந்ததாகவும், ஆனால் தாங்கள் நடத்தியுள்ள ஆய்வில் அதற்கு மாறான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகவும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு-கிழக்கு இணைப்பதிகாரி அந்தனி ஜேசுதாஸன் கூறினார்.

நாட்டில் இன்னும் இடம்பெயர்ந்தோருக்கான முகாம்கள் இருப்பதை புதிய அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளபோதிலும், அந்த முகாம்களில் வாழும் மக்கள் பல ஆண்டுகளாக அடிப்படை வசதிகள் இல்லாமல் அவதிப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தினமுரசு
த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## யார்? தேசியக் கோமாளிகள்

சர்வதேச நீதிமன்ற விசாரணை வேண்டுமென்று மாவை சேனாதிராசா கூறுகின்றார். சர்வதேச தலையீட்டோடு விசாரணை வேண்டும் என்றும் அதுவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்று சுமந்திரன் கூறுகின்றார்.

இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றத்திலும், மனித உரிமை மீறல்களிலும் பாதிக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் சர்வதேச விசாரணை ஒன்றை கோருவதற்கு தமிழர்களுக்கு உரிமை உண்டு என்று சம்மந்தர் கூறுகின்றார்.

இலங்கையில் நடைபெற்றதை ஒரு இன அழிப்பாக ஒப்பானதென சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு குழு வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றிவிட்டு அதன் பிரதிகளோடு ஐ.நா முன்றலுக்குச் செல்லப்போகின்றோம் என்று கூறிக் கொண்டிருக்கின்றது.

உள்நாட்டு விசாரணைகளில் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்காது. ஆகவே வெளிநாட்டு விசாரணையே வேண்டும் என்று கூட்டமைப்பின் எம்.பி. சிறிதரன் கூறுகின்றார்.

சுர்வதேச விசாரணைகளை அரசு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. சர்வதேச நம்பிக்கை பெற்றுக்கொள்ளும் விதமான உள்ளக விசாரணையை இலங்கை அரசு நடத்தும் என்று இலங்கை பிரதமர் ரணில் விக்ரம சிங்க திட்டவட்டமாக கூறியிருக்கின்றார்.

பிரதமரின் நிலைப்பாடும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியதாக வெளியாகிய கருத்தும் ஒரே அர்த்த முடையதாக இருப்பதை புரிந்து கொள்ளமுடிகின்றது.

இலங்கையின் உள்ளக விசாரணை பொறிமுறையை ஆதரிக்கும் தீர்மான மொன்றை இம்மாதம் தொடங்கவிருக்கும் மனித உரிமைகள் மகாநாட்டில் கொண்டுவரவுள்ளதாக இலங்கையின் சர்வதேசமான அமெரிக்கா ஏற்கெனவே கூறிவிட்டது.

அமெரிக்காவுக்கும். இலங்கை அரசுக்கும் தமிழர்களின் கோரிக்கைகள் தொடர்பில் அக்கறை கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இவ்விருவரையும் தடுக்கவோ, தண்டிக்கவோ போதுமான பலம் தமிழ் மக்களுக்கும் இல்லை.


ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்களின் கோரிக்கைக்கும், உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கவேண்டிய பொறுப்பு அவர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் கூட்டமைப்புக்கு உண்டு.

ஆனால் கூட்டமைப்பினரோ இந்த விடயத்தில் ஒருமித்த தீர்மானத்துக்கு வராமல் ஆளுக்கொரு திசையில் நின்றுகொண்டு தங்களது பார்வையாளர்களுக்கு ஏற்றவிதமாக ஆளுக்கொரு கதையை கூறிக்கொண்டு இருக்கின்றார்கள்.

இது தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகமாகும். அமெரிக்காவின் மனங்கோணாமலும், இலங்கை அரசின் மனங்கோணாமலும் இருக்கவேண்டுமென்பதற்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை தமக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு கொடுப்பதாக இல்லை. தமிழ்த் தேசியத்தின் பெயரால் தொடர்ச்சியாக தமிழ் மக்களை கூட்டமைப்பினர் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# எதிர்க்கட்சித் தலைமை?



தேர்தல் வேளைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்குகளை சேகரித்துக் கொடுப்பதற்காக வலிந்து ஆதரவு கட்டுரைகளையும், செய்திகளையும் எழுதுவோர் இப்போது மீண்டும் கூட்டமைப்பை விமர்சிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

இப்போதே கூட்டமைப்பை பாது காப்பதற்காக முன்னர் பாடுபட்டதைப் போல், இப்போது கூட்டமைப்பை சரி யான பாதையில் வழிநடத்துவதும், அவர்களது தவறுகளை சுட்டிக் காட்டுவதும் தமது நோக்கம் என்று தமது வியாபார தந்திரோபாயத்துக்கு ஒரு வியாக்கியானத்தையும் முன்வைக்கின்றனர்.

ஆனால் கூட்டமைப்பின் மூக்கணாங்கயிறு இந்த எழுத்தாளர் களிடமோ, கூட்டமைப்பின் மூக்கணாங்கயிறைப் பிடித்துக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் மனநோயாளி களிடமோ இல்லை என்பதை சம்மந்தன் குழுவினரின் செயற்பாடுகள் வெளிப்படுத்துகின்றன.

கூட்டமைப்பு ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக .இருக்கும் என்று கூறியது. இப்போது ஆளுங் கட்சியின் எதிர்க்கட்சியாகி தமிழ் மக்களுக்கு முதல் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

ஜனாதிபதியாக மைத்திரிபால்வும், பிரதமராக ரணில் விக்ரமசிங்கவும், வடக்கு, கிழக்கில் பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களை கூட்டமைப்பும் கொண்டிருக்கும் சூழல் ஏற்படுமாக இருந்தால் அடுத்த ஆண்டு ஜூன் மாதத்துக்கு முன்னர் தமிழர்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு தீர்வொன்றை கூட்டமைப்பால் பெற்றுக்கொடுக்க முடியும் என்று கூறினார்கள்.

இப்போதோ தீர்வுபற்றிய பேச்சையே மறந்துவிட்டார்கள். அரசின் பங்காளி யாகவும், எதிர்க்கட்சியாகவும் எப்படி இருக்கமுடியும் என்பதையிட்டு சிந்திப் பதிலும், பதவிகளை கூட்டமைப்பின் பாணியில் கூறினால் அரசின் சலுகை களைப் பெற்றுக்கொண்டதற்காக ஊர் ஊராகச் சென்று வரவேற்புக் களிலும், பூஜை புனஸ்காரங்களிலும் பொன்னாடை போர்த்தி புளகாங் கிதமடைந்து பூரித்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

எதிர்க்கட்சித் த்லைவராகியதற்கு சம்மந்தனுக்கு வரவேற்பும், ஆசி வேண்டிப் பூஜைகளும், அதேபோல் ஆளுங்கட்சி சார்பில் நியமிக்கப்படும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவராக கூட்டமைப்பின் மற்றுமொரு உறுப்பினரான செல்வம் அடைக்கல நாதன் தெரிவுசெய்யப்பட்டதற்கு வரவேற்புமாக கூட்டமைப்பின் சலுகை மயக்கம் தொடர்கின்றது.

அரசாங்கத்துடன் பங்காளியாக ஈ.பி.டி.பி இருந்தபோது அது சலுகை அரசியல் அதையே கூட்டமைப்பு செய்தால் அது தமிழ்த் தேசியத்தின் தந்திரோபாய அரசியல் நன்றாக இருக்கின்றது விளக்கம்.

ஈ.பி.டி.பியாவது அரசுடன் பங்காளி யாக இருக்கும்போது அபிவிருத்தி, வேலைவாய்ப்பு, ஆகியவற்றை வரம்புகளைத் தாண்டியும் முயற்சித்து மக்களுக்குப் பெற்றுக்கொடுத்தது. அரசியல் உரிமைப் பிரச்சினையை குறித்து அரசுக்கு அழுத்தம் கொடுக்கு மளவுக்கு போதுமான அரசியல் பலத்தை பெற்றுக்கொள்ளாதபோதும் தீர்வுக்கான பாதையை சிதைக்கவிடாமல் பாதுகாத்தும் வந்துள்ளது.

ஆனால் கூட்டமைப்பினர் அரசுடன் பங்காளிகளாகவும், அரசுக்கு விருப்பமான எதிர்க்கட்சியாகவும் இருக்கின்றபோதும், மக்களுக்கு நேரடியான நன்மைகள் எவை யும் கிடைக்கவில்லை. முன்னர் வடமாகாண முதலமைச்சர் குறிப்பிட்டதைப்போல் கூட்டமைப்பின் சில உறுப்பினர்கள் அரசுடனான உறவைப் பயன்படுத்தி பெருந்தொகையான பணத்தை பெற்றுக்கொண்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் சுதந்திரக் கட்சி இரண்டு வருட உடன் பாட்டு ஒப்பந்தத்தைச் செய்துள்ள பின்னணியிலேயே இரு கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கமொன்றை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. ஆகையால் தேசிய அரசாங்கமானது இரண்டு வருடங்களுக்கு குழப்பமில்லாமல் இருக்கும்.

ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலுள்ள பங்காளிக் கட்சிகளோ தாம் தேசிய அரசுடன் இணங்கிப்போகவில்லை என்றும், தாம் எதிரணியாகவே எதிர்காலத்தில் செயற்படப் போவதாகவும் ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடவும் கூடுதலான நாடாளுமன்ற உறுப்பினர்களை தாம் கொண்டிருக்கும்போது தாமே எதிர்க் கட்சியாக இருக்கும் அந்தஸ்தைப் பெறுவோம் என்பதை சபாநாயகருக்கு உணர்த்துவோம் என்று கூறியுள்ளனர்.

இந்த நிலையில் எதிர்க்கட்சித் தலைமை என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எத்தனை நாளைக்கு? என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இதற்கிடையே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் அவ்வாறானதொரு நெருக்கடியை ஏற்படுத்தும்போது சட்டப் பிரச்சினைகளும் மேலெழும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதுவரையில் எதிர்க்கட்சித் தலைவ ராக சம்மந்தன் தெரிவாகியுள்ள நிலை யில் அவர் இந்த வாய்ப்பை தமிழ் மக்களின் ஆயுதமாக எவ்வாறு பயன் படுத்தப்போகின்றார் என்பதுதான் பிரதான கேள்வியாகும்.

சம்மந்தன் எதிர்க்கட்சித் தலைவராகி இருப்பதை மலையக தமிழ் மக்களும், சகோதர முஸ்லிம் மக்களும் வரவேற்றுள்ளனர். இந்த வரவேற்புக்களின் உள்ளர்த்தமானது, சம்மந்தன் தமிழ், முஸ்லிம் மக்களின் குறிப்பாக சிறுபான்மை மக்களின் உணர்வுகளையும், அபிலாஷைகளையும், உரிமைகளையும் பாதுகாப்பதற்காகவும், அதை தடையின்றி பெற்றுக்கொடுப்பதற்கான குரலாகவும் செயற்படுவார் என்பதாகும்.

அதேவேளை எதிர்க்கட்சித் தலைவ ராக சம்மந்தன் இருக்கும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி மூன்று தசாப் தங்களுக்கும் மேலாக சிதைக்கப் பட்டிருக்கும் இனங்களுக்கிடையிலான நம்பிக்கையும், நல்லிணக்கத்தையும் மீண்டும் ஏற்படுத்த முயற்சிக்கவேண்டும் என்பதும், பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமை அபிலாசைகளை, உரிமைக் கோரிக்கையின் நியாயத்தை தெளிவுபடுத்தவும் பாடுபடவேண்டும் என்பதும் முதன்மை எதிர்பார்ப்பாகும்.

சம்மந்தனுக்கு எதிர்க்கட்சித் த்லைமையை வழங்கியதன் ஊடாக அரசுக்கு சில நோக்கங்கள் இருக் கின்றன. அதாவது, இலங்கையில் இன நல்லிணக்கத்துக்கான முயற்சிகளை நம்பிக்கையான வகையில் அரசு ஆரம்பித்துள்ளது என்ற செய்தியை முதலில் ஏற்படுத்துவது.


போர்க்குற்ற விசாரணைகள், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சர்வதேச சமூகம் கொண்டி ருக்கும் அழுத்தங்களிலிருந்து விலகி யிருப்பதற்கு, மேற்படி குற்றச்சாட்டுக் களில் நேரடியாக பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பை மௌனிக்கச் செய்வதன் ஊடாக அழுத்தங்களிலிருந்து விடுபடு வதுமாகும் என்று விமர்சிக்கப்படு கின்றது.

இந்த விமர்சனங்களை உண்மை யாக்கும் பிரதிபலிப்புக்களையே இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களில் உள்ளக விசாரணை எதிர்க்கும் மற்றும் ஆதரிக்கும் கூட்டமைப்பின் முரண்பாட்டுக் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

இதற்கிடையே எதிர்க்கட்சித் தலைவராகியிருக்கும் சம்மந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்பதை விட்டுவிலகி தர்மசங்கடமில்லாமல் சுதந்திரமாக பணியாற்ற வேண்டும் என்று தமிழரசுக் கட்சியினர் ஒரு கோரிக்கையை முன்வைத்து கூட்டமைப்பின் தலைமைக்கு இலக்கு வைக்கின்றனர்.


அரசாங்கத்தை சங்கடத்துக்குள் தள்ளிவிடும் முன்னெடுப்புக்களை சம்மந்தர் கொண்டிருக்கமாட்டார் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. எப்போதும் சர்வதேச அங்கீகாரம் எனும் போதைக்கு அடிமையான சம்மந்தர் மற்றும் அவரது அணியினர் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியை கனவான் தன்மையோடு முன்னெடுப் பதன் ஊடாகவே தமக்கான அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்ற தந்திரோபாயங் களுக்கே முன்னுரிமை கொடுத்து சிந்திக்கின்றனர்.

இவ்வாறான பல்முனை விமர்சனங்கள், எதிர்பார்ப்புக்கள், அவதானிப்புக்களுக்கு ஈடுகொடுத்து செயற்படுவத்றகு எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவி சம்மந்தருக்கு முட்கிரீடமாகவா? பொற்கிரீடமாகவா? அவரது தளர்ந்து போன தலையில் அழுத்தப்போகின்றது என்பதுதான் கேள்வியாக இருக்கின்றது.



# சிறுகதையும் புதுமைப் பித்தனும்





திரு. பா. பாலகணேசன் M.A
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசியக் கல்வியற் கல்லூரி

புதுமைப்பித்தனது கதை சொல்லும்பாங்கில், பொருள்சார்ந்த மீறலுக்கான ஒரு வாய்ப்பை, வாசகர் மனம் எதிர்நோக்கிக்கொண்டே இருக்கும். பல இடங்களில் அது அதிர்ச்சிதருவதாயும் அமைகின்றது. பாத்திரங்களின் மாறுபட்ட படைப்புக் கள். நெல்லைசார்ந்த ஆசை உலகு. சென்னை சார்ந்த படைப்பாக அமைகின்றது. அவரின் கதைகள் மண் வாசனை அம்சங்களான டிராமின் கனகனப்பு, மோட்டாரின் ஓலம், பாங்கின் ஓசை, நெல்லையில் தாமிரபரணி, சென்னையில் கூவம் என்பவற்றைச் சித்தரிக்கின்றன.

உலக யுத்தம், அவை தொடர்பான படைப்புகள், விபச்சாரக் கொடுமை ஆகியன நிறைந்த காலப்பகுதி. புதுமைப்பித்தன் காலப்பகுதியாகும். குத்தலும் கிண்டலுமான அவரது சொல்முறைகள்மூலம், வாழ்க்கையின் அவலங்களைக் கதைக்குள் அடக்கி வாசகரின் தார்மீக ரோசத்தைத் தூண்டும் வகையில் கதையைச் செலுத்தித் தனக்கு அதிர்ச்சியும் ஏமாற்றமும் தந்த அனுபவங்களை, படைப்புக்குள் கொண்டுவருவார். சிறுகதைமூலம் மிக ரோசத்தை ஏற்படுத்தக் கூடியவர்.

பெண்கள் தொடர்பான அவரது பார்வை: பெண்கள் இக்கட்டில் தள்ளிவிடப்படுகிறவர் களாகப் பார்க்கின்றார். பெண்களின் தத்தளிப்பையும் உணர்வுகளையும் முழுமையாக ஏற்று, அவற்றிற்கு முழுமையான அர்த்தம் தருகின்றார். ஆண்களின் ஆதரவு தரும் நம்பிக்கை யைப் பெறாமல், தனிமையில் பரித விப்பது போன்ற சித்திரம் வாசகன் மனதில் உருவாகும். பொதுவாக எல்லாப் பெண் கதாபாத்திரங்களும், உணர்ச்சியின் வேகத்தில், தங்களின் இயற்கை, தாய்மைசார்ந்து, பாலியல் உறவுசார்ந்து, குழந்தைகள்சார்ந்து, பிற ஆசைகள் சார்ந்து வாழ்க்கையை எதிர்கொள்கின்றார்கள். ஒருத்திகூட, வாழ்க்கை சார்ந்த பேராசை கொண்ட வராக இல்லாமல் அப்பாவிப்பெண்ணாக கதைகளில் சித்தரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இதனால், புதுமைப்பித்தன், வாசகன் மனதில் நுட்பமான, ஆனால் வலிமையான அதிர்வுகளை எழுப்பி, அவர்களது அனுபவங்களை எல்லை யற்று விரித்துக்கொண்டு போவது, அவரது நோக்கமாகும். அவரது படைப்புக்களில் சிக்கலானவை எனும் போது, அவை, அவரது தத்துவவிசாரம், மனித வாழ்வு பற்றியும் இலக்கியம் பற்றியும் அவர் கொண்டிருந்த விபரீத மான கருத்துக்கள், மனிதகுலம் முன்னேறும் என்பதில் நம்பிக்கை யின்மை, படைப்புக்களில் நம்பிக்கை வரட்சி, கதாபாத்திரங்களின் தோல்வியை, வீழ்ச்சியைப் படம் பிடித்துக் காட்டுதல். (அவருடைய கதாபாத்திரங்கள் வாழ்க்கையை எதிர்த்துப் போராட வில்லை.) வாழ்க்கையில் இருந்து தப்பி ஓடுதல் ஏங்கிப்பெருமூச்சுவிடல். அவரது பிடிவாதமான இலக்கிய கண்ணோட்டம் என்னவாகும். "வாழ்க்கையைப் பார்த்து எழுதுவேன். ஆனால் வாழ்வின் இருண்ட பகுதிகளையும் வரண்ட உள்ளங்களையும் இலக்கிய சிருஸ்டியாக்குவதே என் குறிக்கோள் என்பார் புதுமைப்பித்தன்.

அவரது படைப்புக்களில் கலையம்சம், ஜீவத்துடிப்புக் காணப்பட்டாலும் மேற் கூறிய விமர்சனத்தையும் மறுக்க முடியாது. இத்தனை விமர்சனத்துக்கு மத்தியிலும், இலக்கியத்தை செழுமைப் படுத்தல், உலக சிந்தனையுடன் ஒப்பு நோக்க வைத்தல், முதலாளித்துவத்தின் கொடுமையையும் நிலப்பிரபுத்துவத்தின் அநாகரிகத்தையும் எடுத்தோதல், அநீதியின் விரோதம், அற்பத்தினத்தின் எதிர்ப்பு, மக்கள்மயமான மனிதாபிமான இலக்கியப்போக்கு, ஜனநாயகப் போக்கு என்பன அவரது படைப்புக்களை இன்னும் இலக்கிய உலகில் வாழ வைத்துக் கொண்டிருக்கின்றன என்று கூறினால் அதில் மிகையில்லை.

"இவை யாவும் கலையுலகத்திற்கு என்று கங்கணம் கட்டிக்கொண்டு செய்த சேவை அல்ல. உலகை உய்விக்கும் நோக்கமோ, கலையைச் செழிக்கச் செய்யும் நோக்கமோ, எனக்கோ, என் கதைகளுக்கோ சற்றும் கிடையாது." எனக் கூறும் புதுமைப்பித்தன். "பொதுவாக என்னுடைய கதைகள், உலகத்துக்கு உபதேசம் பண்ணி உய்விக்க ஏற்பாடுசெய்யும் ஸ்தாபனம் அல்ல. பிற்கால நல்வாழ்வுக்கு சௌகரியம் பண்ணிவைக்கும் ஏற்பாடுமல்ல". எனக் காஞ்சனா முன்னுரையில் புதுமைப்பித்தன்கூறி இருப்பது, மேற்படி எனது விமர்சனத் துக்கு துணையாக அமைந்துள்ளது. நம்பிக்கை வரட்சியே என் கதைகளில் முக்கியம் எனக்கூறும் அவர் அதையே தனது சிறுகதைகளின் விமர்சனமாக வும் கொண்டவர். நூறு நூறு மொழி பெயர்ப்புக் கதைகள், சில கவிதைகள், பல திறனாய்வுக் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள், ஒன்றிரண்டு ஓரங்க நாடகங்கள், முழுமை பெறாத ஒன்றிரண்டு நாவல்கள், நெடுங்கதை கள் என புதுமைப்பித்தன் படைப்புக்கள் நீண்டாலும், சிறுகதையே அவர்க்கென தனிமுத்திரை அளித்தது.

படைப்பிலக்கியம் எனும் அடிப்படை யில், சிறுகதையையே முதன்மையான துறையாகக்கொண்டார். காந்தியும், மணிக்கொடியும் அவரின் தொடக்க முயற்சிக்குத் தீனிபோட்டன. ஆரம்ப காலச் சிறுகதைகள் இலக்கணத்தை மீறின. அவரின் கதைகளில் துன்பக் கேணி, சாபவிமோசனம், கயிற்றினளவு, நினைவுப் பாதை, செல்லம்மாள், பிரம்மராஸஸ், அன்று இரவு என்பன சாதனைகளும் சோதனைகளும் நிறைந்தவை.

அவருடைய துன்பக்கேணி உரை நடையில் எழுதப்பட்ட குறுங்காவியம் போன்றது. மனித வாழ்வின் அவலத்தை யும், அற்பத்தனத்தையும், தாமதமாகச் சமுதாய நீதிக்கென்று வகுத்த நியதி யிலே, சிக்கித்தவிக்கும் மாந்தர்களை யும், சுயநல மனப்பான்மையையும் மனம்பொருமலுடன் காட்டுகின்றார். இலங்கைத் தேயிலைத் தோட்டங்களில், பிழைப்பைத் தேடிச் சென்ற ஆயிர மாயிரம் தமிழ் மக்களின் அவல வாழ்வை உரைநடையில் காட்டியுள்ளார். காலநீட்சியும், சம்பவக் கோவைகளும் கதை மாந்தர் தம்முடைய முடிவுகளைக் கதையிறுதியில் கூறுகின்ற உத்தியும் குறுநாவல் வடிவத்தில் அமைந்தாலும், ஒரு பிரச்சினையை மையமாக வைத்தே இவை அனைத்தும் சுழல்வதால், சிறுகதைக்குரிய வடிவமும் முழுமையும் இக்கதைக்கு வந்துவிடுகின்றன.

"வாசவன் பட்டியும், மாருதி, வெள்ளையன், வெள்ளைச்சி, கங்காணி, சுப்பன், குதிரைக்காரச்சின்னான், ஸ்டோர் மனேஜர், முதலிய கதைமாந்தர்களும், ஒருமுறை படித்தால்கூட நினைவுக்கு வரும் பாத்திரங்கள் ஆகின்றனர். இவர்களுடைய சோகக்குரல் சொந்தத் துன்பங்களை மட்டும் பிரதிபலிக்காமல் முழு மனிதகுலத்தையுமே ஓலமிட வைக்கின்றது.

சாபவிமோசனம் மற்றொரு சிறந்த படைப்பு. சாலையில் கற்சிலை எனத் தொடங்கும்போது கதைக்கருவின் வலுவை வாசகனுக்கு அளித்து விடுகின்றது. இதிகாசத்தில் முடிந்து போன கதைக்கு, மனித உளவியலின் படி புதுமையை அளித்து, உணர்வூட்டி உள்ளது குறிப்பிடத்தக்கது. சாபத்தினால் விமோசனம் கிடைத்தாலும், சாபம் பெற்ற மனசில் இருந்து விடுதலை பெறாத அகலிகையின் தவிப்பு, சாபமளித்த கௌதமரின் கழிவிரக்கம் கதையின் உயிரோட்டமான பகுதி ஆகும். இந்த நிலையில், முடிவையும் முன்வைக்கும் நேர்மையான மனப் பாங்கு, புதுமைப்பித்தனின் கதைகளில் சிறப்பம்சம். அத்துடன் அறியாமல் நடந்ததாக இருந்தாலும், நடந்துவிட்ட ஒரு பிழை மனதில் எப்படிக் குடைந்து கொண்டு இருக்கும் என்பதை எடுத்துக் காட்ட இராமன் சீதைக்கதையுடன் தொடர்புபடுத்துவது குறிப்பிடத்தக்கது. அக்கினிப்பரீட்சையைச், சீதைக்குக் களங்கம் கற்பிக்கும் இராமனின் அப்பழுக்கற்ற போக்கிரித்தனமாகக் காட்டுவது, பெண்கள் பற்றி புதுமைப் பித்தன் கொண்ட விசாலமான பார்வையாகவும் அமைந்துவிடுகின்றது. அக்கினிப் பரீட்சை விடயத்தைச் சீதை மூலமாக அறியும் அகலிகை, மீண்டும் கல்லாகும் காட்சி, ஆண், பெண் தொடர்பாக அவர்கொண்ட ஆழமான பார்வையையும், அவர் களது உறவுநிலை தொடர்பான அவரது பார்வையும் பட்டவர்த்தனமாக வெளிக்கொணர்கிறது. "உள்ளத் தூய்மையுள்ள உறவே மனித வாழ்வின் அடிநாதம் என்பதை சாபவிமோசனத்தின் அடிநாதமாக்கு கின்றார். மொழிநடை அத்தகைய உணர்வுகளையெல்லாம் அள்ளிச் சொரியுமாறு படைத்திருப்பது, அக்கதைமூலம் முழுமையான உலகத்தை தரிசிக்கவைக்கின்றது. வாசகனுக்கு வாசிப்பதைக் காட்டிலும் கற்பனையான ஏனைய அனுபவங்களே, அவளை, அவனைக் கதைமாந்தர்களுடன் ஜீவிக்க வைக்கின்றது. வாசகனுக்குள் அது சுயவிமர்சனத்தை உண்டு பண்ணி விடுகின்றது. நிச்சயம், பழைமை, புதுமை என்ற சொற்களுக்கு அப்பால், இராமாயணம் பற்றி இப்புதிய பார்வை ஒரு இலக்கிய ரசனையை ஏற்படுத்தியிருக்கும்.

இவ்வாறு அவர் படைப்புக்கள் பற்றி பல விமர்சனங்களைக் கூறிக்கொண்டே போகலாம். ஆனால் விமர்சனங்களாள்கூடப் புதுமைப் பித்தனை மாற்ற முடியவில்லை என்பதுகூட, அவரது தனித்துவத்தையே சிறுகதை உலகிலே எடுத்துக் காட்டுகின்றது.

விமர்சகர்களுக்கு ஒரு வார்த்தை: வேதாந்திகள் கைக்குள் சிக்காத கடவுள் மாதிரிதான், நான் பிறப்பித்துவிட்டவைகளும், அவை உங்கள் அளவுகோல்களுக்குள் அடைபடாதிருந்தால், நானும் பொறுப்பாளியல்ல: நான் பிறப்பித்து விளையாடவிட்டுள்ள ஜீவராசிகளும் பொறுப்பாளிகள் அல்ல. உங்கள் அளவுகோள்களைத்தான் என் கதை களின் அருகில் வைத்துக்கொண்டு பார்த்துக் கொள்ளுகின்றீர்கள் என்று உங்களுக்குச் சொல்லிவிட விரும்புகின்றேன்" என்ற விமர்சகர் களுக்கான அவரின் கூற்றுக்கள். விமர்சனங்கள் பற்றிய அவர் பார்வையை மேலும் தெளிவாக்கு கின்றது. நாற்பத்திரண்டு வருடங்கள் வாழ்ந்து, தற்பொழுது படைப்புக்கள் மூலமாக வாழ்ந்துகொண்டிருக்கும் அவர் பற்றிய முழுமையான விமர்சனம் இன்னும் வரவில்லை என்றே கூறலாம்.

(முற்றும்)

# நிலமெல்லாம் இரத்தம்



169

பா.ராகவன்

இன்னொரு விஷயத்தையும் சொல்லவேண்டும். இண்டிபதா உக்கிரமாக நடைபெற்றுவந்த காலத்தில் மொத்தம் சுமார் பதினான் காயிரம் அரேபியர்களை இஸ்ரேலியக் காவல்துறை சிறைப்பிடித்து அடைத்துவைத்திருந்தது. ஒஸ்லோ ஒப்பந்தப்படி அரேபியர்களின் தன்னாட்சி உரிமையை அவர்கள் அங்கீகரிப்பது உண்மையென்றால், நல்லுறவின் அடையாளமாக முதலில் அவர் களை விடுவிப்பது குறித்தல்லவா பேசியிருக்கவேண்டும்?

ஒரு சில பலஸ்தீனியன் அத்தாரிடி முக்கியஸ்தர்கள், இந்த அமைதி உடன்படிக்கை, நீண்டநாள் நோக்கில் பலன் தரத்தக்கது என்று பக்கம் பக்கமாகப் பேசியும் எழுதியும் வந்தபோதும், பெரும்பாலான பி.எல்.ஓ.வின் இரண்டாம் நிலைத் தலைவர்களுக்கே இந்த ஏற்பாடு பிடிக்கவில்லை என்பது மிக வெளிப்படையாகத் தெரிந்தது. ஒப்பந்தம் முடிவானவுடனேயே பி.எல்.ஓ.வின் செயற்குழு உறுப்பினர் களான மஹ்மூத் தார்விஷ் என்பவரும் ஷா:.பிக் அல் ஹௌட் என்பவரும் தமது பொறுப்புகளை இராஜினாமா செய்வதாக அறிவித்தார்கள். அவர் களைத் தொடர்ந்து வேறு சில முக்கிய பி.எல்.ஓ. தலைவர்களும் விரைவில் ராஜினாமா செய்யவிருப்ப தாகப் பரபரப்பாகப் பேசப்பட்டது.



ஆனால் அந்தப் பதினான்காயிரம் பேரின் கதி என்னவென்று கடைசி வரை சொல்லவே இல்லை. அரபாத்தும் அது குறித்துக் கேள்வி எழுப்ப வில்லை என்பது மிகவும் உறுத்தலாகவே இருந்துவந்தது.

செப்டம்பர் 9, 1993 அன்று அரபாத் ஒரு பத்திரிகைச் செய்தி வெளியிட்டார். இஸ்ரேலை அங்கீகரித்து வெளியிடப்பட்ட முதல் அறிக்கை அது. ஒட்டுமொத்த பலஸ்தீனியர்களும் மனத்துக்குள் குமுறிக் குமுறித் தணிந்தார்கள். இதனைத் தொடர்ந்துதான் செப்டம்பர் 13ஆம் திகதி வாஷிங்டன் நகரில் பில் க்ளிண்டன் முன்னிலை யில் ஒப்பந்தம் கையெழுத்தானது. காஸாவையும் மேற்குக்கரையின் சில பகுதிகளையும் பலஸ்தீனியன் அத்தாரிடியிடம் ஒப்படைப்பதாக இஸ்ரேலியப் பிரதமர் அறிவித்தார். உடனடியாக பலஸ்தீனியன் அத்தாரிடி யின் தலைவராக யசீர் அரபாத் பி.எல்.ஓ.வினரால் தேர்ந்தெடுக்கப் பட்டார். ரமல்லாவில் இருந்தபடி அவர் ஆட்சிபுரிவார் என்றும் அறிவிக்கப்பட்டது.

இராஜினாமா செய்த மஹ்மூத், ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில், "அரபாத் மிகவும் தன்னிச்சையாக நடந்துகொள்கிறார். பலஸ்தீனுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை அவர் கையாளும் விதம் அச்சமூட்டும்விதத்தில் இருக்கிறது. யாராலுமே கணக்குக் கேட்கவும் முடியவில்லை, எதுவும் வெளிப்படையாகவும் இல்லை" என்று சொன்னார்.

ஆட்சி அதிகாரம் கைக்குவந்த மறுகணமே நிதி விவகாரங்களில் குற்றச்சாட்டு எழுந்ததில் அரபாத் மிகவும் மனம் உடைந்துபோனார். பெரும்பாலான பலஸ்தீனியர்களுக்கு இந்த ஏற்பாடே பிடிக்கவில்லை என்பதிலும் அவருக்கு வருத்தம் தான். அமைதியின் தொடக்கமாக ஒஸ்லோ ஒப்பந்தத்தை அவர் கருதினார்.

(தொடரும்)

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)
யாழ்ப்பாணம்

19



# விடுதலை வீரர்
# நெல்சன் மண்டேலா


**தென்னாபிரிக்காவின் தேசத் தந்தையாக மட்டுமல்லாமல், உலக மக்களின் உள்ளங்கவர் கள்வராகவும் வாழ்ந்து விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை அந்த மக்களுக்கு பெற்றுக்கொடுத்த விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா அவர்களின் வாழ்க்கைப் பாதையை மீண்டுமொரு தடவை புதிய சிந்தனையுடன் மீட்டுப்பார்ப்பது பொருத்தம் என்ற அனேக வாசகர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப புதிய பகுதி தொடங்கப்படுகின்றது. வாசிப்பதோடு மட்டுமல்லாமல் வாசகர்கள் தமது அபிப்பிராயங் களையும் முரசுக்கு அனுப்புங்கள். அதையும் இதே பகுதியில் பிரசுரித்து அனைவரும் மகிழ்ச்சியடைவோம்.**

ஜஸ்டிஸின் நிலைமையும் அவ்வாறு தான் இருந்தது. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் ஜோங்கிந்தாபா மண்டேலாவுக்கு பார்த்திருக்கும் பெண் ஜஸ்டிஸின் காதலி. ஜஸ்டிஸும் அந்த பெண்ணும் ஒருவரையொருவர் மனப்பூர்வமாகக் காதலித்துக் கொண்டிருப்பவர்கள். இந்த விடயம் மண்டேலாவுக்கு ஏற்கனவே தெரியும். ஆனால் ஜோங்கிந்தாபாவுக்கு இவர்களது காதல் பற்றி எதுவுமே தெரியாது.

ஜஸ்டிஸ் உயிருக்குயிராக காதலிக்கும் பெண்ணை எப்படி நான் திருமணம் முடிப்பது என்பதுதான் மண்டேலாவுக்கு பெரும் பிரச்சினையாக இருந்தது. ஜஸ்டிஸும் ஒன்றுமே புரியாமல் வாயடைத்து பேயறைந்தது போல் ஆகிவிட்டான். மண்டேலாதான் அவனுக்கு ஆறுதல் கூறி சமாதானப் படுத்தினான். இருவரும் அடுத்து என்ன செய்வதென்று தீவிரமாக யோசிக்க தொடங்கினார்கள். ஜோங்கிந்தாபா ஒரு முடிவெடுத்துவிட்டால் எக்காரணம் கொண்டும் அதனை மாற்றமாட்டார் என்று இருவருக்கும் தெரியும். அதிலும் இது ஒரு பெரிய முடிவு. நிச்சயமே செய்துவிட்டார்.

தந்தையை நேரடியாக எதிர்த்து போராடமுடியாமல் இருவரும் ஒரு முட்டாள்தனமான ஒரு முடிவுக்கு வந்தனர். அவர்களது முட்டாள்தனமான முடிவுதான் அவர்களது வாழ்க்கைப் பாதையை மாற்றியமைக்கப் போகிறது என்பதை பாவம் அவர்கள் அறியாது இருந்தனர்.

தந்தை ஜோங்கிந்தாபாவின் கண்காணாதபடி ஊரைவிட்டே ஓடி விடுவோம் என்ற கோழைத்தனமான முடிவுக்கு வந்திருந்தனர். இதை விட்டால் வேறுவழியில்லை என்று அவர்கள் நினைத்திருந்தனர். இனி அடுத்து எந்த ஊருக்கு போவது எப்படி போவது என்பது பற்றி யோசிக்கத் தொடங்கினர். அவ்வேளை யில் இவர்களுக்கு சாதகமான ஒரு நிகழ்வு நடந்தது. ஜோங்கிந்தாபா ஒரு வார பயணம் ஒன்றை மேற்கொள்ள போகிறார் என்று செய்தி தெரிய வந்ததும் உஷாரானார்கள். தந்தை ஜோங்கிந்தாபாவை பாசத்தோடு வழியனுப்பி வைத்துவிட்டு தங்கள் காரியத்திற்கு தயாரானார்கள். முதல் விடயமாக அரண்மனை எருது



கள் இரண்டை விற்று பணத்தை பெற்றுக்கொண்டனர். தங்கள் உடைகள் அனைத்தையும் ஒரு பெட்டியில் அடுக்கத் தொடங்கினர். அதன்பின் கார் ஒன்றை வாடகைக்கு பிடித்துக்கொண்டு அருகில் இருக்கும் புகையிரத நிலையத்திற்கு சென்று அங்கே பயணச் சீட்டுக்களை பெற்றுக்கொண்டு ஜொஹன்னர்ஸ் பெர்க் எனும் இடத்திற்கு செல்வோம் என்று திட்டம் போட்டு காரியத்தில் களமிறங்கினர்.

(தொடரும்)



# கிழக்குப் பல்கலைக்கழக காணாமல் போனோர் கதி

**கிழக்கு பல்கலைக் கழக சம்பவத்தில் 25 வருடங்களுக்கு முன்னதாக இராணுவத்தினால் அழைத்துச்செல்லப்பட்டு பின்னர் காணாமல் போயுள்ளவர்களின் உறவினர்களை பொறுத்தவரை காணாமல் போனவர்கள் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கையை தற்போது இழந்திருந்தாலும் தற்போது ஏற்பட்டுள்ள நல்லாட்சி மாற்றத் திலாவது உண்மை நிலை வெளிவர வேண்டும் என உறவினர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.**

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்தவேளை இராணுவ சுற்றிவளைப்பின் பின்னர் காணாமல்போனதாகக் கூறப்படும் 158 தமிழர்களின் 25ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு கடந்த சனிக்கிழமை அன்று பூஜை வழிபாடுகளுடன் உறவினர்களால் நினைவு கூரப்பட்டது.

1990ஆம் ஆண்டு செப்ரெம்பர், 05ஆம் திகதி கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பாதுகாப்பின் நிமித்தம் தஞ்சமடைந்திருந்தவேளையில் சுற்றி வளைப்புச்செய்து விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்ட 158 தமிழ் இளைஞர்களை நினைவுகூர்ந்து பிரார்த்தனை நிகழ்வுகள் இடம்பெற்றன.

ஏறாவூர் 04ஆம் குறிச்சி வரசித்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற விஷேட பூஜை வழிபாடுகளை ஆலய குருக்கள் சிவஸ்ரீ அ.கு.லிகிதராஜசர்மா நடத்தினார்.

அவ்வேளையில் கைதுசெய்யப்பட்டு காணாமல்போனவர்களின் உறவினர்கள் தமது வீடுகளிலும் ஆலயங்களிலும் இந்தப் பிரார்த்தனை நிகழ்வுகளை அனுஷ்டித்தனர். அன்னதானமும் வழங்கப்பட்டது. காணாமல்போனோரின் நினைவாக தென்னை மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன.

இந்த நிகழ்வுகளில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்டனர். கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியை சித்திரலேகா மௌன குரு, சிரேஷ்ட ஆசிரியரும் கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாம் பொறுப் பாளருமாகச் செயற்பட்ட கலாநிதி ரீ.ஜயசிங்கம், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களான அமரா ஹப்புவாராச்சி, சரளா ஆனந்த் உட்பட இன்னும் பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட யுத்த நிலைமையை அடுத்து 1990ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக் கழகத்தில் அகதி முகாமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த அகதி முகாமில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 45 ஆயிரம் தமிழர்கள் தஞ்சமடைந்து இருந்ததாக அந்நேரம் அந்த முகாமை நிருவகித்த பல்கலைக்கழக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அந்த அகதி முகாமில் செப்ரெம்பர் 5ம் திகதி இராணுவ தேடுதல்களும் இடம்பெற்றன. அவ்வேளையில் குண்டொன்றும் வெடித்தது. அதன் பின்னர் தேடுதல் நடத்திய இராணுவத்தினரால் விசாரணைக்கென 158 பேர் பஸ்வண்டிகளில் அழைத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்பட்டது.

ஆனால் அவர்கள் என்ன ஆனார்கள், அவர்களது கதி என்ன என்பது குறித்து உறவினர்களாலும் அந்த அகதி முகாமை நிருவகித்துவந்த கிழக்குப் பல்கலைக்கழக அதிகாரிகளாலும் இன்றுவரை கேள்வி எழுப்பப்படுகின்றது.

1989ஆம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படை நாட்டைவிட்டு வெளியேறிய நிலையில் புலிகளின் தற்கொலைக் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ தலைமையிலான இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் போர்நிறுத்தமொன்று கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

அந்தப் போர்நிறுத்தம் 1990ஆம் ஆண்டு நடுப்பகுதியில் முறிவடைந்த காலகட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினரால் தனித்தும் கூட்டம் கூட்டமாகவும் கைதுசெய்யப்பட்டிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் காணாமல்போயுள்ளதாக மனித உரிமை அமைப்புகளினால் அவ்வேளை தகவல்களும் வெளியிடப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அவ்வேளை மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக தமிழ்ப் பிரதேசங்களில் மக்கள் தமது குடியிருப்புகளை விட்டு வெளியேறி பொது இடங்களில் பாதுகாப்புக்காக அகதிகளாக தஞ்சம் பெற்றிருந்தார்கள்.

சம்பவ தினமான செப்ரெம்பர் 05ஆம் திகதியன்று அதிகாலை முகாமிற்கு வருகைதந்த இராணுவம் ஒலிபெருக்கிமூலம் பெண்களை வேறிடத்திலும் ஆண்களை மைதானத் திலும் கூடுமாறு அழைப்புவிடுத்ததாக கொம்மாந்துறையை சேர்ந்த 43 வயதான வெள்ளைச்சாமி கோவிந்தராஜ் கூறுகின்றார்.

இராணுவத்தினால் அழைத்து வரப்பட்ட முகமூடி அணிந்த நபர்கள் முன்னிலையில் ஆண்கள் நிறுத்தப்பட்டபோது முகமூடி நபர்களின் தலையாட்டும் சமிக்ஞைக் குள்ளான தனது மூத்தசகோதரன் உட்பட பலரை இராணுவம் பஸ்களில் அழைத்துச் சென்றிருந் தாகவும் அவர் கூறுகின்றார்.

கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாமில் இராணுவம் விசாரணைக் காக சிலரை அழைத்துசென்றிருந்ததை அவ்வேளை பாதுகாப்பு இராஜங்க அமைச்சின் செயலாளரான ஏ.டப்ளியு. பெர்ணான்டோ ஏற்றுக்கொண்டிருந்தார்.

32 பேர் மட்டுமே விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டு 24 மணித்தி யாலத்திற்குள் அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் அவ்வேளை கூறியிருந்தார்.

ஆனால் 158 பேரில் ஒருவர்கூட இன்றுவரை விடுவிக்கப்படவில்லை. என்கின்றார் அகதி முகாமை அந்நேரம் நிர்வகித்துவந்த கிழக்கு பல்கலைக்கழக மூத்த விரிவுரை யாளரான கலாநிதி ரீ. ஜயசிங்கம்.

1995ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கே.பாலகிட்ணர் தலைமையிலான ஆணைக்குழு முன்னிலையில் சகல ஆவணங்களை யும் முன்வைத்து இதுதொடர்பாக சாட்சியமளித்த போதிலும் அது அறிக்கையில் இடம்பெற்றதே தவிர உண்மை நிலை கண்டறியப்பட வில்லை என்றும் அவர் தெரிவிக்கின்றார்.


இவர்களுக்கு என்ன நடந்தது என்பது சம்பவ வேளை கடமைகளிலிருந்த இராணுவ அதிகாரிகளுக்கு தெரியாமல் அல்ல. தெரிந்திருக்கும். அப்படி இருந்தும் இதுவரையில் உண்மை நிலை கண்டறியப்படவில்லை என்றும் கலாநிதி ஜயசிங்கம் கேள்வி எழுப்புகின்றார்.

கிழக்கு பல்கலைக்கழக சம்பவத்தில் 25 வருடங்களுக்கு முன்னதாக இராணுவத்தினால் அழைத்துச்செல்லப்பட்டு பின்னர் காணாமல் போயுள்ளவர்களின் உறவினர்களை பொறுத்தவரை காணாமல் போனவர்கள் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கையை தற்போது இழந்திருந்தாலும் தற்போது ஏற்பட்டுள்ள நல்லாட்சி மாற்றத்திலாவது உண்மை நிலை வெளிவரவேண்டும் என உறவினர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

# ஆடம்பரத்தின் நிறைவு

## ஆரவாரத்தின் ஆரம்பம்

**கோவை நந்தன்**



வரலாற்று பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழா இம்மாதம் 13ஆம் திகதி நிறைவுக்குவர, 2009ம் ஆண்டின் பின்னர் தமிழர் வாழ்வில் பிரசித்தி பெற்று, பரபரப்பாகி வரும் ஜெனிவா திருவிழா மறுநாள் 14ம் திகதி ஆரம்பமாகிறது. நமது சமூகத்தின் சிறப்பு உபயம் இம்மாதம் 30ம் திகதிக்கு ஒதுக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆடம்பரக் கந்தன் என அழைக்கப் படும் நல்லூர் கந்தன் திருவிழாக் களில் ஆடம்பரத்தில் மட்டுமல்ல எங்கும், எப்போதும் மாறுபாடுகள். முரண்பாடுகள் எதுவும் இடம் பெற்றதாக எனக்கு தெரிய தகவல்கள் இல்லை.

இந்த நல்லூரான் திருவிழாவை விட மிக மிக டாம்பீகமாக இடம் பெறும் ஜெனிவா திருவிழாவின் இந்த வருடத்து எமக்கான உபயம் சிறப்பு வழிபாடுகளுடன் இடம்பெற உள்ளதாக, ஆராதனைகளிலும், திருவிழாக்கால இரவுகளில் இடம்பெறும் தவில், நாதஸ்வர, சின்னமேள கச்சேரிகளிலும், மட்டும் கலந்துகொள்ளும் நம்ம தரப்பு தெரிவிக்க, உபயகாரர்களான அமெரிக்காவோ இந்த வருடத்துடன் எமக்கான திருவிழாவையே நிறுத்தப்போவதாக சமிக்ஞை வெளியிட்டுள்ளது. ஆலய நிர்வாகமும் அதற்கு இணங்கியுள்ளதாக அறிய முடிகிறது. (இணங்கித்தானே ஆகவேண்டும் ஆலய தர்மகர்த்தாக் களின் முடிவை மீறமுடியுமா...? அர்ச்சகர்களால்.)

சிக்கல்களும், முரண்பாடுகளும், எதிர்பார்ப்புகளும், எதிர்மறைகளும் ஏமாற்றங்களும், ஏமாற்றல்களும் மலிந்த, ஜெனிவாத் திருவிழாவின் இந்த வருடத்து நமது உபயம் தொடர்பில் நல்லூர் பக்தன் ஒருவன் பரவசத்துடன் வெளியிடும் பலத்த சந்தேகங்கள்.....

1. இம்மாதம் 30ம்திகதி வெளியிடப் படும் என அறிவிக்கப்பட்டுள்ள மனித உரிமைப் பேரவையின் அறிக்கை நவநீதம்பிள்ளை அம்மையாரினால் நியமிக்கப்பட்ட மனித உரிமைகள் ஆணையகத்தின் விசாரணைக் குழுவால் பல மாதங்களாக மேற்கொள் ளப்பட்ட விசாரணைகளின் தீர்ப்பு இல்லையா...?

2. உலகம்பூராகவும் வெளிநாட்டவர் சிலர் உட்பட நம்மவர் பலரால் சாட்சியம் வழங்கப்பட்ட இந்த விசாரணைகள், நம்மவர் கூறும் தமிழின அழிப்பு தொடர்பாகவா அல்லது போர்க்குற்றம் தொடர்பாகவா மேற்கொள்ளப்பட்டது...?

3. இந்த் விசாரணைகளில் சாட்சிய மளித்தவர்கள்கூட உள்ளக விசாரணை வேண்டாம். சர்வதேச விசாரணையே வேண்டும் என்கிறார்களே என்னப்பனே முருகா இதென்னப்பா கூத்து...?

4. ஒரு சில ஆண்டுகள் மட்டும் எமது குட்டித்தீவினுள் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ள, ஆண்டாண்டு காலமாக ஏகக்குறைய உலகின் அனைத்து நாடுகளிலும் ஆக்கிரமிப்புகளையும், அழிவுகளையும், அவலங்களையும் தொடர்ச்சியாக அரங்கேற்றும் அமெரிக்காவும், பிரித்தானியாவும், ஐரோப்பாவும் எப்படி தகுதியானவர்கள் ஆனார்கள்...?

5. சரி முதல் இடம்பெற்றது விசாரணை இல்லை, உள்நாட்டு விசாரணையில் நம்பிக்கை இல்லை என்றால் இதற்கான வேறு பொறி முறைகள் இல்லையா வேறு நாடுகள் இல்லையா...?

6. நமது தொப்புள்கொடி உறவுகள் எனப்படும் தமிழகத்து மக்களும் இணைந்து ஏற்றுக்கொண்டுள்ள இந்திய மத்திய அரசு இந்த விசாரணையை மேற்கொள்ளவேண்டும் என ஏன் எம்மால் கோரமுடியவில்லை...?

7. சரி இந்தியாவும் இணைந்து தான் இந்த அனர்த்தத்தை அரங்கேற் றினார்கள் என்றால் நீங்கள் நீதியை எதிர்பார்க்கும் அமெரிக்காவுக்கும், பிரித்தானியாவிற்கும், ஐரோப்பாவிற்கும் இந்த அழிவிற்கும் எதுவித தொடர்பும் இல்லை என்கிறீர்களா...?

8. இந்த ஏகாதிபத்தியங்கள் நேர்வே அரசாங்கத்தினூடாக பின்னிய சதிவலை தான் புலிகள் அமைப்பை மட்டுமல்ல, போரில் சிக்குண்ட மக்களை மட்டு மல்ல, எமது போராட்டத்தையே சிதைத்தது என்பதை நீங்கள் மறுக்கப் போகிறீர்களா...?

9. பிரித்தானிய அரசாங்கம் இலங்கை அரச படைகளுக்கு நேரடியாகவும், அமெரிக்க ஆயுத விற்பனையாளர்கள் மலேசியா, இந்தோனேசியா, உக்ரேய்ன் போன்ற நாடுகளூடாக புலிகள் அமைப்புக்கும் ஆயுதம்வழங்கி எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றி தமது நலனை காத்தது உங்களுக்கு தெரியாதா...?

10. அமெரிக்காவும், ஐரோப்பாவும் இந்தியாவையும் இணைத்துக்கொண்டு அண்மையில் இலங்கையில் ஏற்படுத்திய ஆட்சிமாற்றத்தின் சூட்டுடன் இங்கு வந்த அமெரிக்காவின் வெளியுறவு துணை அமைச்சர் நிஷா பிஷ்வால் இலங்கை அரசினால் மேற்கொள்ளப் படும் உள்ளக விசாரணையையே அமெரிக்கா வலியுறுத்தும் எனவும் அதற்கான தீர்மானமும் ஜெனிவாவில் நிறைவேற்றப்படும் எனவும் திட்ட வட்டமாக சட்டாம்பிள்ளைத் தனத்துடன் அறிவித்திருந்ததை அதற்குள்ளாகவா மறந்துவிட்டீர்கள்...?

11. இதற்கு பின்னரும் பரந்துபட்ட கையெழுத்து வேட்டைகள், அறிக்கைகள், தீர்மானங்கள், ஜெனிவாவை நோக்கிய பயணம் இவற்றின்மூலம் அமெரிக்க முடிவை மாற்றிவிடலாம் என நம்பப்படுகிறதா...?


12. இப்படி ஒரு போலி நம்பிக்கையை புலம்பெயர் நம்மவர் தரப்பு இங்குள்ளவர்களுக்கு கொடுத்துள்ளதா...?

13. இதற்கு எடுபட்டுக் கொண்டுதான் சிலர் தாண்டவம் ஆடு கிறார்களா...?

14. பிராந்திய நலன் மட்டுமே கொண்ட இந்தியா, ஏகாதிபத்திய வெறியர்களான மேற்குலகின் அனைவரினதும் நோக்கம் சீனாவின் ஆளுமையிலிருந்து இலங்கையை விடுவித்து தமது செல்லப்பிள்ளை ரணில் விக்கிரம சிங்கவை ஆட்சிக் கட்டிலில் ஏற்றவேண்டும் என்பது மட்டும்தான் என்பதை இவர்கள் உணரவில்லையா...?

14. அண்மையில் இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் த.தே.கூட்ட மைப்பு, ஐ.தே. கட்சியுடன் இணைந்து செயற்படப்போகிறது என்று தெரிந்தும், பிரிவினை சக்திகளை தோற்கடித்து பெரும்பான்மை தமிழர்கள் அவர்களுக்கு வாக்களித் தார்கள். ஐ.தே.க சர்வதேச விசாரணைக்கு ஒருபோதும் இணங்காது எனத் தேர்தலுக்கு முன்னரே அவர்கள் அறிவித்திருந்தனரே. பிறகு எதற்கு மீண்டும் மீண்டும் மக்கள் குழப்பப்படுகின்றனர்...?

சுயத்திற்கான இந்த குழப்பல் களுக்கு வழங்கப்படும் நிதி கரிய அந்த போரின் வடுக்களை சுமந்துகொண்டு இன்றும் வாழும் மக்களுக்கு, குறிப்பாக கருமையை அறியா பருவத்திலேயே களத்திற்கு அனுப்பப்பட்டு, இன்று ஒதுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அந்த அவலக் குடும்பங்களுக்கு அளிக்கப்படுமா...? இதுக்காவது அருள்வாயா என்னப் பனே முருகா என ஏங்கிக்கொண்டு




**ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே**
**ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே**
**கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே**
**குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே**
**மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே.**

என்ற வரிகளை முணுமுணுத்தபடி வடக்கு வீதியை நோக்கி நகர்கிறான் அந்தப் பக்தன்.

# உள்ளக விசாரணையா? சர்வதேச விசாரணையா?

**இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்றது மனித உரிமைமீறும் செயல் என்று எல்லோரும் எடுத்துக்காட்டிவருகின்ற போதிலும் இலங்கை அரசுக்கு ஆதரவாகவும், எதிராகவும் செயற்படும் நாடுகள் உள்ளன. உலகின் முதல் தரச் சண்டியனான அமெரிக்கா தலையிட்டமையினால் ஏனைய பல நாடுகளும் அமெரிக்காவின் காய் நகர்த்தலுக்குத் துணைபோகும் சூழ்நிலை உருவாகலாம். சீனா, இந்தியாவினைப் புறந்தள்ளிவிட்டு, அமெரிக்கா இலங்கையிலே காலூன்ற எண்ணுகின்றது. உறவுக்குக் கரம் கொடுப்போம் என்று அமெரிக்கா குடி வந்துள்ளது. இலங்கையின் முன்னைய அரசு சீனா, இந்தியா, அமெரிக்கா எனும் அடிப்படையிலே இயங்கியது. சீனாவை முன்வைத்து அபிவிருத்திகளையும், நிதி வசதிகளையும் இலங்கை அரசு பெற்றுவந்தது.**



தேர்தல் திருவிழா முடிவடைந்து வெற்றியீட்டியவர்கள் வெற்றிக்களிப்பிலே தூங்கி வழிகின்றனர். ஆனால் மக்களோ கொஞ்சக் காலம் தேர்தலையும் முடிவுகளையும், அமையப்போகும் அரசைப் பற்றியும் பேசினார்கள். இப்போது எல்லோருடைய எதிர்பார்ப்பும், எல்லோருமே கூடிக்கூடிக் பேசக் கூடிய விடயமாக உள்ளது. சர்வதேச விசாரணை பற்றிய செய்தியாகும்.

சர்வதேச விசாரணையா?, உள்ளக மட்ட விசாரணையா? என்பதே இப்போதைய முக்கிய பிரச்சினையாகவுள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்தமட்டிலே உள்ளக மட்ட விசாரணைகளை தாம் நம்பப்போவதில்லை என்று கருத்துக்களையும், கண்டனங்களையும் வெளியிட்டுவருகின்றனர்.

ஆனாலும் இந்த சர்வதேசப் பொறிமுறை விசாரணை என்பது ஒருபோதுமே நடக்க, நடைபெற வாய்ப்பிருக்காது என்பதனையும் தமிழ் மக்கள் அறியாமல் இல்லை. ஏனெனில், இந்தச் சர்வதேச மட்ட விசாரணையை உலகின் முதல்தர வல்லரசுகள் முன்னைய ஆட்சியின் போது வலியுறுத்தி இலங்கையினை சிக்கலிலே உண்டாக்க முயற்சித்தது.

இலங்கையிலே ஜனவரி 08 ஆம் திகதி உண்டான மாற்றமானது வல்லரசுகளையும் மனம் மாற வைத்துள்ளது எனலாம். அமெரிக்கா சர்வதேச விசாரணையை கைவிட்டு உள்ளக விசாரணையே நடைபெறுமென்று கூறிவிட்டது.

இலங்கையின் முன்னைய ஆட்சியாளர்கள், மற்றும் படையினரும் சர்வதேசமட்ட விசாரணையை எதிர்கொள்ள நேரிட்டால், பெரும்பான்மையின மக்களின் எதிர்பார்ப்பு உருவாகாமலும், அது எதிர்வாக்காக மாறாமலும் இருக்க வேண்டும் எனவும், தமது நாட்டின் படையையும், ஆட்சியாளர்களையும் சர்வதேசக் குற்றாளிக் கூண்டிலேற்ற ஒருபோதும் இலங்கை அரசு விரும்ப மாட்டாது என்பதனை அண்மைய நடவடிக்கைகள் புலப்படுத்தி வருகின்றன.

தேர்தல் வேளைகளிலே எதிரும் புதிருமாக புழுதிவாரி இறைத்தவர்கள், இன்று ஒரே குடையின்கீழ் ஒன்று திரண்டுள்ளனர். சர்வதேசத்துடன் ஒத்துப்போக புதிய அரசு தயாராகி விட்டது.

ஆனாலும் எல்லாவற்றையும் நம்பி ஏமாந்தவர்களாக தமிழ் மக்கள் உள்ளனர். ஏமாற்றியவர்களாக அரசியல்வாதிகள் உள்ளனர்.

இம்முறை நடைபெற்ற எட்டாவது பாராளுமன்றுக்கான பிரதிநிதி களைத் தேர்வுசெய்யும் தேர்தலின் போதும் சர்வதேச விசாரணையை வலியுறுத்துவோம். குற்றமிழைத்தவர் களை சர்வதேச கூட்டிலேற்றுவோம் என்றுகூறியே தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்டனர். இம்முறை நடைபெறும் தேர்தலை சர்வதேசம் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றது என்றுகூறி வாக்குக் கேட்டு வென்றவர்கள் இதுவரை நான் இக்கட்டுரையினை வரைந்துகொண்டிருக்கும் கடைசி நிமிடம்வரையும் உரியவர்கள் சர்வதேச விசாரணை பற்றி வாயே திறக்கவில்லை என்பது வேதனையான விடயமாயுள்ளது.

ஆனாலும் வடக்கு மாகாண சபை முதல்வர் சர்வதேச மட்ட விசாரணையின் அவசியம் பற்றி கருத்து வெளியிட்டுள்ளார். பிரேரணையும் நிறைவேற்றியுள்ளனர். சர்வதேச நலன்களுக்காக எமது மக்களின் நலன்களை அடகு வைக்கமுடியாது என்றும் காட்டமாகக் கூறியுள்ளார். இதேவேளை இவர் சார்ந்த ஆட்சியினர் இன்னும் எதிர்ப்பை வெளியிடவில்லை. மாறாக தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி என்று கூறிக்கொள்ளும் இவர்கள் (கூட்டமைப்பு) அமெரிக்கப் பிரதி இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஸ்வாலுடன் சந்திப்பை மேற்கொண்டிருந்தனர். அப்போது கூட்டமைப்புத் தலைவர்களிடம் உள்ளக விசாரணை சமிஞ்ஞையே காண்பிக்கப்பட்டது. மேடைபோட்டு சர்வதேச விசாரணை என்றவர்கள் நிஷா பிஸ்வாலிடம் எதிர்ப்பைக் காட்டாமல்விட்டது ஏன்? என்று மக்கள் கேள்வி கேட்கின்றனர். அதேவேளை தமிழ் தேசியக் கூட்டமைப்பிலே அங்கம்வகிக்கும் மூன்று ஆட்சியின் தலைவர்கள் ஒன்றுகூடி சர்வதேச விசாரணையே வேண்டும் என்று ஒருமித்துச் சொல்லிவிட்டனர். ஏனைய தமிழ் தலைமைகளும் போர்க் குற்றவாளிகள் சர்வதேச விசாரணையை எதிர்கொள்ளவேண்டும் என்று எடுத்துரைத்துவரும் இவ்வேளையில் தமிழ் மக்களின் ஏகோபித்த தலைமைகள் என்று கூறிவரும் தமிழ்த் தலைமைகளாக இலங்கை தமிழரசுக் கட்சியினர் எதுவுமே பேசவில்லை.

**• அளவெட்டி ப. உதயகுமார் •**

காணாமல்போனவர்களும், உறவுகளை இழந்தவர்களும்கூடி சர்வதேச விசாரணையை வலியுறுத்திவருகின்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது இடம்பெற்றது மனித உரிமைமீறும் செயல் என்று எல்லோரும் எடுத்துக்காட்டிவருகின்ற போதிலும் இலங்கை அரசுக்கு ஆதரவாகவும், எதிராகவும் செயற்படும் நாடுகள் உள்ளன. உலகின் முதல் தரச் சண்டியனான அமெரிக்கா தலையிட்டமையினால் ஏனைய பல நாடுகளும் அமெரிக்காவின் காய் நகர்த்தலுக்குத் துணைபோகும் சூழ்நிலை உருவாகலாம்.

சீனா, இந்தியாவினைப் புறந் தள்ளிவிட்டு, அமெரிக்கா இலங்கையிலே காலூன்ற எண்ணுகின்றது. உறவுக்குக் கரம் கொடுப்போம் என்று அமெரிக்கா குடி வந்துள்ளது. இலங்கையின் முன்னைய அரசு சீனா, இந்தியா, அமெரிக்கா எனும் அடிப்படையிலே இயங்கியது. சீனாவை முன்வைத்து அபிவிருத்திகளையும், நிதி வசதி-களையும் இலங்கை அரசு பெற்று வந்தது. ஆனாலும் இந்தியாவையும் இலங்கை அரசு நிராகரிக்கவில்லை. இது அமெரிக்கச் சண்டியனுக்கு அதிர்ச்சியினையும் ஆவேசத்தையும் ஊட்டியதன் விளைவாக புதிய அரசுடன் கைகோர்த்துள்ளது அமெரிக்கா புதிய அரசு சீனாவின் வேலைத்திட்டங்களை நிறுத்தி அமெரிக்காவுடன் கைகோர்த்துச் செயற்படும் நிலைமை காணப்படுகின்றது.

எனவே உறவினை வளர்த்து தமது நாட்டின் நலனைக் காப்பாற்றவே அமெரிக்கா முன் நிற்கின்றது. இதன் விளைவுதான் போர்க்குற்றச்சாட்டுக்களில் இருந்து இலங்கையினை காப்பாற்றும் முயற்சியாகும்.

கடந்த பல வருடங்களாய் மனித உரிமைகள் கூட்டத் தொடர்களில் கலந்துகொண்ட கூட்டமைப்பு இலங்கை அரசை ஆட்டம் காணச் செய்வோம், இலங்கையைச் சர்வதேச நீதிமன்றிலே உட்படுத்துவோம். குற்றவாளிகளை சர்வதேச உதவியுடன் தண்டனையை பெறச்செய்வோம் என்று கத்தி குளறியபடி இருந்த கூட்டமைப்பின் இம்முறை மௌனம் காப்பது ஏன்?

அமெரிக்காவின் அணுகுமுறையில் ஆச்சரியமில்லை. இவ்விடயம் தொடர்பிலே கழுவின மீனிலே நழுவின மீனாக செயற்படும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் நடவடிக்கையே ஆச்சரியமளிப்பதாயுள்ளது.

அமெரிக்காவின் நிஷா பிஸ்வாலுடன் என்ன பேசினார்கள் என்பதுகூட தமிழ் மக்களுக்கு இதுவரை சொல்லவில்லை. தமிழ் மக்களின் வாக்கு மட்டும் வேணும் வெற்றியடைந்துவிட்டால் மக்களை ஆடு, மாடுகள்போல மதிக்கும் நிலையினை கூட்டமைப்பினர் மாற்றிக் கொள்ள வேண்டும்.

இது இவ்வாறிருக்கும்போது, கூட்டமைப்பின் முக்கியஸ்தரான சுமந்திரன் சர்வதேசத்தின் பங்களிப்பு டனான உள்ளக விசாரணையை கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளும் என்று கூறியுள்ளதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. எனவே மக்களும் ஏனைய அரசியல்வாதிகளும் சர்வதேச விசாரணையை வலியுறுத்திக் கொண்டிருக்க கூட்டமைப்பு மட்டும் அரசுக்குத் துணை போகப்போகின்றனவா? எனும் அச்சமும் மக்களிடம் எழுந்துள்ளது.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் பதவிவேண்டும் என்று கேட்ட கூட்டமைப்பு அப்பதவியினையும் பெற்றுவிட்டனர். இந்தப் பதவி மூலம் தமிழ் மக்களுக்கு ஏதும் செய்வார்களா? என்றால் இல்லை என்று உடனேயே பதிலளிக்கலாம். ஏனெனில் கூட்டமைப்பு பதவிகளை யும் பட்டங்களையும் பெற்றுக் கொள்ளுமே தவிர மக்கள் நலன் சார்ந்த விடயங்களை செய்ததாக வரலாறுகள் ஏதமில்லை.

எனவே எது எப்படியானாலும், போர்க்குற்ற விசாரணைகளில் சர்வதேசப் பொறிமுறையே வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர்.

மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பங்கம் உண்டாகாமல் சர்வதேச மட்டத்தை வலியுறுத்தவேண்டும். இலங்கையின் கடைசிப் போர்க் கட்டம் வரலாற்றிலே கறைபடிந்த விடயமாகும் என்பதனைக் கூட்டமைப்பினர் தட்டிக் களித்துவிட முடியாது.

இலங்கையில் அமைந்துள்ள இந்தப் புதிய அரசும் ஒரு ஸ்திரமான அரசு அல்ல. எந்தவேளை அரசமைத்த கூட்டுக்களில் ஓட்டை விழுகின்றதோ, அடுத்தகணமே உள்ளிருப்பவர்கள் வெளியேறி விடலாம் எனும் கருத்தும் நிலவாமல் இல்லை.

இதேவேளை தமிழ் மக்களை யெல்லாம் வளைத்துப்போடுவதற்கு ஏதுவாகவே சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கொடுக்கப்பட்டுள்ளது. இது ஐரோப்பிய ஒன்றியத்தின் விசாரணை குற்றச்சாட்டுக்களைத் தம் பக்கம் திருப்ப முற்படும் ஒரு இராஜதந்திரம் என்பதே உண்மையாகும்.

தமிழ் மக்கள் எல்லாரும் அரசின் பின்னால் உள்ளனர். முக்கிய உயர் பதவியை தமிழர்களுக்கே வழங்கியுள்ளோம் என்று சொல்லியே கதையை முடித்து சர்வதேசங்களை திருப்திப்படுத்தி போர்க்குற்றங்களை முடிபோட்டு மறைக்க முற்படும் ஒரு சதி என்பதனையும் தமிழ் மக்களின் வாக்குறுதிகளினால் பாராளுமன்றம் சென்றோர் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே தமிழ் மக்களுக்கு நீதி வேண்டும். அறுபதாண்டு காலச் சோக வாழ்வுக்கு முடிவுவேண்டும். அதனை அடைய பாடுபடவேண்டியவர்கள் பட்டம் பதவிகளுக்காக துணைபோகக் கூடாது! பேரம் பேசுவோம் எம்க்கு வாக்களியுங்கள் என்றவர்கள் தமிழர்களின் விடிவையும் பற்றி எண்ணவேண்டும்.

சர்வதேச விசாரணையா? உள்ளக விசாரணையா? தீர்மானிக்கும் பொறுப்பு அரசியல்வாதிகளுக்கும் மக்களுக்கும் உரியது! ○




**இப்பகுதிக்கு சிறுவர்களிடம், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.**



பரமண்ணா

# “விளையும் பயிரின் முளை!”

சேகரனின் சிந்தனையில் ஏற்பட்டிருந்த ஆளுமையான மாற்றம் அவனுடைய போக்கில் வளர்ந்துகொண்டே இருந்தது. பெற்றோரின் விருப்பப்படி தணிந்துவிடவில்லை.

அந்த மாற்றத்துக்கு உரிய காரணம் அவனது உடலிலோ மூளையிலோ வலுக்குறைந்ததே என்னும் எண்ணமே பெற்றோரின் இதயங்களில் தோன்றியும் இருந்தன. அவர்கள் அப்படி நினைத்துக் கொண்டதிலும் ஆச்சரியம் இருக்கவில்லை. அவனுடைய மாற்றத்தின் உள் இரகசியங்களை அவர்களெங்கே அறிந்து கொள்ளப் போகிறார்கள்?

காலம்தான் வெளிச்சப்படுத்தும் என காலத்தின்மீது பழியைப் போட்டுவிட்டுப் பெற்றோர்களால் அமைதியாக இருந்திடவா முடியும்? அதிலும் பெற்றவளின் உள்ளம் படுகின்ற வேதனை சொல்லில் வெளிப்படுத்த முடியா ஒன்றல்ல? பெற்ற மனம் பித்துத்தானே!

“பொறுத்திருந்து பார்ப்போம் என்றால் எவ்வளவு காலங்கள் பொறுத்திருப்பது... அதற்குள் சேகரனுடைய பிற்காலம் பிரயோசனம் இல்லாப் பாலைவனமாகிவிட்டால்...?”

எண்ண அலைகள் தாயார் அன்னத்தின் உள்ளத்துள் அலை கடலாக அடித்துக்கொண்டிருந்தன. கணவர் சோமசுந்தரம் சேகரனின் மாற்றத்தை பற்றிச் சிரத்தை காட்டுவதாகவும் அவளுக்குப் படவில்லை.

“அவர்தான் என்ன செய்வார்... வீட்டுச் சிந்தனைகளோடு வேலைக்குப் போனால் காரியாலய கடமைகளை சரிவரச் செய்யாமல் மேலதிகாரியிடம் குறை கேட்க வேண்டித்தானே வரும்...” தன்னுள் சமாதானம் சொல்லி ஒருவாறு அமைதி அடைவாள்.

“என்னங்க... சேகரனின் நிலைமை வர வர மோசமாகிக் கொண்டேதான் போகுது... அதுக்கேதும் நாங்க இப்ப செய்யேல்லை எண்டால் பின்னாடி பிள்ளேன்ர வாழ்க்கைப் பாழாகிடுமே எண்டு நினைக்க எனக்கெவ்வளவு அந்தரமா இருக்கு...”



(தொடரும்)

## வாரம் ஒரு திருக்குறள்



### அன்புடைமை

**அன்போடு இயைந்த வழக்கென்ப**
**ஆருயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு.**

அருமையான உயிர்க்கு உடம்போடு பொருந்தி இருக்கின்ற உறவு, அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன்என்று கூறுவர்.

குறள் : 73


## பாலூட்டிகள்


* எல்லாப் பாலூட்டிகளுக்கும் முதுகெலும்பு உள்ளது. இது பாலூட்டிகளின் உடல் அமைப்பின் நடவடிக்கைகளுக்கு உதவுகிறது. மண்டை ஓடு கண்களையும் மூளையையும் பாதுகாக்கிறது. அதேபோல் விலா எலும்பு அவற்றின் இதயத்தையும் நுரையீரலையும் பாதுகாக்கிறது. எலும்புகளோடு சேர்ந்த தசைப்பகுதி இந்த விலங்குகளின் நடமாற்றத்திற்கு உதவுகின்றன.

* உரோமங்கள் பாலூட்டிகளுக்கு மிதமான வெப்பத்தைத் தருகின்றன. எதிரிகள் தாக்கும்போது, பாலூட்டிகளின் உடலிலுள்ள உரோமங்கள் அவற்றுக்குப் பாதுகாப்புத் தருகின்றன.

* பிளாடிபஸ், எறும்புதின்னி ஆகியவை முட்டையிடும். பிளாடிபஸ் நிலத்தின் அடியில் முட்டையிட்டு மண்ணால் மூடிவிடும். முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிவந்த பின் பால் கொடுக்கும். எறும்புதின்னி முட்டையிட்டு அடைகாக்கும்.

* திமிங்கிலம் டொல்பின், நீர் நாய் ஆகிய பாலூட்டிகளின் இருப்பிடம் கடலாகும். இந்தப் பாலூட்டிகள் நீந்தும்பொழுது தம் உடலைப் படகுபோல் வைத்துக்கொள்கின்றன. இதன்வழி, அவற்றால் மிகவும் விரைவாகவும் எளிதாகவும் நீந்தமுடியும்.





## தெரிந்துகொள்ள...

01. அலைபேசிகளில் காணப்படும் SOS என்பதன் விரிவாக்கம் என்ன? Save Our Soul.
02. உலக இரத்த தான தினமாக கருதப்படும் நாள் எது? ஒக்டோபர் 1.
03. மோப்பசக்தியால் இரைதேடும் பறவை இனம் எது? கிவி.
04. போலியோ நோய் எதனால் ஏற்படுகிறது? வைரஸ்.
05. அகசிவப்பு கதிர்களை எது அதிகமாக ஈர்க்கும்? தண்ணீர்.
06. இந்திய தேசிய கலெண்டரின்படி புத்தாண்டு என்று தொடங்குகிறது? மார்ச் 21.
07. இதயத்தில் எதனை அறைகள் உள்ளன? 4
08. பயணித்த தூரத்தை அறிய வாகனங்களில் பயன்படுத்தப் படும் கருவி எது? ஓடோமீற்றர்.
09. உலகின் இரண்டாவது நீளமான கடற்கரையான மெரினாவை வடிவமைத்து பெயர் சூட்டியவர் யார்? கிரண்ட்டப்

## சிறுவர் ஜோக்ஸ்




## எழுந்திடு வென்றிடு!

சிறுவர் பாடல்

காலைப் பொழுதில் எழுந்திடு
கல்வியை நன்றாய்க் கற்றிடு
மாலைப் பொழுதல் விளையாடு
மன்னவன் போல நடைபோடு!

தாய்மொழி அறிவைப் பெருக்கிடு
தன்னலம் கருதாது உழைத்திடு
வாய்மொழி சத்தியம் பேணிடு
வளர்பிறையாய் நீ வளர்ந்திடு!

கற்றவர் என்றும் உயர்ந்தோராம்
கல்லாதவரே இழிந்தோராம்!
மற்றவர் குறை நீ பேசாதே
மானம் காத்திடக் கூசாதே!

பிறர்பொருள் கவர எண்ணாதே
பெரியவர்களை வணங்க தவறாதே!
குற்றம் எல்லாம் ஓடிவிடும்
குறையிலா வாழ்வு தேடி வரும்.




## விடுகதைகள்

1. பல அடுக்கு மாளிகையில் இனிப்பு விருந்து. அது என்ன?
2. உடல் கொண்டு குத்திடுவான் உதிரிகளை ஒன்றிணைப்பான். அது என்ன?
3. ஆள் இறங்காத குளத்தில் ஆழ இறங்கி கூத்தாடுது. அது என்ன?
4. பேசுவான் நடக்கமாட்டான் பாடுவான் ஆடமாட்டான். அவன் யார்?
5. தலை இல்லாதவன் தலையை சுமப்பவன். அவன் யார்?

விடைகள்:

1.தேன் 2.ஊசி 3.மத்து
4.வானொலிப் பெட்டி
5.தலையணை.



சிறந்த வர்ணத்தீட்டுப் பரிசு பெறும் ஓவியம்

**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிடவேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 14.09.2015

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 1112**
**தினமுரசு வாரமலர்**
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1112**

யோ.அருந்ததி,
பிரதான வீதி, பதுளை.

பரிசுக்குரியவர்: 1110

பாராட்டுக்குரியவர்கள்

01. யோ.சுதர்சினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
02. அ.பகிசுஜன், கொக்குவில் கிழக்கு.
03. ச.சயான், அநுராதபுர வீதி, புத்தளம்.
04. எம்.பாவனா, அம்பிட்டிய றோட், தென்னக்கும்புர.
05. எஸ்.எவ்.ஜமீல், நிந்தவூர், மட்டக்களப்பு.
06. வ.பவித்ரா, உயரப்புலம், ஆனைக்கோட்டை.
07. எஸ்.டிலக்சன், பருத்தித்துறை வீதி, கொழகாமம்.
08. ச.நந்திதா, திருநாவற்குளம், வவுனியா.

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 105




# இடி அமீன்

என்றாவது ஒரு நாள் தனது பதவிக்கு ஆபத்து ஏற்படலாம் என்று அமீன் நம்பத் தொடங்கினான்.

அதனால் தனது எதிர்கால வாழ்வுக்காக சேமிக்க ஆரம்பித்தான். பிரிகேடியர் மாரெல்லாதான் தன் கண்களைத் திறந்துவைத்ததாக, அவன்மீது அமீனுக்கு அபிமானம் அதிகமாயிருந்தது.

இவ்வாறு பலதரப்பட்ட வகையில் உதவியதால்தான் மாரெல்லாவுக்கு முழுமரியாதை கொடுத்து, பாதுகாப்பும் கொடுத்து அனுப்பிவைத்தான் அமீன்.

தென்சூடானில் உள்ள ஜூபா நகருக்கு மாரெல்லா போய்ச் சேர்ந்தார். உகண்டாவில் அவர் பயன்படுத்திய வெள்ளை பென்ஸ் காரையும் எடுத்துச்சென்றனர்.

மாரெல்லாவின் இடத்துக்கு கக்வா இனத்தைச் சேர்ந்த ஒருவனை அமீன் நியமித்தான்.

இராணுவத்துக்குள் ஏற்பட்ட கொந்தளிப்பை ஒருவிதமாக அமீன் சமாளித்து மூச்சுவிடுவதற்குள் இன்றொரு பிரச்சினை ஏற்பட்டது.

உகண்டாவை கிறிஸ்தவ அதிக்கத்தில் இருந்துவிடுவித்து, முஸ்லிம் நாடாக மாற்றுவதே அமீனது திட்டம். என்று எங்கும் பேச்சு எழுந்தது.

அமீனுக்கு எதிரான சக்திகள் மிகச் சாதுரியமாக அப்பிரசாரத்தைக் காட்டுத் தீபோல பரவச் செய்திருந்தன.

அதனை முறியடிக்க என்ன செய்யலாம்? என்று தன் மூளையைக் கசக்கினான் அமீன்.

உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்றும் திட்டம் அமீனுக்கு இருப்பதாக எங்கும் பேசப்பட்டது.

அமீனுக்கு பயந்து அதுவரை வாய்மூடிக் கொண்டிருந்தவர்கள் கூட இந்த விவகாரத்தில் வாய் திறந்து பேச ஆரம்பித்தனர். உகண்டாவின் சனத்தொகையில் அப்போது பத்து வீதத்தினரே முஸ்லிம்கள். ஆனாலும் பணம் திரட்டுவதில் நாட்டம்கொண்ட அமீன் உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்றினால் அயலிலுள்ள அரபு நாடுகளில் இருந்து பெரும் நிதியைப் பெற்றுக்கொள்ளலாம் என்று திட்டமிட்டான். உகண்டாவின் அமைச்சரவையில் 1971இல் இரு முஸ்லிம் அமைச்சர்களே இருந்தனர்.

1973க்கும் 1977க்கும் இடையே முஸ்லிம்களே அதிக அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றனர்.

1971 ஓகஸ்ட் மாதத்தில் 21 அமைச்சர்களில் 14 பேர் முஸ்லிம் அமைச்சர்களாயினர். இதற்கு அமீன் எதிர்பார்த்த பலனும் ஏற்பட்டது. அரபு நாடுகள் சில ஒரு தொகை நிதியை உதவியாக வழங்கின.

உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்றுவதையிட்டு பலத்த எதிர்ப்புக் கிளம்பியதைக் கண்டு அமீன் கலக்கமடைந்தான். கிறிஸ்தவ மதத் தலைவர்கள் சிலரை அழைத்து பேச்சு நடத்தினார்கள். "நாடு நிதி நெருக்கடியில் இருக்கிறது. அதனால்தான் அரபு நாடுகளிடம் உதவி பெறவேண்டியிருக்கிறது. அவர்களது உதவியை நம்பி இருப்பதால் முஸ்லிம் அமைச்சர்களை கூடுதலாக சேர்த்துக்கொண்டேன். உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்றும் எண்ணம் துளிகூடக் கிடையாது. நான் சகல மக்களுக்கும் ஜனாதிபதி. முஸ்லிம்களது ஜனாதிபதியல்ல. என்னை நம்புங்கள்!" என்று உருக்கமாகப் பேசினான்.

அமீனா இப்படிப் பேசுவது? அவர்களுக்கு தம் காதுகளையே நம்ப முடியவில்லை. சந்திப்பு முடிந்ததும் மதத்தலைவர்களை உகண்டா அரச வானொலி பேட்டி கண்டது.

"ஜனாதிபதி எம் கருத்துக்களை மதிக்கிறார். முஸ்லிம் நாடாக மாற்றும் எண்ணம் தமக்கில்லை என்று கூறியுள்ளார்" என்று மதத் தலைவர்கள் கூறியிருந்தனர்.

அந்தப் பேட்டி ஒலிபரப்புவதை தன் அலுவலகத்திலிருந்து கேட்டுக் கொண்டிருந்த அமீனின் உதட்டில் கபடமான புன்னகை எட்டிப்பார்த்தது. "முட்டாள்கள் நன்றாக ஏமாந்து விட்டார்கள்!" என்று வாய்விட்டே கூறினான்.

உகண்டாவில் ஜனநாயகம் இருக்கிறது என்று நம்பவைக்கவும், உள்நாட்டில் தனக்கெதிரான புகைச்சலை அடக்கவும் அமீன் ஒரு அற்புதமான நாடகம் ஆடினான்.

கிறிஸ்தவ மதத்தில் இருந்தும், ஏனைய இனங்களில் இருந்தும் சிலரை பொறுக்கி எடுத்தான். அவர்கள் உள்ளூர்களில் செல்வாக்கு உள்ளவர்கள்.

அவர்களது பலம், பலவீனத்தைப் பயன்படுத்தி வலையை வீசினான் அமீன்.

பண ஆசை, சொத்து ஆசை, பெண் ஆசை, பதவி ஆசை போன்றவற்றில் யாருக்கு என்ன ஆசையோ அதனை நிறைவேற்றினான் அமீன்.

உகண்டாக்காரர்களுக்கு வெளிநாட்டு பெண்களில் மோகம் இருப்பதை அமீன் அறிவான். அதனால் தன் ஆட்கள் சிலரை அனுப்பி வெள்ளைக்காரப் பெண்களை அழைப்பித்து வைத்திருந்தான்.

காய்ந்த மாடுகள் கம்பில் விழுவது போல, அந்தப் பிரமுகர்கள் வெள்ளைத் தோலைக் கண்டதும் பாய்ந்து புரண்டார்கள். அமீன் என்ன சொன்னாலும் கேட்க சித்தமானார்கள். அமீனை வாயாரப் புகழ்ந்தார்கள்.

அனைவரையும் ஒரு நாள் தன் முன்பாக அழைத்தான். அனைவரும் தெய்வ சந்நிதானத்தில் நிற்பதுபோல மிகப்பவ்வியமாகக் காட்சியளித்தனர்.

அமீன் ஒரு நமட்டுச்சிரிப்போடு "எனக்காக நீங்கள் ஒரு உதவி செய்யவேண்டும். செய்வீர்களா?" என்று கேட்டான். அவர்கள் ஒரே குரலில், "காத்திருக்கிறோம்!" என்று கூறியபோது, தங்கள் முதுகுகளை வில்லாக வளைத்துக் காட்டினார்கள். அடுத்து அமீன் கூறிய வார்த்தைகள் அவர்களைத் தூக்கி வாரிப்போட்டது.

"எனக்கு எதிராக நீங்கள் பேசவேண்டும்!" என்றான் அமீன்.

"என்ன?" என்று அவர்கள் கதிகலங்கிப் போனார்கள். அமீன் தங்களைச் சோதிக்கிறானோ?

(தொடரும்..)

---

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 641

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | ■ | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | ■ | 18 |
| 19 | 20 | 21 | ■ | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | ■ |
| 31 | 32 | 33 | 34 | 35 | ■ |

## குறுக்கெழுத்துப் போட்டி 639 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 க | 2 ரி | 3 க் | 4 கு | 5 ரு | 6 வி |
| 7 ண் | 8 கே | 9 ல | 10 ட | 11 சி | 12 கு |
| 13 ணா | 14 து | 15 அ | 16 ந் | 17 ண் | ■ |
| 19 மூ | 20 த் | 21 ம் | 22 த | 23 ர் | 24 ச |
| 25 ச் | 26 ச | 27 ரு | 28 ம் | 29 அ | 30 ன |
| 31 சி | 32 பா | 33 க | ■ | ■ | 36 ம் |

### இடமிருந்து வலம்

01. ஒரு பிரபல்யமான பெண். ஜனநாயகத்தின் போராளி என அழைக்கப்படுகின்றார்.
04. பாயாசத்துடன் கலப்பதற்கு உதவுவது (குழம்பியுள்ளது)
07. சிவனொளிபாத மலை அமைந்துள்ள மாவட்டம். (முதலெழுத்து தவறி குழம்பியுள்ளது)
13. செலவு ; சூரியன் செல்லும் பாதை. (குழம்பியுள்ளது)
19. இசைப்பாட்டு ; காடு.
23. இரவு ; நலம்
25. உபாயம். (குழம்பியுள்ளது)
31. முதலாவது அப்துல் கலாம் விருதினைப் பெற்ற பெண் விஞ்ஞானி. (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01. ஒரு பூச்செடி.
02. தோத்திரம் ; துதி ; புகழ். (குழம்பியுள்ளது)
04. கடுக்காய் ; அரபி. (திரும்பியுள்ளது)
06. ஒரு மனிதனுக்கு மிக முக்கியமானதும், சிறந்த எதிர்காலத்திற்கு உறுதிதருவதும் இது. (குழம்பியுள்ளது)
09. திரவிரம் ; பாய்தல். (குழம்பியுள்ளது)
23. இலை ; உப்பரிகை. (குழம்பிள்ளது)
28. சந்திரன். (திரும்பியுள்ளது)

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **21.09.2015** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - **641**
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.639 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எம்.அஸ்வினி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. எம்.சிவானந்தம், புலோலி மத்தி, பருத்தித்துறை.
02. சு.நவநீதன், சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
03. என்.அனுசியா, பிரதான வீதி, வவுனியா.
04. எஸ்.சியாம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
05. பொ.வரதராஜா, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
06. வ.மாணா, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.
07. த.சிந்துஜன், அராலி மேற்கு, அராலி.
08. இ.சங்கர், பிரதான வீதி, நுவரெலியா.
09. கே.கவிதாஞ்சலி, ரெட்பானா, விசுவமடு.
10. எஸ்.நியான், வாகரை, மட்டக்களப்பு.



கத்துக்குட்டி



கோ – 2



நாயகி

# நான் யாருடனும் நெருங்கிப் பழகவில்லை: அசின்

மைக்ரோமேக்ஸ் நிறுவனர் ராகுல் ஷர்மாவை காதல் திருமணம் செய்ய இருக்கும் அசின் திருமணத்திருக்குப் பிறகும் நடிப்பேன் எனக் கூறியுள்ளார்.

இந்நிலையில் ரெடி படவேளையில் சல்மான்கான் அசினுக்கு பங்களா ஒன்றைக் கொடுத்ததாகவும், அக்ஷய் குமாருடன் அசினுக்கு நெருக்கம் என பல வதந்திகள் இந்தியில் பரவின. இந்நிலையில் இதற்கெல்லாம் பதில் கூறியுள்ளார் அசின்.

அவர் கூறுகையில், என் திரையுலக வாழ்க்கை நன்றாகப்போகிறது. சில வதந்திகளும் என்னைப் பற்றி வந்தன. அதற்காக வருந்தவில்லை. என்னைப் பொறுத்தவரை, எந்த கதாநாயகனுடனும் நான் நெருங்கிப்பழகியது இல்லை. ஒவ்வொருவருடனும் தொழில் ரீதியான தொடர்பு மட்டுமே இருந்தது. எப்போதும் நான் ஒதுங்கியே இருந்தேன். சினிமாவில் தொடர்ந்து நடிப்பேன் எனவும் கூறியுள்ளார் அசின்.

## இளம் ஹீரோ - ஹீரோயின்கள் திண்டாட்டம்

கார்த்திக் மகன் கவுதம், மணிரத்னம் இயக்கிய கடல் படம்மூலம் அறிமுகமானார். ரொம்பவே எதிர்பார்க்கப்பட்ட இவருக்கு படவாய்ப்புகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகவே வந்தது. அவர் நடித்து வெளியான வை ராஜா வை. என்னமோ ஏதோ படங்களும் கைகொடுக்காததால் சோர்ந்திருக்கிறார். தோல்வி படங்களால் அடுத்தடுத்து நடித்துவந்த சிப்பாய், இந்திரஜித், ரங்கூன் போன்ற படங்கள் அப்படியே முடங்கிக்கிடக்கிறது.

அதேபோல் முரளி மகன் அதர்வாவுக்கும் பரதேசி. இரும்பு குதிரை, சண்டிவீரன் போன்ற படங்களில் நல்ல நடிகர் என்ற பெயர் பெற்றாலும் கமர்ஷியல் ஹீரோவாக வெற்றிபெறாத தால் அடுத்தடுத்து நடிக்கும் ஈட்டி, கணிதன் படங்களின் படப்பிடிப்பு ஆமை வேகத்தில் நடக்கிறது.

தமிழில் இந்தியா பாகிஸ்தான் படம்மூலம் நடிக்க வந்தவர் சுஷ்மா ராஜ். அனுஷ்கா சாயலில் இருப்பதாக வர்ணிக்கப்பட்டார். ஆனால் படம் ஹிட்டாகாததால் ஒரே படத்தோடு ஓய்ந்துவிட்டார். இது என்ன மாயம் கீர்த்திக்கும் அடுத்து வெற்றி படம் அமையாவிட்டால் என்ன செய்வது என்ற பயத்தில் அவரை ஒப்பந்தம் செய்தவர்கள் இருக்கிறார்களாம். சீனியர் ஹீரோயின்களின் ஆதிக்கமே இன்னும் நீடிப்பதால்தான் புதுமுகங்களின் பாடு திண்டாட்டமாக இருப்பதாக கோலிவூட் வட்டாரங்கள் சொல்கின்றன.

## முத்தமா நடுக்கம் ஹீரோ?

காமெடி கலந்த காதல் கதையாக உருவாகிறது நவரச திலகம். இதுபற்றி இயக்குனர் காம்ரன் கூறியது: ஒரே டீல் ஓஹோன்னு வாழ்க்கை என ரியல் எஸ்டேட் தொழிலில் குதிக்கும் ஹீரோ பிறகு ஒரு பெண்ணை கண்டு காதலில் விழுகிறார். இந்த காதலுடன் குடும்ப சூழலும் இணைந்துகொள்கிறது. காதல் ஜோடிகளாக மா.கா.பா ஆனந்த், சிருஷ்டி டாங்கே நடிக்கின்றனர். ஒரு காட்சியில் சிருஷ்டிக்கு உதட்டில் முத்தம் தரும் காட்சி படமாக்கப் பேசப்பட்டது. முதலில் ஒப்புக்கொள்ள மறுத்த சிருஷ்டி பிறகு ஓ.கே.சொன்னார். இதற்காக எல்லோரையும் வெளியே அனுப்பிவிட்டு ஹீரோ ஆனந்த்தை நடிக்க அழைத்தபோது அவர் பயந்து நடிக்க மறுத்துவிட்டார். இதனால் அக்காட்சி படமாக்கப்படவில்லை. கருணாகரன், ஜெயபிரகாஷ், இளவரசு உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். ரமேஷா ஒளிப்பதிவு. சித்தார்த் விபின் இசை. சுதர்சன் வெம்பட்டி தயாரிப்பு. இவ்வாறு இயக்குனர் கூறினார்.

## என் தங்கை நடிக்கிறாரா? - அஞ்சலி

அங்காடி தெரு அஞ்சலி தான் உண்டு தன்வேலை உண்டு என்றிருந்தார். தனது சித்தியுடன் ஏற்பட்ட மோதலுக்கு பிறகு பரபரப்பாகிவிட்டார். தமிழுக்கு ஒரு வருடம் முழுக்கு போட்டுவிட்டு தெலுங்கு படங்களில் நடிக்கச் சென்றவர் சமீபத்தில் சகலகலா வல்லவன் படம்மூலம் மீண்டும் தமிழில் நடிக்கவந்தார். இந்நிலையில் அஞ்சலியின் தங்கை ஆராத்யா தமிழில் ஹீரோயினாக அறிமுகமாகிறார் என்று தகவல் வெளியானது. அதைக் கேட்டு ஷொக் ஆனார் அஞ்சலி. இதுபற்றி அவர் தரப்பில் கூறும்போது, அஞ்சலியின் தங்கை படத்தில் அறிமுகமாவதாக சமீபத்தில் ஒரு தகவல் வெளியானது. அது தவறானது. அஞ்சலிக்கு ஒரு சகோதரிதான் இருக்கிறார். அவர் சினிமாவில் கிடையாது. மற்றபடி வேறு சகோதரிகள் யாரும் அஞ்சலிக்கு இல்லை. அதுபோல் யாரும் நடிகையாக அறிமுகமும் ஆகவில்லை என்றனர்.



நவரச திலகம்

## சின்மயி மீது அடிக்(கடி) தாக்கும்

பாடகி சின்மயி சமீபத்தில் தனது டுவிட்டர்
பக்கத்தில் ஒரு ஜோக் பகிர்ந்துகொண்டார். இ
மறைமுகமாகமாக தாக்குவதுபோல் இருந்த
படித்துவிட்டு அஜீத் ரசிகர்கள் கோபம் அடைந்த
சின்மயியை கண்டித்து அவர்கள் கருத்து
அதைக்கண்டு கோபம் அடைந்த சின்மயி
வெளியிட்டார். இவர்களின் மோதலை க
கணவரும், நடிகருமான ராகுல் ரவீந்திர
அடைந்தார். அவர் கூறும்போது, என் மனைவி
யம் சர்ச்சையாக்கப்பட்டுள்ளது. இதற்கு பல
கருத்துவெளியிட்ட வண்ணம் உள்ளனர்.
விமர்சனங்களை கண்டுகொள்ள வேண்
சின்மயியிடம் நான் கூறி உள்ளேன்.
ஆனால் சின்மயி என்னைபோல் எதையும்
ளும் தன்மைகொண்டவர் அல்ல. இளகிய ம
இதனால் விமர்சனங்கள் அவர் மனதை ப
இவற்றில் சில விமர்சனங்கள் விரும்பத்தகாத
புண் படுத்தும்வகையில் உள்ளது. இவற்றில்
ரசிகர்களும் கிடையாது எனக் குறிப்பிட்டிருந்த

## 60 வயது பெண்ணா நடிக்கும் வேதிகா

பரதேசி, காவியத்தலைவன் ஆகிய படங்
வேதிகா, தற்போது பிரபுதேவா தயாரிக்க
வினோதன் படத்தில் நடிக்க இருக்கிறார். இதி
மறைந்த பிரபல நடிகர் ஐசரி வேலனின் பேரன்
ஜோடியாக நடிக்க இருக்கிறார். இப்படத்
ஜெயராஜ் இயக்கவுள்ளார். வருணுக்கு ஜோ
முன்னணி நடிகைகளை தேடிவந்தனர்.
வேதிகாவை தேர்வுசெய்தனர்.
புது படத்தில் நடிப்பது மட்டுமல்லாமல்
தயாரிப்பில் நடிப்பதன்மூலம் இரட்டிப்பு
இருக்கும் வேதிகா. இப்படத்தில் இர
கதாபாத்திரங்களில் நடிக்க இருக்கிறாராம்.
மாணவியாகவும் மற்றொன்று 60 வயது பெ
நடிக்க இருக்கிறாராம். இதற்குமுன் இந்தி
நடிகை சுகன்யா இளம் வயது பெண்ணாகவு
பெண்ணாகவும் நடித்திருந்தார். இதில்
நடிப்பு பேசப்பட்டது. இதுபோன்று வேதிகா
கதாபாத்திரமும் பேசப்படுமாம். சைக்க
ரொமான்டிக் திரில்லராக உருவாக இருக்கும்
படப்பிடிப்பு இம்மாதம் தொடங்க இருக்கிறது.

## புதிய படத்தில் ஜோதிகா ஒ

முன்னணி நடிகையாக வலம் வந்த ஜோதிகா
திருமணத்திற்குப் பிறகு படங்களில் நடிக்காமல்
நீண்ட இடைவேளைக்குப் பிறகு மலையாள ரீமே
36 வயதினிலே என்ற படம்மூலம் மீண்டும் கொடு
நடிகைக்கு முக்கியத்துவம் உள்ள இந்த படத்
ஜோதிகாவின் நடிப்பு அனைவராலும் பாராட்டப்ப
இடைவேளைக்குப் பிறகு நடித்தாலும் முன்பு இரு
துறுதுறு நடிப்பால் ரசிகர்களை மிகவும் கவர்ந்
இப்படத்தின் வெற்றியையடுத்து நல்ல கதை
கொண்ட படங்கள் கிடைத்தால் கண்டிப்பாக நடி
என்று கூறிய ஜோதிகா, தற்போது புதிய படம் ஒ
ஒப்பந்தம் செய்திருப்பதாக கூறப்படுகிறது. மேலு
விளம்பரங்களில் நடிக்கவும்
ஜோதிகாவுக்கு வாய்ப்புகள்
வண்ணம் உள்ளது. தற்போ
ஒரு விளம்பரத்தில் நடிப்பத
மும்பையில் முகாமிட்டிருக்
மீண்டும் நடிப்பில் கவன
செலுத்துவதால் தன் குடு
எந்த விதத்திலும் பாதிக்க
ஜோதிகா கூறியிருக்கிறார்





இஞ்சி இடுப்பழகி



## லிப் டு லிப் கிஸ் கோபத்தில் ஹீரோவின் மனைவி

நான் ஈ படத்தில் ஹீரோவாக நடித்தவர் நானி. தெலுங்கில் பல்வேறு படங்களில் நடித்துவருகிறார். அவர் கூறியது: என் மனைவி அஞ்சனா. நான் நடித்த ஆஹா கல்யாணம் படத்தை அவருக்கு அழைத்துச் சென்று காட்டினேன். ஹீரோயினுடன் லிப் டு லிப் முத்தக்காட்சியில் நான் நடித்திருந்தேன். அதைப் பார்த்ததும் என் மனைவி கோபம் அடைந்து தியேட்டரைவிட்டு வெளியேறிவிட்டார். செல்லமாக கோபித்துக்கொள்கிறார் என்று நினைத்தேன்.

ஆனால் மேற்கொண்டு அந்த படத்தை அவர் பார்க்க மறுத்துவிட்டார். அந்த சூழலை எப்படி சமாளிப்பது என்று தெரியாமல் தவித்தேன். படம்பற்றி பல்வேறுவிதமாக பேசப்பட்டாலும் அதைவிட அதிகமாக என் மனைவியை நினைத்துதான் வருத்தப்பட்டேன். என் இமேஜ் உடைந்ததுபோல் உணர்ந்தேன்.

இந்த சம்பவத்துக்குப் பிறகு இனிமேல் லிப் டு லிப் முத்தக்காட்சியில் நடிப்பதில்லை என்று முடிவுக்கு வந்தேன். சில ஹீரோக்கள் இருக்கிறார்கள். இதுபோன்ற காட்சிகளை அவர்களது மனைவிகள் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் பக்குப்பட்டவர்களாக நடந்துகொள்கின்றனர்.

## ...ி மீது அடிக்(கடி) தாக்கும் ரசிகர்கள்

...சின்மயி சமீபத்தில் தனது டுவிட்டர் இணையத்தள ... ஒரு ஜோக் பகிர்ந்துகொண்டார். இது அஜீத்தை ...ாகமாக தாக்குவதுபோல் இருந்ததாம். இதை ...டு அஜீத் ரசிகர்கள் கோபம் அடைந்தனர்.

...யியை கண்டித்து அவர்கள் கருத்து வெளியிட்டனர். ...ண்டு கோபம் அடைந்த சின்மயி எதிர்கருத்து ...டார். இவர்களின் மோதலை கண்டு சின்மயி ..., நடிகருமான ராகுல் ரவீந்திரன் அதிர்ச்சி ...ர். அவர் கூறும்போது, என் மனைவி பகிர்ந்த விஷ ...சையாக்கப்பட்டுள்ளது. இதற்கு பலர் விமர்சித்து ...ளியிட்ட வண்ணம் உள்ளனர். இதுபோன்ற ...களை கண்டுகொள்ள வேண்டாம் என்று ...டம் நான் கூறி உள்ளேன்.

...ல் சின்மயி என்னைபோல் எதையும் தாங்கிக்கொள் ...மைகொண்டவர் அல்ல. இளகிய மனதுடையவர். ... விமர்சனங்கள் அவர் மனதை பாதித்துள்ளது. ...சில விமர்சனங்கள் விரும்பத்தகாத அளவில் ...தும்வகையில் உள்ளது. இவற்றில் பலர் அஜீத் ...ம் கிடையாது எனக் குறிப்பிட்டிருந்தார்.

## ...60 வயது பெண்ணாக நடிக்கும் வேதிகா

...சி, காவியத்தலைவன் ஆகிய படங்களில் நடித்த ... தற்போது பிரபுதேவா தயாரிக்க இருக்கும் ...ன் படத்தில் நடிக்க இருக்கிறார். இதில் வேதிகா, ...பிரபல நடிகர் ஐசரி வேலனின் பேரன் வருணுக்கு ...க நடிக்க இருக்கிறார். இப்படத்தை விக்டர் ... இயக்கவுள்ளார். வருணுக்கு ஜோடியாக பல ... நடிகைகளை தேடிவந்தனர். கடைசியாக ...வை தேர்வுசெய்தனர்.

...படத்தில் நடிப்பது மட்டுமல்லாமல் பிரபுதேவா ...ல் நடிப்பதன்மூலம் இரட்டிப்பு மகிழ்ச்சியில் ... வேதிகா. இப்படத்தில் இரண்டுவிதமான ...திரங்களில் நடிக்க இருக்கிறாராம். ஒன்று பள்ளி ...ாகவும் மற்றொன்று 60 வயது பெண்ணாகவும் ...இருக்கிறாராம். இதற்குமுன் இந்தியன் படத்தில் ...கன்யா இளம் வயது பெண்ணாகவும், 60 வயது ...ாகவும் நடித்திருந்தார். இதில் சுகன்யாவின் ...பேசப்பட்டது. இதுபோன்று வேதிகா நடிக்கவுள்ள ...திரமும் பேசப்படுமாம். சைக்கலோஜிக்கல் ...் திரில்லராக உருவாக இருக்கும் இப்படத்தின் ...பு இம்மாதம் தொடங்க இருக்கிறது.

## ...படத்தில் ஜோதிகா ஒப்பந்தம்

...ணி நடிகையாக வலம் வந்த ஜோதிகா, ...திற்குப் பிறகு படங்களில் நடிக்காமல் இருந்தார். ...வேளைக்குப் பிறகு மலையாள ரீமேக்கான ...லே என்ற படம்மூலம் மீண்டும் கொடுத்தார். ... முக்கியத்துவம் உள்ள இந்த படத்தில் ...ின் நடிப்பு அனைவராலும் பாராட்டப்பட்டது. நீண்ட ...ளக்குப் பிறகு நடித்தாலும் முன்பு இருந்த அதே ...டிப்பால் ரசிகர்களை மிகவும் கவர்ந்தார். ...தின் வெற்றியையடுத்து நல்ல கதையம்சம் ...டங்கள் கிடைத்தால் கண்டிப்பாக நடிப்பேன் ... ஜோதிகா, தற்போது புதிய படம் ஒன்றில் நடிக்க ...செய்திருப்பதாக கூறப்படுகிறது. மேலும் நிறைய விளம்பரங்களில் நடிக்கவும் ஜோதிகாவுக்கு வாய்ப்புகள் வந்த வண்ணம் உள்ளது. தற்போது ஒரு விளம்பரத்தில் நடிப்பதற்காக மும்பையில் முகாமிட்டிருக்கிறார். மீண்டும் நடிப்பில் கவனம் செலுத்துவதால் தன் குடும்பத்தை எந்த விதத்திலும் பாதிக்காது என்று ஜோதிகா கூறியிருக்கிறார்.

## இஞ்சி இடுப்பழகி படத்தில் தேவர் மகன் பாடல்!

ஒரு பட த்தின் டீஸருக்கும், டிரெய்லருக்கும் காத்திருக்கிறோம் எனில் அது கண்டிப்பாக பெரிய ஹீரோவோ அல்லது பெரிய இயக்குநராகவோ மட்டுமே இருக்கவேண்டும். ஒரு ஹீரோயினால் காத்திருக்கிறோம் என்றால் அது நீண்ட வருடங்களுக்குப் பிறகு இந்த வருடம் தான் இரண்டு படங்களுக்கு நடந்துள்ளது. அதில் ஒன்று ஏற்கனவே வெளி யான ஜோதிகாவின் 36 வயதினிலே. இப்போது அனுஷ்காவின் இஞ்சி இடுப்பழகின்.

படத்தின் டீஸர் அண்மையில் வெளியான நிலையில் பர்ஸ்ட் லுக் போஸ்டரிலேயே பலரையும் அதிர்ச்சியிலும் ஆச்சரியத்திலும் ஆழ்த்திய அனுஷ்கா இப்போது டீஸரில் அனைவரையும் உறைய வைத்துள்ளார். உடலை இறக்கி ஸ்லிம் பிட்டாக்க ஹீரோயின்கள் படாத பாடுபடும் நிலையில் அனுஷ்கா பல கிலோக்களை ஏற்றி குண்டாக டீஸரில் வ... அனுஷ்காவின் ரசிகர்களுக்கு பேரிடியாக மாறியுள்ளது.

அடடே, ஒரு ஹீரோயின் படத்தின் கதைக்காக இப்படி மெனெக்கெடுவது இதுதான் முதல் முறை எனவும் பல இயக்குநர்கள், சினிமா பிரபலங்கள் எனப் பாராட்டத் துவங்கியுள்ளனர். இந்நிலையில் படத்திற்கு இன்னும் மெருகு சேர்க்கும்விதமாக தேவர் மகன் படத்தின் இஞ்சி இடுப்பழகி பாடல் இடம்பெற இருக்கிறதாம்.

படத்தின் ஒரு சீனில் அனுஷ்காவும், ஆர்யாவும் தேவர் மகன் பாடல் இஞ்சி இடுப்பழகி பாடலை ரசித்துக்கொண்டிருக்க இருவரும் அந்தப் பாடலில் தங்கள் இருவரையும் கற்பனைசெய்து கொள்வதுபோல் காட்சி இடம்பெற்றுள்ளதாம். எது எப்படியோ நீண்டநாட்கள் கழித்து ஹீரோயினை முழுக்க முழுக்க நம்பி ஒரு படம். சொல்லப்போனால் விஜயசாந்தி காலத்திற்கு பிறகு என்றுகூட சொல்லலாம்.

## மீண்டும் வருகிறார் பழைய நமீதா

விஜயகாந்த் நடித்த எங்கள் அண்ணா படத்தின்மூலம் தமிழுக்கு வந்த நமீதா, தொடர்ந்து விஜய், அஜித் உட்பட பெரும்பாலான முன்னணி நடிகர்களுடன் நடித்தார். கடைசியாக 2011 இல் வெளிவந்த இளைஞன் படத்தில் நடித்திருந்தார். தொடர்ந்து சில கன்னடப்படங்களில் நடித்தார். இங்கு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். இதற்கிடையே அவருடைய உடல் எடை கூடிவிட்டது. சுமார் 92 கிலோ இருந்தாராம். அதனால் நமீதா இப்படியாகிவிட்டாரே என்று பலரும் விமர்சனம் செய்யும் நிலை ஏற்பட்டது. திடீரென் கொஞ்சக்காலம் அவரை எங்குமே பார்க்க முடியவில்லை. அதற்குக் காரணம், தன்னுடைய உடல் எடையைக் குறைத்து பழைய நமீதாவாக ஆகவேண்டும் என்று உழைத்திருக்கிறார். இதன்விளைவு சுமார் இருபது கிலோ குறைந்து பழைய நிலைக்கு வந்துவிட்டாராம். அதேபோல் தமிழில் நடிக்கவும் ஒப்பந்தமாகியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.



# தேன் கிண்ணம்



## கிட்டா பரிசு



எனதைந்தாவது
பிறந்த தினத்தில்
அம்மா கேட்டாள் என்னை
என்ன வேணுமென்று
பெரிய கரடி பொம்மையென்றேன்
அம்மா வாங்கித் தந்தாள்.

எனது பத்தாவது
பிறந்த தினத்தில்
அம்மா கேட்டாள் என்னை
என்ன வேணுமென்று
குலுங்கும் ஜிமிக்கியென்றேன்
அம்மா வாங்கித் தந்தாள்.

எனது பதினைந்தாவது
பிறந்ததினத்தில்
அம்மா கேட்டாள் என்னை
என்ன வேணுமென்று
கவிதைப் புத்தகங்களென்றேன்
அம்மா வாங்கித்தந்தாள்.

எனது இருபதாவது
பிறந்த தினத்தில்
அம்மா கேட்டாள் என்னை
என்ன வேணுமென்று
ஒரு வெட்கப் புன்னகையுடன்
உள்ளே ஓடினேன்
அம்மாவால் வாங்கித்தர
முடியவில்லை.

இப்பொழுதெல்லாம்
பிறந்த நாளன்று
என்ன வேணுமென்று
அம்மா கேட்பதில்லை
இன்று என் முப்பதாவது
பிறந்த தினத்திலும்
என் கட்டிலில் கிடப்பவை
கரடி பொம்மையும்
கவிதைப் புத்தகங்களுமே!

அ.சந்தியாகோ - கண்டி

## வக்கற்றவன்!



ஒவ்வொரு நாட்களிலும் ; அதனுள்
ஒவ்வொரு கணங்களிலும்
'சிறப்புமிக்கவர்களால்'
சிறுமைப்படும் பொழுதினில்தான்
சிறகடித்துப் பறக்கின்றன எனக்குள்
சிந்தனைகள் புதியனவாய்.

நேரிடையாய்
நிந்திக்கும் ஒவ்வொரு சொற்களும்
ஏதோ ஒரு வகையில்
ஏதோ ஒரு வடிவத்தில்
இலகுவாக்குகின்றன பாதையை
மீண்டுமாய்
எழுந்து ஏறுநடைபோட!

என் மென்னுணர்வுகளை வதைக்கும்
சுடு வார்த்தைகளினாலான வலிக்கு
புன்சிரிப்பற்ற
எனது மௌனமே அமைகிறது
ஒரு மறுபதிலாக...

இப்பொழுதும்
எனக்குள்ளே
ஒரு
நலிவுறா நம்பிக்கை!

"வக்கற்றவன்..."
என்றதொரு வசைச் சொல்
நாளைய ஒரு வரவில்
அட்ட திக்குகளுக்குமப்பால்
அறிமுகப்படுத்தும்
எனக்குள்ளான ஆளுமைகளை.

வறுமையே!
நீ – தொடர்ந்தும்
என்னுடன் இருந்துவிட்டுப் போ...
மேலும்
இந்த வாழ்க்கையைப் படிப்பதற்கு!
வசதியுள்ள மனிதர்களை அறிவதற்கு!

## உன் பழைய கடிதங்கள்

பெட்டி மீது
தூங்கிக் கொண்டிருந்த
பழைய புத்தக மூட்டை
பார்வைக்கு வந்தது.
வீட்டுச் சுவர்கள்
வெள்ளை
பூசிக் கொண்ட போது!

வசீகர இளமையின்
வாசல் படிகளில்
அமர்ந்து படிநீ எழுதிய

காதல் கடிதங்களின்
கட்டு என்
கைக்குக் கிடைத்தது
தானிய மணிகளின்
நடுவில் ஒரு
தங்க மணி மாதிரி!

எத்தனை முறை
பார்த்தாலும்
அலுத்துப் போகாத
உன் எழுத்துக்கள்!

ஒவ்வொரு கடித
உறையிலும்
உன்
கூந்தல் வாசனையில்
குடியிருந்து
குடிபெயர்ந்த
மல்லிகைப் பூக்கள்..!

எங்கே மறந்து போகும்
என் பிறந்த நாளை
மறவாமல் நீ
அனுப்பி வைத்த
வாழ்த்துப் பாடல்கள்!

ஓ...!
உன் கடிதங்கள்
காதலன் என்கிற
கர்வத்தோடு
அவற்றை வாசித்த
காலங்கள்
உண்டு.
இப்போது
குற்றவாளியைப் போல்
குறுகுறுத்துப் போகிறேன்.

காதல் பயிர்
எங்கெங்கே வளர்கிறது
என்று கவனிக்க தெரியவில்லை.

விதைக்கத்தான் தெரிகிறது.
உங்கள் விழிகளுக்கு!

கே.வாஸேந்திரன், கொள்ளுப்பிட்டி

## கொட்டு மேளம் கட்டு தாலி!



தலைவனைத் தொழு தெழுந்
தலைவியைக் காணேன்!
கவரியை மதித்தொழுகிடும்
மானைக் காணேன்!
தலை விரித்தெறியாத்
தமிழினியைக் காணேன்!
குனிதலை நடந்த எம்
குலம்(ம்) வழி காணேன்!
கொங்கனி மறைக்குந்
தாவணி காணேன்!
நங்கையற் குரிய
நான்கையுங் காணேன்!
சான்றோர்கள் சாற்றிய
சங்கையுங் காணேன்!

நாகரீக
மோகமான
வெள்ளம் வந்து
நல்லதெல்லாம்
அள்ளிப்போக...
எஞ்சியிருப்பதுவோ
இஞ்சிக் கிழங்களவில்...
"கொட்டு மேளம்!
கட்டு தாலி!"
மற்றெல்லாங்
காலியாகி - எங்கள்
மறைப் பண்புகள்
கேலியாகிப் போகலாமா?


பாண்டியூர் பொன். நவநீதன்

## காதல்

காதல் என்பது...
ஒருவனுக்கு
அல்லது
ஒருத்திக்கு
இதயத்தைக்
கொடுத்துவிட்டு
அதற்காக
ஒரு ஓரமாய் நின்று...
அழுதுகொண்டிருப்பதா?

நெருங்கிப் பழகுவதைவிட
தனித்து இருந்து
உணர்வதில்தான்
வேகமாய் வளர்கிறது
காதல்...
இதை நீ
உணர்த்திவிட்டாய்
எனக்குள் வளர்கிறது
காதல்...

எ.எம்.சமீர், கம்பளை.



- ஜோசப் கிருஷ்ணா -



# இது ஆலமரம் : அசையாது

இலங்கைக் கிரிக்கெட் அணி தற்பொழுது ஒரு கடினமான காலத்தை எதிர்நோக்கியுள்ளது. ஒன்றுமே சரியாகப் போகாதநிலையில் அணித் தலைவர் ஏஞ்சலோ மெத்தியூஸ் அதிர்ஸ்டம் இல்லாத ஒரு தலைவர் என்று முத்திரை குத்தப்படுவார் போலத்தெரிகிறது. அவர் தனிப்பட தன் திறமையை வெளிப்படுத்துகிறார். ஆனால் அணியை வெல்லவைக்க முடியவில்லை என்பது உண்மை. இது ஒருபுறமிருக்க, கடந்த ஒரு வருடமாக இலங்கை அணியின் பயிற்சியாளராக இருந்த மாவன் அத்தப்பத்து இந்திய அணிக்கெதிரான 2 - 1 என்ற டெஸ்ட் தொடர் தோல்வியுடன்தான் பதவியில் இருந்து விலகியுள்ளார். இவரது பயிற்சியாளர் காலம் அவ்வளவு சிறப்பானதாக இலங்கை அணிக்கு அமையவில்லை என்பது ஒரு கசப்பான உண்மையாகும்.

இவரது பயிற்சிக் காலத்தில் கடந்த ஒரு வருடத்துக்குள் நியூசிலாந்து, பாகிஸ்தான், இந்திய அணிகளுக்கு எதிரான டெஸ்ட் தொடர்களைக் கோட்டைவிட்டது. அதுவும் இருபத்தியிரண்டு வருடங்களாக இலங்கையில் டெஸ்ட் தொடரை வெல்லமுடியாத இந்திய அணி இம்முறை டெஸ்ட் தொடரை வென்றுவிட்டது. இது இலங்கை அணிக்கு ஒரு பலத்த அடி. அதோடு கடந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் காலிறுதிக்கு அப்பால், இலங்கையால் செல்லமுடியவில்லை.

கடந்த வருடத்தில் இலங்கை இங்கிலாந்துக்கு எதிராக டெஸ்ட் தொடரை வென்றதைத்தவிர அதன் பின் தொடர்ச்சியாகத் தோல்விகளே கிடைத்தன. ஒரு நாள் போட்டிகளைப் பொறுத்தவரையிலும் இந்திய அணியிடம் 5 - 0 என்று தோற்றார்கள். அதோடு நியூசிலாந்து பாகிஸ்தான் அணிகளிடமும் ஒரு நாள் தொடர்களை இழந்தார்கள்.

எனவே, மாவன் அத்தப்பத்து தன் பதவியிலிருந்து விலகிக்கொண்டது ஒன்றும் ஆச்சரியம் இல்லை. அதோடு, இவரின் இராஜினாமாவை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கிரிக்கெட் சபையும் கூறவில்லை. எனவே இலங்கை அணிக்குப் புதிய பயிற்றுநர் ஒருவர் வரப்போகிறார் என்பது தெளிவான உண்மை. சிலவேளைகளில் மஹேல ஜயவர்த்தன இந்தப் பதவிக்கு நியமிக்கப்படக்கூடும் என்றும் ஒரு பேச்சு எழுந்துள்ளது. இந்த விடயத்தில் மஹேலவின் கருத்து இன்னும் வெளிவரவில்லை.


மஹேல தற்போது இங்கிலாந்தில் கவுன்ரி கிரிக்கெட் ஆடிக்கொண்டிருக்கிறார். அப்பால் சென்று யோசித்தால் இறைமையான இலங்கை அணி மிக மோசமாக வளரவேண்டியுள்ளது என்பது மட்டுமே தேவை. திறமைக்குக் குறைவில்லை. ஆனால், சரியான வழிகாட்டல்களுடன் அவர்களுக்கு மனத் தைரியத்தையும் கொடுத்தால்போதும். தொடர்ந்தும் அணியின் குறைகளையும், பலவீனங்களையும், புட்டுக்காட்டிப் பிரேத பரிசோதனைகளை செய்யாமல் அவர்களுக்கு தன்னம்பிக்கையை மட்டுமே நாம் கொடுக்கவேண்டும். மற்றதை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். ஒளிவீசுவார்கள்.

# மன்னிப்போம் அணைப்போம்...



தற்போது 23 வயதாகும், 2009இல் 17 வயதாக இருந்தபோதே பாகிஸ்தான் தேசிய அணியில் இடம்பிடித்தவர் இளம்புயல் வேகப் பந்துவீச்சாளர் மொகமட் அமிர். ஆனால் இவர் உட்பட சல்மான் பட், மொகமட் ஆசிப் மூவரும் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டதால் கடந்த ஐந்து வருடங்களாக இவர்கள் கிரிக்கெட் விளையாடுவதில் இருந்து தடைசெய்யப்பட்டிருந்ததுடன் இங்கிலாந்தில் சிறைத்தண்டனையையும் அனுபவித்தார்கள்.

இப்பொழுது மொகட் அமிர் சகல வகைக் கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடும் அனுமதியை ஐ.சி.சி. யால் பெற்றுள்ளனர். இனிமேல் இவர் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாட முடியும். முன்னதாக இவருடைய இளம் வயதைக் கருத்தில்கொண்டு, உள்ளூர் போட்டிகளில் விளையாட இவருக்கு ஐ.சி.சி. அனுமதியளித்திருந்தது. தற்போது எல்லா கிரிக்கெட்டிலும் விளையாடலாம் என்று இவருக்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது.



ஆனால் பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் சாதகமாகவும் பாதகமாகவும் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். முன்னாள் பாகிஸ்தான் அணித்தலைவர்களாக இருந்த ரமீஸ்ராஜா, ரசீட் லத்தீப் ஆகியோர் இவர் தேசிய அணிக்குள் வருவதைக் கடுமையாக எதிர்த்துள்ளார்கள். இதேவேளை வசீம் அக்ரம், இம்ரான்கான், சோஹெய்ப் அக்தர் ஆகியோர் இவருக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

மொகமட் அமீர் தற்போது வெகுவாகத் திருந்திய மனிதனாகக் காணப்படுகின்றார். எனது நாட்டை, நண்பர்களை, உறவுகளை, எனது ரசிகர்களை நான் புண்படுத்திவிட்டேன். நான் எல்லோரிடமும், இந்தத் தவறுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன். எனது கிரிக்கெட் வாழ்க்கை உன்னதமாக ஆரம்பித்தவேளையில் நான் செய்த பிழையை எண்ணி மிகவும் மனம் வருந்துகின்றேன். எனது அணி வீரர்களையும், மூத்த வீரர்களையும் நான் அவமதித்துவிட்டேன். இதற்காக நான் மனம் வருந்துகிறேன். எதிர்காலத்தில் நான் உங்கள் எல்லோருடைய நம்பிக்கைகளையும், அன்பையும் பெற்றுக்கொள்ள ஆசைப்படுகின்றேன். எனது உண்மையான திறமையை எதிர்காலத்தில் வெளிப்படுத்துவதன்மூலம் அத்தனை அன்பையும் பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. இதுவே எனது பழைய வாழ்க்கையை மறந்து, புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க நல்ல வழியாக இருக்கும் என நம்புகின்றேன் என்று கூறியுள்ளார்.





# இரவும் பகலும்

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளின்மீது கிரிக்கெட் ரசிகர்களின் ஆர்வத்தை அதிகப்படுத்த ஐ.சி.சி பலவித புதிய முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது. அதில் ஒன்றுதான் டெஸ்ட் ஆட்டங்களை இரவு, பகல் ஆட்டங்களாக நடாத்துவதிலும் றோஸ் நிறப் பந்தைப் பாவிப்பதும் ஆகும். பொதுவாக காலை முதல் மாலை வரை டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுவதால் பெரிய ரசிகர்கள் கூட்டத்தை மைதானத்துக்கு ஈர்த்துக்கொள்ள முடியவில்லை. அந்த நேரம் எல்லோரும் தங்கள்தங்கள் வேலைகளுக்குப் போகும் நேரம். அதோடு பாடசாலைப் பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகும் நேரம்.

எனவே நேரத்தை மாற்றுவதன் ஊடாக அதிகளவு ரசிகர்களை ஈர்க்கமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இந்த மாற்றத்தை மஹேல ஜயவர்தன அவ்வளவாக ஏற்றுக்கொள்ளவில்லை போலத்தெரிகிறது. டெஸ்ட் போட்டிகள் ஒரு கிரிக்கெட் பாரம்பரியத்தின் அடையாளமாகும். ஏறத்தாள 200 வருடங்களாக விளையாடும் ஒரு போட்டியின் தன்மையை மாற்றக்கூடாது. வெண்ணிற ஆடைகளும், சிவப்புநிறப் பந்தும் மறைந்துவிடக்கூடாது.

கிரிக்கெட் உலகில் மாற்றப்படவேண்டிய பல விடயங்கள் இருக்கின்றன. அவற்றை முதலில் செய்யலாம். எனவே டெஸ்ட் போட்டிகளின் அமைப்பை மாற்றக்கூடாது என்றும், அதோடு இரவு நேரக்காலநிலை மாற்றம் டெஸ்ட் போட்டிகளுக்குச் சாதகமாக இராது என்றும் கூறியுள்ளார். இருந்தும் இவரதும், இவர் போன்ற இன்னும் பலரதும் பாரம்பரியத்தை மாற்றக்கூடாது. என்ற விருப்பம் எந்தளவிற்கு நிறைவேறும் என்று சரியாகச் சொல்லத் தெரியவில்லை. ஏனெனில் இப்போதைய காலப்பகுதி, டெஸ்ட் போட்டிகளை இரவு - பகல் ஆட்டங்களாக நடத்தலாமா என்று ஆராயும் காலமல்ல. அதெல்லாவற்றையும் கடந்து, இரவு, பகல் ஆட்டங்களாக நடாத்துவது என்று முடிவும் செய்யப்பட்ட காலம்.

அந்தவகையில் அவுஸ்திரேலியா அடிலெய்ட் மைதானத்தில் நவம்பரில் அவுஸ்திரேலிய, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது இரவு - பகல் டெஸ்ட் போட்டி நடைபெறவுள்ளது. சிலவேளைகளில் இந்த ஆட்டத்தின் பின்னர் இதன் சாதகபாதகங்கள் ஆராயப்படக்கூடும். எனினும் ஒரு பாரம்பரிய ஆட்டத்தை, புதிய முறையில் பர்ப்பதற்கான ஆர்வம் ரசிகர்கள் மத்தியில் உண்டு என்பதையும் மறுக்கமுடியவில்லை.

# விரைவில் வருவார்....

2006ஆம் ஆண்டு மகளிர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கு நியூசிலாந்து சென்றிருந்த இலங்கை மகளிர் அணியினர் வரும் நவம்பரில் நியூசிலாந்து இலங்கைத் தொடர் ஒன்றுக்காக மீண்டும் நியூசிலாந்துக்குச் செல்லவுள்ளனர். இந்த அணியில் இருபது பேர் அங்கம் வகிக்கின்றனர். ச்சிகலா சிறிவர்தன அணித் தலைவியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர்கள் நியூசிலாந்து மகளிர் கிரிக்கெட் அணிக்கு எதிராக ஐந்து ஒரு நாள் போட்டிகள், மூன்று இருபதுக்கு இருபது போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளன.


இன்னொரு செய்தியாக இலங்கை அணியின் புதிய சுழல்பந்து வீச்சாளர் தரிந்து கௌசால் மீது சந்தேகத்துக்கிடமான முறை தவறி பந்துவீச்சு என்பதுபோல் குற்றஞ்சுமத்தப் பட்டுள்ளது. இந்திய அணிக்கு எதிரான மூன்று டெஸ்ட் போட்டிகளின் பின்பே இவர் மீதான குற்றச்சாட்டு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. கடந்த டிசம்பரில் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமான தரிந்து ஆறு டெஸ்ட் போட்டிகளில் விளையாடியவர். இருபத்தியிரண்டு வயது மட்டுமேயான தரிந்து தனது திறமையை இதுவரை 24 விக்கெட்டுக்கள் பெற்றதன்மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

37 வயதாகும் ரங்கண ஹேரத்தின் காலத்தின் பின் அந்த இடத்தை நிரப்பப் போகிறவர் தரிந்து என்றும் எதிர்பார்க்கப்படுபவர். தற்போதைக்கு இவர் பற்றிய அறிக்கை ஆய்வில் உள்ளது. ஐ.சி.சி அதன் முடிவுகளை வெளியிடும்வரை தரிந்து கிரிக்கெட் ஆடுகளத்தில் தடை இல்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரோபரில் மேற்கிந்தியத் தீவுகள் இலங்கையில் ஐந்து இரண்டு டெஸ்ட், மூன்று ஒரு நாள் போட்டிகளில், இரண்டு இருபதுக்கு இருபது போட்டிகளில் விளையாடியுள்ளனர். அந்தக் காலகட்டத்தில் தரிந்து விளையாட அனுமதியைப் பெற்றுவிடுவாரோ என்று தெரியவில்லை. சில குறைபாடுகள் இருந்தால் அவற்றை நீக்கிக்கொண்டு தொடர்ந்தும் அவர் சர்வதேச அரங்கில் இருப்பார் என்பது நிச்சயம்.




# முகம் கறுத்துவிட்டதா?



பெண்கள் மட்டுமில்லாது ஆண்களுக்கும் ஏற்படும் பொதுவான கவலை முகம் கறுத்துவிட்டது என்பதுதான்.

வெயில், மாசு போன்றவற்றால் நமது முகம் கருமையடையக் கூடும். எனினும் ஒரு சில முறைகளை நாம் தொடர்ந்து செய்துவந்தால் நமது முகத்தை எப்போதும் பொலிவுடன் வைத்திருக்கலாம்.

மலைகளில் கிடைக்கும் தேனுடன் பால் கலந்து முகத்தில் பூசவேண்டும். பின்னர் சிறிதுநேரம் கழித்து கழுவினால், முகம் பொலிவுடன் காணப்படும்.

இதேபோல் பச்சை உருளைக்கிழங்கின் சாறை முகத்தில் தடவிவந்தால் வெயிலின் தாக்கத்தால் ஏற்படும் கருமை நிறும் மறையும். மேலும் வாழைப்பழத்தை மசித்து பால், தேனுடன் சேர்த்து தினமும் முகத்தில் தடவிவந்தால் கண்டிப்பாக பொலிவுபெறும்.

நாட்டுமருந்து கடைகளில் முல்தானிமட்டி கிடைக்கும். அதனுடன் சந்தனம், பன்னீர், எலுமிச்சை சாறு மற்றும் முட்டையின் வெள்ளைக்கரு ஆகியவற்றை கலந்து உபயோகித்துவந்தால், முகம் எப்போதும் பிரகாசமாக மின்னும். இதுபோல் முகத்தில் கரும்புள்ளி இருப்பவர்கள் வெள்ளரி, புதினா மற்றும் எலுமிச்சை ஆகியவற்றை சாறை சமஅளவு கலந்து கரும்புள்ளிகளின்மீது தடவிவந்தால் கரும்புள்ளிகள் காணாமல் போய்விடும். உங்கள் சருமம் கடினமாக இருந்தால் கடலை மாவுடன் சிறிது மஞ்சள் தூள், பால் ஒரு தேக்கரண்டி மற்றும் எலுமிச்சை சாறு ஆகியவற்றை கலந்து முகத்தில் தடவவும். பின்னர் மிதமாக சூட்டில் உள்ள தண்ணீரை கொண்டு முகத்தை கழுவவேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்துவந்தால், முகம் எப்போது மென்மையாகவே இருக்கும்.



* முடி கொட்டிய இடத்தில் ஐஸ்கட்டியைத் தடவினால் முடிவளரும்.

* கசகசாவை பாலில் ஊறவைத்து அரைத்து அத்துடன் பாசிப்பருப்பு மாவை கலந்து தேய்த்து வர முடி உதிர்தல் நிற்கும்.

* நன்கு வளர கற்றாழை சாறில் தேங்காய் எண்ணெய் கலந்து தேய்த்தால் முடி உதிராது அடர்த்தியாகும் நன்றாக வளரும். அத்துடன் தலையும் குளிர்ச்சியாகும்.

* சிறிய வெங்காயத்தின் சாறை எடுத்து தலையில் தேய்த்து ஊறவைத்து குளித்தால் முடி உதிராது.

* செம்பருத்தி பூவுடன் தேங்காய் எண்ணெய் கலந்து தலையில்

## தலை முடி உதிர்வதைத் தடுக்கும் வழிமுறைகள்

தேய்த்தால் முடி உதிராது. அத்துடன் கூந்தல் கருமையாகவும் மாறும்.

* முட்டை வெள்ளைக்கருவை தலையில் தேய்த்து 10 நிமிடம் கழித்து சிகைக்காய் போட்டுக் குளித்தால் தலைமுடி உதிர்வது சுத்தமாக நின்றுவிடும்.

* வாரம் ஒரு முறை முடக்கத்தான் கீரையை அரைத்து தலையில் தேய்த்து 5 நிமிடம் ஊறியதும் குளிக்கவும். இதுபோல் தொடர்ந்து மூன்று மாத காலம் குளித்துப் பார்க்கவும். முடிகொட்டுவது நின்றுவிடும் அதுமட்டுமல்ல. இந்த கீரை நரைவிழுவதைத் தடுக்கும். கருகருவென முடிவளரத் தொடங்கும்.

# சமுதாய எழுச்சியில் பெண்களின் நிலை!

நன்றி - இணையம்



பெண்களே பெண்களுக்கு எதிரியாகும் பல சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இலங்கை போன்ற நாடுகளில் தத்தமது கலாசாரத்துக்கு ஒரு சில பெண்கள் உரிய மதிப்பளிக்காது மேற்கத்தேய பாணியைத் தழுவி ஆடைகளை அணிவதாலும் அளவுக்கு மீறிய கவர்ச்சியை வெளிப்படுத்துவதாலும் ஆண்களின் மனதை சுண்டி இழுக்கின்றனர். கவர்ச்சி காமமாகி கஷ்டத்துக்கு இட்டுச்செல்கின்றது.

பெண்கள் போகப்பொருள் என்ற கருத்தேக்கம் ஆண்களில் மனதில் வேரூன்றி காணப்படுகின்றது. ஊடகங்களில் வெளிவரும் விளம்பரங்கள் சில பெண்களின் அதீத நடத்தைக் கோலங்கள் என்பன இக்கருத்தேக்கத்துக்கு மேலும் தூபமிடுகின்றன. சாதாரண மனிதர்கள் அல்லாது சாமியார்மார்களையும் போகப்பொருள் என்ற கருத்தேக்கம்விட்டு வைக்கவில்லை என்பதனை கடந்த கால சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன.

தொழில் ஸ்தாபனங்களில் பெண்கள் தமது பாலியல்ரீதியான சுரண்டல்களுக்கு உள்ளாவதும் புதியதொரு விடயமல்ல. மேலதிகாரிகளை திருப்திப் படுத்தும் நோக்கிலும்தான் சில சலுகைகளை அனுபவிக்கும், பெற்றுக்கொள்ளும் நோக்கிலும் பெண்களே உடந்தையாக இருந்து சுரண்டல்களை விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக்கொள்கின்றனர். இச்செயலானது ஆண் வர்க்கத்தினருக்கு பழம்நழுவி பாலில் விழுந்ததுபோல் ஆகிவிடுகின்றது. மேலும் மேலும் பெண்களுக்கு எதிரான சேஷ்டைகளை வெளிப்படுத்துவதற்கு இத்தகைய பல சம்பவங்கள் ஆண்களுக்கு வாய்ப்பாக அமைந்துவிடுகின்றன. கல்வித் துறையை பொறுத்தமட்டில் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்ற காலம் மலையேறிய நிலையில் தற்போது அதிகமான பெண்கள் ஆண்களைக் காட்டிலும் கல்வி அபிவிருத்தி கண்டுவருவது மகிழ்ச்சிதரத்தக்க விடயமாக உள்ளது.

பல்கலைக்கழகங்களில் நிலவும் "ராக்கிங்" (பகிடிவதை) போன்ற செயற்பாடுகள் காரணமாக பெண்களின் உயர் கல்வி வாய்ப்புகளில் சிறிதளவு பாதிப்புகள் இருப்பினும் கூட பொதுவாக ஆண்களைக் காட்டிலும் கல்வித் துறை ஈடுபாடு, குடும்பத்தினரின் ஒத்துழைப்பு என்பன மிகுதியாகவே காணப்படுவது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். சர்வதேச மகளிர் தின கோரிக்கைகளாக பல்வேறு அமைப்புகளும் பெண்களின் அபிவிருத்தி கருதி பல்வேறு கோரிக்கைகளை முன்வைக்கின்றன.

எனினும், இவை அனைத்தும் காற்றோடு காற்றாய் வெறும் கோரிக்கைகள், கோஷங்கள் என்றரீதியிலேயே முடக்கம் பெற்றுவருவதனை எம்மால் அவதானிக்க கூடுமாக உள்ளது. மனித உரிமை பிரகடனத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக தெளிவாக விளக்கிக்கூறப்பட்டுள்ளது. எனினும் இவற்றின் நடைமுறை செயற்பாட்டுத் தன்மைகள் எந்தளவுக்கு சாதக பாங்கினை உருவாக்கியுள்ளன என்பதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதனை மறுப்பதற்கில்லை.

ஆண், பெண் சமத்துவம் பேணப்படவேண்டும். பெண்களும் மனிதர்களே என்றரீதியில் அவர் தம் கருத்துக்களும் ஆண்களால் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். தந்தை வழி சமூக அமைப்பு என்ற கருத்தியல் நிலையில் இருந்து மாறுபட்டு பெண்களின் உரிமைகள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் உறுதிப் படுத்தப்படவேண்டும் என்கின்ற சமூக அமைப்புகளின் கோரிக்கைகள் நியாயமானதே என்ற போதும் இவற்றை அடைவதற்கான வழி வகைகள் குறித்து இவ்வமைப்புகள் அதீத கவனம் செலுத்த வேண்டியமை மிகவும் இன்றியமையாததாகும்.

கொள்கைகள் அல்லது கோரிக்கைகளின் செயற்பாட்டுத் திறன்மிக்க சமகால நடவடிக்கைகளே பெண்களின் அபிவிருத்திக்கும் எதிர்கால வாழ்வுக்கும் கைகொடுக்கும் என்பதே உண்மை. இதனைவிடுத்து இம்முறை பெண்கள் தின கோரிக்கைகளும் கோஷங்களும் மீண்டும் அடுத்த பெண்கள் தினத்தன்று தூசுதட்டிப் பார்க்கப்படும் நிலை ஏற்படுமானால் எத்தனை பெண்கள் தினம் வந்தாலும் பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படாது.

(முற்றும்)

# இஞ்சி சாற்றில் தேன் கலந்து குடித்தால் நிகழும் மாற்றம்



நீண்டநேரம் ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்வதால் நினைக்கமுடியாத பல பிரச்சினைகளுக்கு உள்ளாக வேண்டியுள்ளது. அதில் குறிப்பாக உடல் எடையால்தான் பலரும் கஷ்டப்படுகின்றனர். ஒருவரின் உடல் எடை அளவுக்கு அதிகமானால், அதைத் தொடர்ந்து இரத்த அழுத்தம், நீரிழிவு, மனஅழுத்தம், இதய பிரச்சினைகள், கொழுப்பு என பல பிரச்சினைகள் அழையாவிருந்தாளியாக வந்துவிடும்.

இந்த பிரச்சினைகளெல்லாம் வராமல் இருக்க இயற்கை வைத்தியங்களில் பல வழிகள் உள்ளன. அதில் ஒன்றுதான் இஞ்சி சாற்றின் தேன் கலந்து குடிப்பது. அனைவருக்கும் இஞ்சி மற்றும் தேனின் மருத்துவ குணங்கள் பற்றி தெரியும். மேலும் பல ஆரோக்கிய பிரச்சினைகளுக்கும் சிகிச்சையளிக்க இவை பெரிதும் உதவியாக உள்ளன.

இத்தகைய இஞ்சியை சாறு எடுத்து, அதில் தேன்கலந்து குடித்துவந்தால் பெறும் நன்மைகள் என்னவென்று தெரிந்து கொள்ள தொடர்ந்து படியுங்கள்.

செரிமான பிரச்சினைகள்

தற்போது கண்ட ஜங்க் உணவுகளை உட்கொண்டு, செரிமான மண்டலத்தினால் சீராக செயற்பட முடியாமல், நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. இதனை சரிசெய்ய, இஞ்சி சாற்றில் தேன்கலந்து குடித்துவருவது நல்ல பலனைத் தரும்.

ஆஸ்துமா நோயாளிகள் தினமும் இஞ்சி சாற்றில் தேன்கலந்து குடித்துவர, ஆஸ்துமா பிரச்சினையில் இருந்து நல்ல நிவாரணம் கிடைக்கும். குறிப்பாக நுரையீரலினுள் செல்லும் இரத்தநாளங்கள் நன்கு ஓய்வடைந்து, இரத்த ஓட்டம் சீராகி, சுவாச பிரச்சினைகள் நீங்கும்.

250/= பரிசு

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :- 486.

கேள்வி: உடல் எடை அதிகமானால் ஏற்படும் நோய்கள் எவை?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 21. 09. 2015

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி தபாலட்டையில் ஒட்டி அனுப்பவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 486
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

பரிசுப் போட்டி இல :- 484 இற்கான விடை :-
லூயிசா நேசம் சரவணமுத்து

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :-
பிரதீபா சிவபாலு,
போழங் றோட், புலோலி மத்தி,
பருத்தித்துறை.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்

486

பெயர் : ..........

முகவரி : ..........

தே.அ. அட்டை இல : ..........

விடை : ..........

கையொப்பம் : ..........



## எடுபிடிகளாகும் எதிர்க்கட்சி...

மொக்கன் கேட்கிறான்


ஆவணி மாதம் காவடிக் காலம், நல்லூர் கந்தனுக்கு ஆயிரம் ஆயிரம் காவடிகள், சந்நிதி அன்னதானக்கந்தனுக்கு அதிலும் தொகையான காவடிகள். இதுக்குள்ள தேர்தலுக்கிள்ள அரசியல் காவடிகள், காவடி எடுத்தவை கனபேர். கொஞ்சப் பேர்தான் காவடிய ஒழுங்கா எடுத்துமுடிச்சினம். கூட்டமைப்புக் காவடி கொழும்பில கோலாகலமாக போய் இறங்கீட்டது. இராணுவ ஆக்கிரமிப்பை அகற்ற வெளிக்கிட்ட சுரேஸ் தம்பியை மக்கள் அகற்றிவிட்டிட்டினம். அவற்ற காவடி இதோட முடிஞ்சுது. ஒற்றுமையா காவடி எடுத்த கூட்டமைப்புக்காரர் ஒருவரையொருவர் குறை சொல்லிக்கொண்டு நிக்கினம்.

சுரேஸ் தம்பியும், அதிபர் அருந்தவபாலனும் தங்கள் வெற்றி தட்டிப் பறிக்கப்பட்டதாக கூப்பாடுபோடினம். மக்களின்ர வெற்றியை அவை மதிக்கத் தயாரில்லை. இதுக்கிள்ள "உடையாற்ற திருவிழாவிலை சடையனும் காவடியாம்' எண்ட கணக்கில இந்த முறை கொஞ்சப் பேர் புதுசா தேர்தல் காவடியை தூக்கிச்சினம். அவை எடுத்த இடத்திலேயே இறக்கி வைச்சிட்டினம். அவைக்கு சனம் குடுத்த கணிப்பும், மரியாதையும் இனி எண்டைக்கும் அவையை தேர்தல் காவடியை எடுக்கவிடாதெண்டு மொக்கன் நினைக்கிறான்.

இதுக்கிள்ள பெரும் மேள, தாளங்களோட கூட்டமைப்புக்காவடியின்ர தலைமைக்காரர் சம்பந்தர் ஐயா எதிர்க்கட்சி தலைவரும் ஆகிட்டார். அவர் இல்லாவிட்டால் மாவை சேனாதிராசாதான் எதிர்க்கட்சி தலைவர் எண்டு முடிவாப்போச்சு. இண்டைக்கு முப்பத்தெட்டு வரியத்திற்கு முந்தி எங்கண்ட அமிர்தலிங்கம் ஐயாவும் எதிர்க்கட்சி தலைவரா இருந்தவர்தான்.

ஆனால் உருப்படியா ஒண்டும் நடக்கேல்லை. எலக்சனுக்கு முந்தியே அடுத்த வருசம் ஆவணிக்கு முந்தி தமிழருக்கு தீர்வு கிடைக்குமெண்டு சொன்னார். இனி என்ன நடக்கு எண்டு பாப்பம். அப்பவும் யு.என்.பி.தான் ஆட்சி அமைச்சுது. இப்பவும் யு.என்.பி.தான் ஆட்சிக்கு வந்திருக்கு. அண்டைக்கு கிழட்டு நரி எண்டு சொல்லப்பட்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தனதான் ஜனாதிபதி. இண்டைக்கு அவற்ற மருமோன் ரணில் விக்ரமசிங்கதான் பிரதமர். இந்த ஆட்சியில கூட்டமைப்பு என்னத்த சாதிக்கப் போறதெண்டதுதான் எல்லாற்ற கேள்வியாகும். கொஞ்சம் பொறுத்திருந்துதான் பாக்கவேணுமெண்டு மொக்கன் சொல்லுறான். எல்லா வளவுக்காரற்றை ஆட்சியிலும் எங்களுக்கு ஒண்டுமே கிடைக்கயில்லை.

நாற்பத்தியெட்டில 'போத்தல' வளவு பெரிய சேனநாயக்க காலத்திலையோ இல்லாட்டி அவற்ற மோன் டட்லி சேனநாயக்க காலத்திலோ இருந்ததும் பறிபோச்சுது. எங்கண்ட மலைநாட்டு சகோதரங்களுடைய வாக்குரிமையை இல்லாமல் செய்தானுகள். பிறகு ஐம்பத்தாறில 'ஹொறக்கொல்ல' வளவுக்காரர் பண்டாரநாயக்க காலத்தில ஒண்டும் கிடைக்கயில்லை.



சிங்களம் மட்டும் எண்டு சட்டத்தைக் கொண்டு வந்து எங்கண்ட மொழியுரிமையை அழிச்சானுகள். இப்ப கடைசியா 'மெதமுல்லான' வளவுக்காரர் மகிந்த ராஜபக்சவின்ர ஆட்சியிலும் ஒண்டும் வாய்க்கேல்லை. அவங்கள் எங்களை தேய்ச்சதுதான் கண்ட மிச்சம். ரணிலும், மைத்திரியும் சேந்து ஒரு தேசிய அரசினை அமைச்சிருக்கினமாம்.

அவை ஒண்டு சேந்து எங்கண்ட சம்பந்தர் ஐயாவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் குடுத்திருக்கினம். எங்கண்ட வரலாற்றில எதிர்க்கட்சி முதல் முறையாக ஆளும் கட்சியின் எடுபிடி ஆளா இருக்கப்போகுதெண்டு மொக்கன் எண்ணுகிறான். இதுக்கிள்ள எலக்சனுக்கிள்ள புகைஞ்சுகொண்டிருந்த சங்கதி ஒண்டு இப்ப நெருப்புப் பத்தி எரியத்தொடங்கீற்று. மாகாண சபை முதல்வர் விக்கி ஐயா எலக்சனில கூட்டமைப்புக்கு எதிரா கருத்துக்களைச் சொன்னார் எண்டும் ஆனால், மக்கள் அவரை நிராகரிச்சுப் போட்டினம் எண்டும் மாவை சேனாதிராசா வவுனியாவில முழங்கியிருக்கிறார். அது ஒருபுறமிருக்க ஈ.பி.ஆர்.எல்.எப்(சுரேஸ்), ரெலோ, புளொட் என மூண்டும் தமிழரசுக் கட்சியை விட்டு ஒண்டாக் கூடியிருக்கினம்.

உள் குத்துவெட்டு இப்ப வெளி அம்பலமாப் போச்சு. இம்முறை எலக்சனில கூட்டமைப்புக்கு பெரிய வெற்றி எண்டு சொல்லியினம். ஒரு விளக்கு நூர முந்தி கடைசியாச் சுடர் விட்டெரியும். அணையும்பொழுது சுடர் விட்டுத்தான் அணையும். இப்ப கிடைச்ச வெற்றி கூட்டமைப்பின்ர "கடைசிச்சுடர் எண்டு மொக்கன் சொல்லுறான். பக்கத்துவீட்டுப் பெரியவரும், முன்வீட்டு வாத்தியாரும் இததான் சொல்லுகினம். சுரேஸ் தம்பி இல்லை எண்டால் தமிழற்ற பிரச்சினையை உலகத்துக்கு வடிவா எடுத்துச் சொல்லுறதுக்கு ஆளில்லை எண்டு அவற்ற ஆதரவாளர்கள் ஒரு கதையை அவிட்டுவிட்டிருக்கினம்

பாவம் சுரேஸ் தம்பி அவற்ற ஊடகப் பேச்சாளர் பதவியும் போய்ச் சேர்ந்திட்டுது. இவனுகள் பகவத்கீதை படிக்கேல்லை போல கிடக்கெண்டு பக்கத்து வீட்டுப் பெரியவர் சொல்லுறார். இப்ப புத்தகத்தை தேடி போகத்தேவையில்லை. அந்தியெட்டி வீட்டுக்குப் போனால் தாற கல்வெட்டு புத்தகத்தில அதுதான் கிடைக்குது. அதென்ன, நீ இல்லை எண்டால் இன்னொருவன் அந்த இடத்துக்கு வருவான். நடக்கவேண்டியது நடக்கும். இதுதான் கண்ணன்ர உபதேசத்தின்ர சாரம். "எது நடந்த்தோ அது நன்றாகவே நடந்தது" எண்டு எண்ணிக்கொண்டு இருக்கவேண்டியதுதான். காந்தி, மண்டேலா போன்ற தலைவர்கள் மக்களின்ர சுதந்திரத்துக்கு தொண்டாற்றின மாதிரி இவையும் செய்யவேண்டியதுதான். எலக்சனில வெண்டாத்தான் மக்களுக்கு தொண்டு, இல்லையெண்டா ஒண்டுமில்லை எண்றெதுதான் பெரிய பிழை. அமைச்சரவையும் பதவியேற்றாச்சு. அதிகம் எதிர்பாத்திருந்த விஜயகலா அம்மையாருக்கு இதுவரை அமைச்சுப் பதவி கிடைக்கேல்லை. இனியும் கிடைக்காதெண்டு கதை அடிபடுகுது. அமைச்சுப் பதவி கிடைச்சுதெண்டால் கச்சேரி கட்டிடத்துக்குள்ள காரை ஏத்திப் போடுவா எண்டுதான் கொடுக்கேல்லை எண்டும் ஒரு சில சனம் சொல்லுதுகள். இதுதான் வாய்க்கொழுப்பு சீலையால வழியிறதெண்டு சொன்ன விசயம். பாட்டொண்டு கேக்குது. மொக்கனுக்கு மெத்தப்பிடிச்ச பாட்டு. "ஆடிய ஆட்டமென்ன கூடிய கூட்டமென்ன..." இனிமேல் ஆறுதலா யோசிச்சுக் கொண்டு படுக்கவேண்டியதுதான். நீங்களும் இதை ஒத்துக் கொள்ளுறியளோ எண்டு மொக்கன் கேட்கிறான். மொக்கியும் கேக்கிறாள்.

**மொக்கன் இப்பவும் கேக்கிறான். இனியும் கேப்பான்.**




# நஞ்சாகும் செய்தித்தாள் மை

செய்தித்தாள் என்ற தமிழ் வார்த்தையை விட ஆங்கில வார்த்தையான "நியூஸ் பேப்பர்" என்பதைத்தான் நாம் பேச்சு வழக்கில் அதிகம் பயன்படுத்துகிறோம். செய்தித்தாள்கள், செய்தி படிப்பதற்கு என்ற நிலையைக் கடந்து பல பயன்பாடுகளுக்கு உப-யோகமாகிறது என்பது மகிழ்ச்சியான விஷயமே! ஆனால் அதிலும் சிலவகை பயன்பாடுகளில் ஆபத்து இருக்கிறது என்று ஆய்வாளர்கள் எச்சரிக்கிறார்கள்.

அதில் ஒன்றுதான் செய்தித்தாளில் கை துடைப்பது. சிறிய ஹோட்டல்கள், தெருவோர உணவகங்களில் சாப்பிட்டு கைகழுவிய பின், ஈரமான கைகளை துடைப்பதற்கு பழைய செய்தித்தாள்களை கத்தரித்து வைத்திருப்பார்கள். அவற்றில் நம் கையை துடைக்கும் போது, நமது உடலுக்குள் காரீயம் சென்றுவிடுகிறது.

எப்படி என்கிறீர்களா? செய்தித்தாளின் அச்சு மையில் காரீயம் உள்ளது. அது உலர்வாக இருக்கும்வரை எந்த பிரச்சினையும் இல்லை. தண்ணீர் பட்டால், பிரச்சினைதான். இதுகூட பரவாயில்லை. பலரும் வடை, பஜ்ஜி போன்ற எண்ணெய் பலகாரங்களில் உள்ள எண்ணெய்யை வெளியேற்ற செய்தித்தாள்களை பயன்படுத்துகிறார்கள். இது அதைவிட மிகப்பெரிய ஆபத்து. காரீயம் நேரடியாக உணவுக் குழாய்க்குள் சென்றுவிடும்.

காரீயம் உடலுக்குள் சென்றால் அது சிறுநீரகம், கல்லீரல், எலும்பு வளர்ச்சி, தசை வளர்ச்சி என்று எல்லாவற்றையும் பாதிக்கும். இப்படி கெடுதல் விளைவிக்கும் சில பொருட்கள் உடலுக்குள் சென்றால், காலப்போக்கில் அது கழிவாக வெளியே வந்துவிடும். ஆனால் காரீயத்தின் கதை வேறு. அது கழிவாக வெளியே செல்வதில்லை. தொடர்ந்து காரீயம் உள்ளே போகப்போக சேர்ந்துகொண்டே போகும். கெடுதல்கள் கூடிக்கொண்டே போகும்.

நிறைய பேர் காரீயம் என்றால் அது ஈயம், அலுமினியம் என்று நினைக்கிறார்கள். அது தவறு. காரீயம் வேறு, இவை வேறு. ஈயமும் அலுமினியமும் நமக்கு கெடுதல் தராத உலோகங்கள். எவர் சில்வர் பாத்திரங்கள் வருவதற்கு முன்பு நமது சமையல் அறைகளை ஆட்சி செய்தவை, ஈயம் பூசப்பட்ட பித்தளைப் பாத்திரங்களும், அலுமினியப் பாத்திரங்களும்தான். அதனால் அவை கெடுதல் இல்லை. காரீயம் தான் கெடுதல்.

முன்பெல்லாம் பெற்றோலில்கூட காரீயம் இருந்தது. அது வாகனப் புகைமூலம் காற்றின் வழியாக மனித நுரையீரலுக்குள் தஞ்சம் அடைந்தது. இப்போது பெற்றோலில் காரீயம் நீக்கப்பட்டுவிட்டது. சில உலோகங்கள் ஓரளவுக்கு உடலில் இருக்கலாம். அது கெடுதல் தராது என்பார்கள். ஆனால் காரீயம் சிறிதளவு உடலுக்குள் சென்றால்கூட கெடுதல்தான். அதனால்தான் மேகி நூடுல்சுக்கு அவ்வளவு பெரிய எதிர்ப்புவந்து, தடைசெய்யப்பட்டது. அதிகமாக தொலைக்காட்சி பார்க்கும் சிறுவர்களுக்கு அறிவுத்திறன் மங்கும்:

ஆய்வில். இன்றைய நவீன காலத்தில் தொலைக்காட்சி இல்லாத வீடுகளை விரல்விட்டு எண்ணிவிடலாம் என்று சொல்லும் அளவுக்கு உலகம் முழுவதையும் தொலைக்காட்சிகள் ஆக்கிரமித்துவிட்டன. ஒரு காலத்தில் பெருநகரங்களில் மட்டுமே இருந்த இந்த தொலைக்காட்சிப்பெட்டிகள் இன்று உலகின் மூலைமுடுக்குகளில் உள்ள வீடுகளில் காணப்படுகிறது. தொலைக்காட்சிமூலம் செய்திகள், உலக நடப்புகள், உள்ளிட்ட பல்வேறு பயன்கள் இருந்தாலும் இதில் சில ஆபத்துக்களும் இருப்பதை மறுக்கமுடியாது.

இதை மெய்ப்பிக்கும்வகையில், அதிகளவில் தொலைக்காட்சி களில் நேரத்தை செலவிடும் பதின்ம வயது சிறுவர்களின் அறிவுத்திறன் மங்கும் என்று அதிர்ச்சி ஆய்வுத்தகவல் வெளியாகி உள்ளது. எப்போதும், தொலைக்காட்சி முன் கிடையாய் கிடக்கும் சிறுவர்களை பள்ளிப்பாடங்களை படிக்குமாறு பெற்றோர்கள் கட்டாயப் படுத்துவதை அனைத்து வீடுகளிலும் பொதுவாக பார்க்கமுடியும்.

பெற்றோர்களின் செயலில் எவ்வளவு நன்மை உள்ளது என்பதை இந்த ஆய்வு மெய்ப்பித்து காட்டுகிறது. இங்கிலாந்தில் உள்ள கேம்ப்ரீட்ஜ் பல்கலைக்கழகத்தில் எடுக்கப்பட்ட ஆய்வுகளின் முடிவில் இந்த தகவல் வெளியாகியுள்ளது. மேலும், தொலைக்காட்சிகளை பார்ப்பது மட்டுமின்றி ஒன்லைனில் கேம்ஸ் விளையாடுவது, கணினி களில் அதிகநேரம் செலவிட்டாலும் தங்கள் பள்ளித்தேர்வுகளில் எடுக்கும் மதிப்பெண்களில் அது பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறுகிறது ஆய்வு. அதேவேளையில் கூடுதலாக ஒரு மணிநேரம் தனது வீட்டுப்பாடங்களை செய்வது வாசித்தல் போன்றவற்றை தின மும் கடைப்பிடித்தால் தேர்வுகளில் சகமாணவர்களை ஒருபடி மேலான மதிப்பெண்களை இந்த மாணவர்கள் பெறமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு இங்கிலாந்தில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் சுமார் 847 மாணவர்களிடம் எடுக்கப்பட்டதன் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளது. இவர்களில் தொலைக்காட்சிகளில் அதிக நேரம் செலவிடும் மாணவர்களின் கிரேடுகள் குறைவது ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்த ஆய்வு கிரஸ்டன் கார்டர் என்பவரால் நடத்தப்பட்டுள்ளது. அவர் கூறுகையில், இதில் மேலும் சில ஆய்வுகள் தேவைப்படுகிறது, எனினும், தங்கள் குழந்தைகளின் மதிப்பெண் குறித்து கவலைப்படும் பெற்றோர்கள், அவர்கள் தொலைக்காட்சி முன் அதிகநேரம் செலவிடுவதை கட்டுப்படுத்த வேண்டும் என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

உடற்பயிற்சி, விளையாட்டு போன்ற உடற்செயற்பாட்டுக்கும் கல்வி செயல்திறனுக்கும் இடையே குறிப்பிடத்தக்க தொடர்பு இல்லை எனவும் அந்த ஆய்வு கூறுகிறது.



# "என்னுடைய சொந்தமகன் என்றே நினைத்தேன்"

## பிஞ்சுக் குழந்தை சடலத்தை எடுத்த துருக்கி பொலிஸ் பேட்டி

கடலில் பலியாகிக்கிடந்த குழந்தையின் படம், உலகையே உலுக்கிவிட்டது. "என் குழந்தையுடன் என்னையும் சேர்த்து புதைத்துவிடுங்கள்" என அந்தக் குழந்தையின் தந்தை கண்ணீருடன் கதறினார்.

சிரியாவின் உள்நாட்டுப்போர், அந்த நாட்டு மக்களின் வாழ்க்கையை சின்னாபின்னமாக்கிவிட்டது. அவர்களில் பலரும் தங்கள் மீதியான வாழ்க்கையை கழித்தே ஆகவேண்டும் என்ற நிர்ப் பந்தமான நிலையில், அண்டை நாடான துருக்கிவழியாக ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக சென்று கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அகதிகள் பிரச்சினையை ஐரோப்பிய நாடுகள் தீராத தலைவலியாக கருதுகின்றன. இந்த நிலையில்தான் சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் வசமுள்ள கொபானி நகரில் உள்நாட்டுப் போருக்கு பயந்து, உயிர் பிழைப்பதற்காக ஏராளமானோர் கடந்த ஆண்டு துருக்கிக்கு சென்றனர். அங்கிருந்து அவர்கள் படகுகள்மூலமாக பாதுகாப்பற்ற பயணம் மேற்கொண்டு ஐரோப்பிய நாடுகளுக்கு செல்கின்றனர். இந்நிலையில் துருக்கியில் கடலில் பலியாகிக்கிடந்த குழந்தை அய்லான் படம், உலகையே உலுக்கிவிட்டது. இதனையடுத்து ஐரோப்பிய நாடுகளின் நிலைப்பாட்டிலும் சற்று மாற்றம் வந்தது.

அப்படி துருக்கியில் இருந்து கிரீஸ் நாட்டின் மோஸ் தீவுக்கு 2 படகுகளில் 23 அகதிகள் சென்றனர். ஆனால் அந்த படகுகள், துருக்கியில் பொத்ரும் நகருக்கு அருகே கவிழ்ந்துவிட்டன. அவற்றில் 9 பேர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டனர். மற்றவர்கள் நடுக்கடலில் பலியாகினர். பலியானவர்களில் 5 பேர் பச்சிளங்குழந்தைகள்.

அப்படி பலியான ஒரு பிஞ்சுக் குழந்தையின் உயிரற்ற உடல், கரை ஒதுங்கிக்கிடந்த கோரக் காட்சியை துருக்கி செய்தி நிறுவனம் ஒன்று, "கரைக்கு அடித்துச் செல்லப்பட்டுவிட்டது, மனிதாபிமானம்" என்ற அடிக்குறிப்புடன் வெளியிட்டது.

அந்தப் படம், சமூக வலைத்தளங்களில் மட்டுமல்ல, மனித மனங்களிலும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது. இதயத்தில் ஈரம் உள்ளவர்கள் அத்தனைபேரின் கண்களும் அந்தப் படத்தை பார்த்து கசிந்தன.

அந்தப் படம், மேற்கத்திய நாடுகளின் நாளேடுகளில் முதல் பக்கத்தில் அச்சாகி இருக்கிறது. "ஒரு மனித பேரழிவில் பலியான சிற்றுயிர்" என்று இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் 'டெய்லி மெயில்' ஏடு தலைப்பிட்டு செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தக் குழந்தையைப் பற்றிய உருக்கமான தகவல்கள் இப்போது வெளியாகி இருக்கின்றன. அந்தக் குழந்தையின் பெயர் அய்லான். மூன்றே வயதில் அந்த பிஞ்சுக்குழந்தைக்கு இந்த உலகில் வாழ இடம் கிடைக்கவில்லை. அகதியாக சென்றபோது, இயற்கை அவன் வாழ்வை முடித்துக்கொண்டு விட்டது.

அவன் மட்டுமல்ல, அவனது 5 வயது அண்ணன் காலிப், தாயார் ரேஹன் ஆகியோரும் அந்தப் படகு விபத்தில் பரிதாபமாக உயிரிழந்திருக்கிறார்கள். உயிர் தப்பியது, அவனது தந்தை அப்துல்லா குர்தி மட்டும்தான்.

ஒரே நாளில் தன் அன்பு மனைவியையும், ஆசைக்குழந்தைகளையும் கடலுக்கு தாரை வார்த்துவிட்ட அப்துல்லா குர்திவின் கதறல், உயிரை உருக்குவதாக அமைந்திருக்கிறது.

"நான் கொபானிக்கு திரும்பிச்செல்ல வேண்டும். இறந்துபோன என் மனைவி, என் பிஞ்சு மகன்கள் உடல்களுடன் செல்ல வேண்டும். என்னையும் அவர்களுடன் சேர்த்து புதைத்துவிடுங்கள்" என்ற அவரது கதறல், அனைவரையும் கலங்கடித்துவிட்டது.

கடலில் பலியான பிஞ்சுக் குழந்தை சடலத்தை எடுத்த துருக்கி பொலிஸ் அதிகாரி மெக்மெட் சிப்லா பேசுகையில், "என்னுடைய சொந்தமகன் என்றே நினைத்தேன்," என்று கூறினார்.

துருக்கியில் கடலில் பலியாகிக் கிடந்த குழந்தை அய்லான் சடலத்தை எடுத்த பொலிஸ் அதிகாரி மெக்மெட் சிப்லாட் பேசுகையில், "என்னுடைய சொந்தமகன் என்றே நினைத்தேன்," என்று கூறியுள்ளார். மெக்மெட் சிப்லாட் பேசுகையில், "சிறுவனை பார்த்ததும் அவன் உயிருடன் இருக்க வேண்டும் என்றே கடவுளிடம் வேண்டிக் கொண்டேன். சிறுவன் உயிருடன் இருப்பான் என்றே நம்பினேன். ஆனால் சிறுவன் சடலமாக கிடந்தான். நான் அழுதுவிட்டேன். எனக்கும் 6வயது மகன் உள்ளான். சிறுவனை பார்த்ததும் என்னுடைய மகனை போன்றே நினைத்தேன். என்னுடைய துன்பத்தை கூறுவதற்கு வார்த்தையே கிடையாது. மிகவும் சோகமாக இருந்தது." என்று கூறியுள்ளார்.

மேலும் சிறுவனின் உடலை நான் எடுத்தது, போட்டோ எடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. என்னுடைய பணியை தான் நான் செய்தேன் என்றும் மெக்மெட் குறிப்பிட்டு உள்ளார். அகதிகளுக்காக ஒரு தீவையே விலைக்கு வாங்கும் தொழிலதிபர்: கடலில் மூழ்கிய சிறுவன் பெயர் சூட்ட முடிவு அகதிகளுக்காக ஒரு தீவையே விலைக்கு வாங்க எகிப்து நாட்டை சேர்ந்த நகுய்ப் சாகுரிஸ் என்ற கோடீஸ்வரர் முன் வந்துள்ளார். தான் வாங்கும் தீவிற்கு பலியான 3 வயது சிறுவன் அய்லானின் பெயரை சூட்ட நகுய்ப் சாகுரிஸ் தீர்மானித்துள்ளார்.

துருக்கியின் கோஸ் தீவில் கரை ஒதுங்கிய 3 வயது சிறுவன் அய்லானின் சடலமும், அதை பொலிஸ்காரர் ஒருவர் கையில்,ஏந்திச் சென்ற புகைப்படங்கள் உலகையே கண்ணீர் சிந்தவைத்துள்ளது. இந்த சம்பவத்தையடுத்து பேஸ்புக் மற்றும் சமூக வலைத்தளங்களில் பலர் தங்களது ஆழ்ந்த வருத்தத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

அல்லற்படும் அகதிகளுக்காக ஒரு குட்டி தீவையே விலைக்க வாங்க முன் வந்துள்ளார். எகிப்து நாட்டை சேர்ந்த நகுய்ப் சாகுரிஸ் என்ற கோடீஸ்வரர்.

தான் விலைக்கு வாங்கும் அந்த தீவில் அகதிகள் தங்க வீடுகள் மற்றும் வேலை வாய்ப்பை உருவாக்கி தரவும் முடிவு செய்துள்ளார் என்பது கூடுதல் தகவல். இதற்காக கிரீஸ் அல்லது இத்தாலி நாடுகள் தனக்கு ஒரு தீவை விலைக்கு விற்கும்படியும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். அகதிகளுக்காக வாங்கவுள்ள தீவுக்கு பலியான சிரியா சிறுவன் அய்லானின் பெயரை சூட்ட இத்தாலிய கோடீஸ்வரர் நகுய்ப் சாகுரிஸ் தீர்மானித்துள்ளார்.


நகுய்ப் சாகுரிஸ் இது குறித்து டுவிட்டர் பக்கத்தில் கூயிருப்பதாவது:

அகதிகளுக்காக நான் வாங்கும் தீவுக்கு சமீபத்தில் அகதியாக புகலிடம் தேடி துருக்கி நாட்டு கடலில் மூழ்கி கரை ஒதுங்கிய சிறுவனின் நினைவாக 'அய்லான் தீவு' என பெயரிட முடிவு செய்துள்ளேன்.

அந்த தீவு எங்கே உள்ளது? என்பதை இனிதான் நான் தேட வேண்டும் என, டுவிட்டர் பக்கத்தில் நகுய்ப் குறிப்பிட்டுள்ளார்.

எகிப்து நாட்டில் பிரபல தொலைத் தொடர்பு நிறுவன அதிபராக இருக்கும் இவரது சொத்து மதிப்பு சுமார் 300 கோடி அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.


அகதிகளாக வந்தேறும் மக்களுக்கு நான் இடம் தருகிறேன், நானும் இடம் தருகிறேன் என ஆஸ்திரேலியா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் போட்டிப் போட்டுக்கொண்டு முன்வந்துள்ளன.






Dr. சி.யமுனாநந்தா

# நீர் வெறுப்பு நோய்



நீர் வெறுப்பு நோய் எமது சமூகத்தில் உருப்பெருக்கம் அடையும் உயிர்க்கொல்லியாக மாறுபட்ட பரிமாணத்தில் உருவெடுத்துள்ளது. பொதுவான சுகநலப் பிரச்சினையான நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகளின் தீண்டல்களின் பாதிப்பினை இக்கட்டுரை விளங்குகின்றது. இந்நோய் தொடர்பான விழிப்புணர்வினை மக்கள் அறியவேண்டியது அவசியமாகிறது.





பொதுவாக 4ஆவது கிழமையில் முதலாவது விலங்கின் விசர் தடுப்பு மருந்தும், 16 ஆவது கிழமையில் இரண்டாவது தடுப்பு மருந்தும் பின் வருடந்தோறும் ஒரு தடுப்பு மருந்து ஏற்றப்படும்.

தாய் நாய் அல்லது தாய்ப் பூனைக்கு பூரணமாக விலங்கின் விசர் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டு இருந்தால், குட்டிநாய்க்கு அல்லது பூனைக்குட்டிக்கு 12ஆவது கிழமை வயதில் விலங்கின் விசர் தடுப்பு மருந்து அளிக்கப்படும்.

வளர்ப்பு நாய் அல்லது பூனைக்கு விலங்கின் விசர் தடுப்பு மருந்துபோடாத நாய்கள் கடித்தால், வளர்ப்பு நாய்க்கு விலங்கின் விசர் தடுப்பு மருந்து போடப்பட்டு இருந்தால் முதல் நாள் 2 தடுப்பு மருந்தும் 7ஆம் நாள் 21ஆம் நாட்களில் ஒரு தடுப்பு மருந்தும் அளிக்கப்படல் வேண்டும்.

நாய் அல்லது செல்லப்பிராணி வேறு மிருகத்தினால் கடிபடின் மிருக வைத்தியரை நாடலாம்.

### விலங்குகளில் விலங்கின் விசர் நோய்

விலங்கின் விசர் உடைய விலங்குகளில் எல்லா அறிகுறிகளும் முற்றாக வெளிக்காட்டுவதில்லை. அவை பின்வருமாறு அமையலாம்.

### கொடூர விலங்கின் விசர் நோய் (Furious Rabies)

அமைதியின்மையுடன் பாதிக்கப்பட்ட விலங்கு காணப்படும்.

கூடுதலான செயற்பாடுகள் காணப்படும்.

தனக்குத்தானே காயப்படுத்தல்.

கோபத்துடன் கலைக்கும் அல்லது கடிக்கும்.

### அமைதியான விலங்கின் விசர் நோய் (Dump Rabies)

பாதிக்கப்பட்ட விலங்கின் தாடையில் எச்சில் வடிந்து காணப்படும்.

உணவு உண்ண முடியாமையிருக்கும்.

மூச்சுத்திணறல் ஏற்படலாம்.

வாதம் ஏற்படல், கோபம் ஏற்படலாம்.

மிருகங்கள் இடம்தெரியாது அலையும், பாதிக்கப்பட்ட விலங்கு விழித்துப் பார்க்கும், விழுங்கமுடியாத நிலை ஏற்படும், வலிப்பு ஏற்படும், சத்தமிடும்.

நாய்களுக்கு விலங்கின் விசர் நோய் வந்து அந்நாய்கள் இறக்கின்றமை எமது பிரதேசத்தில் அவதானிக்கப்பட்டு உள்ளது. எனவே நாய், பூனை தீண்டின் நாம் அசிரத்தையாக இருத்தல் கூடாது.

### விலங்கின் விசர் நோயினைக் கட்டுப்படுத்தல்

**01.** நாய் அல்லது செல்லப்பிராணியின் பாதுகாவலர்கள் நாய்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தல் வேண்டும். தெருக்களில் அலையவிடக் கூடாது.

விலங்கின் விசர் தடுப்பு மருந்து ஏற்றிப் பின் கிரமமாக தடுப்பு மருந்து ஏற்றல்.

தடுப்பு மருந்துக் காட்டைப் பாதுகாத்தல். பிரதேச சபையில் பதிதல்.

மிருகங்களிற்கான கட்டுப்பட்ட இனப்பெருக்கம்.

**02.** பாரியளவில் நாய்களின் தடுப்பு மருந்து ஏற்றல். இலங்கையில் நாய்களிற்கு 6 கிழமைகள், 3 மாதம், பின் வருடந்தோறும் தடுப்பு மருந்து ஏற்றல் வேண்டும். நாய்க்கு தடுப்பு ஏற்றியமையை பதிவுசெய்த அட்டையினை பாதுகாப்பாக வைத்து. யாருக்காவது அந்நாய் கடிக்கும்போது இதனை வைத்தியருக்கும் காட்ட வேண்டும்.

**03.** கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்த குடும்பக் கட்டுப்பாட்டு முறையினை நாய்களிற்கு செயற்படுத்தல் வேண்டும்.

**04.** குப்பைகள், எஞ்சிய உணவுகளை கண்டபடி போடக்கூடாது. இவை நாய்கள் ஒன்றுசேரக் காரணமாகவும், அவை நோய்க்கிருமிகள் தொற்றிக்கொள்ள ஏதுவாகவும் அமையும். இந்நிலையிலேயே ரேபிஸ் நோய்க்கிருமிகள் ஒரு நாயில் இருந்து ஏனைய நாய்களுக்குப் பரவும்.

(தொடரும்...)




# கொழுப்பைக் கரைக்கும் கொள்ளு

## கொள்ளு

கொழுத்தவனுக்கு கொள்ளு... இளைத்தவனுக்கு எள்ளு என்பது பிரபல மொழி. அந்தளவுக்கு கொழுப்பைக் கரைப்பதில் கொள்ளுக்கு முக்கியமான இடமுண்டு. ஆனால், கொள்ளு என்பது குதிரைத் தீவனம் என்கிற நம்பிக்கையில், அதை இலட்சியமே செய்வதில்லை பலரும். புரதம் நிறைந்த ஒரு தானியம் கொள்ளு. நமது உடல் வளர்ச்சிக்கும், திசுக்கள் முறையாக வேலைசெய்யவும், பழுதடைந்த திசுக்களைச் சரி பார்க்கவும் புரதம் மிக அவசியம்.

புரதத்தில் சுப்பீரியர் புரதம் என்றும், இன்ஃபீரியர் புரதம் என்றும் இருவகை உண்டு. பொதுவாக அசைவ உணவுகளின்மூலம் கிடைப்பதெல்லாம் சுப்பீரியர் புரதம். பருப்பு உணவுமூலம் கிடைப்பது இன்ஃபீரியர் புரதம். சோயாவும் கொள்ளும் சுப்பீரியர் புரத வகையைச் சேர்ந்தவை. எனவே, சைவ உணவுக்காரர்களுக்கு, அசைவ உணவுகளின்மூலம் கிடைக்கிற உயர்தர புரதத்தை அள்ளிக்கொடுக்கும் ஒரே தானியம் கொள்ளு. கொள்ளின் பலன்கள் கொழுப்பைக் கரைப்பதில் கொள்ளுக்கு முதலிடம். உடலிலுள்ள தேவையற்ற தண்ணீரைக் கொள்ளு எடுத்துவிடும்.

கொள்ளுத் தண்ணீர் இரத்தத்தை சுத்திகரிப்பதுடன், உடலிலுள்ள நச்சுத் தன்மைகளை எல்லாம் எடுத்துவிடும். வளரும் குழந்தைகளுக்கும், உடற்பயிற்சி செய்வோருக்கும் மிகவும் உகந்தது. ஆயுர்வேதத்தில் கொள்ளை தலையில் வைத்துக் கொண்டாடாத குறைதான். பெரும்பாலான நோய்களுக்கு கொள்ளு மருந்தாகப் பயன்படுகிறது. பைல்ஸ் எனப்படுகிற மூலநோய்க்கு, ருமாட்டிசம் பிரச்சினைக்கு, இருமல் மற்றும் சளியை விரட்ட, காய்ச்சலைக் கட்டுப்படுத்த... இப்படி கொள்ளு குணமாக்கும் பிரச்சினைகளின் பட்டியல் நீள்கிறது

அல்சர் எனப்படுகிற வயிற்றுப் புண்ணுக்கும், சிறுநீரகக் கற்களை வெளியேற்றவும், அதீத ரத்தப் போக்கைக் கட்டுப்படுத்தவும்கூட கொள்ளு உதவுவதாக ஆயுர்வேதம் சொல்கிறது. சிக்குன்குனியா நோய் பாதித்தவர்களுக்குக்கூட கொள்ளு வேக வைத்த தண்ணீரில் சூப் வைத்துக் கொடுக்கச் சொல்லிப் பரிந்துரைக்கப்படுகிறது. மஞ்சள் காமாலை நோய்க்கு கொள்ளை மருந்தாக உபயோகிக்கிறார்கள். அதுமட்டுமின்றி, கொள்ளை வேகவைத்து மசித்து, சருமப் பிரச்சினைகளுக்குத் பூசுகிறார்கள்.

### சூட்டைக் கிளப்புமா?


கொள்ளு சூட்டைக் கிளப்பும் என்றும், அதனால் அடிக்கடி அதை எடுத்துக் கொள்ளக்கூடாது என்றும் மக்களிடையே ஒரு எண்ணம் உண்டு. கொள்ளு சூடானது என்பது உண்மைதான், அதாவது, வளர்சிதை மாற்ற விகிதத்தை வேகப்படுத்தும். அதனால்தான் கொழுப்பைக் குறைக்க கொள்ளு எடுத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

குதிரைக்கு கொள்ளு கொடுப்பதன் பின்னணியும் இதுதான். குதிரை குண்டாக இருந்தால் அதனால் வேகமாக ஓடமுடியாது. கொள்ளு கொடுப்பதால் தான் குதிரை கொழுப்பின்றி, சிக்கென்று இருக்கிறது. உடல் திண்மையுடன் வேகமாக ஓடுகிறது. எனவே அதை வைத்து உடனே மனிதர்களுக்கு கொடுக்கக்கூடாது என்ற மனநிலைக்கு வர வேண்டாம். தொடர்ந்து ஒருவர் கொள்ளு ஏதாவது ஒரு முறையில் சாப்பிட்டுவந்தால் அவருக்கு எந்தவித நோயும் வராது. எதிர்காலத்தில் உடலில் எந்த பிரச்சினையும் ஏற்படாது.

### எப்படியெல்லாம் எடுத்துக் கொள்ளலாம்?

கொள்ளு வேகவைத்த தண்ணீரில் சிட்டிகை உப்பும், மிளகுத்தூளும் சேர்த்து தினமும் அப்படியே குடிக்கலாம். வேக வைத்த கொள்ளை, சாலட் போல சாப்பிடலாம். கொள்ளை வெறும் கடாயில் வறுத்துப் பொடித்துக்கொண்டு, சாம்பார், ரசம், பொரியல், கூட்டு என எல்லாவற்றிலும் சேர்க்கலாம். உணவின்மூலம் உடலுக்குள் சேரும் கொழுப்பிலிருந்து இது நம்மைக் காப்பாற்றும். அசைவம் சாப்பிடுகிறவர்கள், குறிப்பாக மாட்டிறைச்சி பிரியர்கள், அத்துடன் கொள்ளு சேர்த்து சமைக்கலாம். மாட்டிறைச்சி அதிக கொழுப்பு நிறைந்தது.

கொள்ளு அந்த கொழுப்பை உடலில் தங்கவிடாமல் காக்கும். அதற்காக தினமும் மாட்டிறைச்சி சாப்பிடவேண்டும் என்கிற அவசியமில்லை. இது என்றோ ஒரு நாளைக்குத் தான். மதியமோ, இரவோ பலமான விருந்து சாப்பிடப் போகிறீர்கள் என வைத்துக்கொள்வோம். அன்றைய தினம் காலையில் புழுங்கல் அரிசியும் கொள்ளும் சேர்த்துக் கஞ்சிசெய்து குடித்தால், அடுத்தடுத்த வேளைகள் சாப்பிடப் போகிற உணவின் கொழுப்பினால் உடலுக்கு பாதிப்பு வருவது தவிர்க்கப்படும்.




# வாழை இலை

டேய் சதீஸ் முதல் போய் அந்த சுப்ரபாதம் சி.டியை நிப்பாட்டு! காலை நாலு மணியிலிருந்து காது. கன்னம் வீங்கிப் போச்சு. குளித்துவிட்டு வந்த மோகனிடம்... என்னங்க உங்க தங்கைக் கிட்டேயிருந்து லெட்டர் வந்திருக்கு. அவ குழந்தைக்கு வருகிற புதன்கிழமை பிறந்தநாளாம். நல்லூர் பத்தாம் திருவிழா அன்று வருகுது குடும்பத்தோடு வரச்சொல்லி எழுதியிருக்கா... போனிலும் கதைச்சவா...

சமையலறையிலிருந்து சொல்லிக் கொண்டுவந்த.. சாந்தி சோபாவில் உட்கார்ந்திருந்த மோகனின் கையில் தேத்தண்ணி டம்ளரைத் திணித்தாள்... இம்முறை கொஞ்சம்... ஓய்வு சந்நிதி முருகன். தெல்லிப்பளை துர்க்கை அம்மன். நல்லூர் முருகன் எல்லாம் ஒன்றாக கொடியேறிவிட்டது. ஓய்வாக இருக்கலாம் என்று நினைத்தால்... என்னங்க நாம அவசியம் போகத்தான் வேணுமா? பேச்சை மெதுவாக ஆரம்பித்தாள். இது ஒண்ணும் முதல் பிறந்தநாள் இல்லை. குழந்தை பிறந்து இரண்டு வருசமாச்சு இப்படித்தான் போன வருசம் உடுப்பு. அது இதுன்னு... ஐந்து ஆயிரம் ரூபாய்க்கு மேலேயே செலவாயிடுச்சு.

இதெல்லாம் சாந்தி பேசி முடிப்பதற்குள் ``கொஞ்சம் பேசாம இருக்கிறியா... அம்மா இல்லாம வளர்ந்த பொண்ணு அவ. அவளுக்கு எல்லாமே நான்தான். நீயும் சதீசும். மைதிலியும் வரவேண்டாம். நான் மட்டும் போயிட்டு வர்றேன். இந்தப் பேச்சை இதோடு விடு கோபமாகச் சொல்லிக்கொண்டு வெளியே கிளம்பிய மோகனை முறைத்தவளாக இப்படி தங்கச்சி... தங்கச்சின்னு செலவு பண்ணிக்கிட்டே இருந்தீங்க... நானும் குழந்தைகளும் ஒரு... நாள் நடுத்தெருவில நிக்கவேண்டிவரும் அதையும் ஞாபகத்துல வைங்க.'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது ``ஹோம் வேர்க் செய்துகொண்டிருந்த மகள் மைதிலி ஓவென்று அழுது கொண்டே அம்மா நான் வச்சிருந்த பேனாவை அண்ணன் பிடுங்கிட்டான்மா...

``டேய் சதீஸ் வாடா இங்கே... பேனாவை மைதிலிக்கிட்ட கொடு'' என்று சாந்தி சத்தமாகக்கூற இது ஒண்ணும் அவளோட பேனா இல்லை. என்னோடது. அவளோட பேனாவை எங்கேயோ தொலைச்சுட்டாம்மா. சதீஸ் பயத்துடன் சொல்ல...

உன்னோட பேனாவா இருந்தா என்ன சதீஸ்... மைதிலி யாரு? உன் தங்கச்சிதானே அவளுக்கு நீதானே எல்லாம் கொடுக்கணும். மைதிலி கொஞ்சநேரம் எழுதிவிட்டு தருவா.. நீ வாங்கிக்கலாம் என்றவாறு அவளின் தலையைக் கோதிவிட்டுச் சென்றவள். ``அம்மா.... சதீசின் குரல் கேட்டு திரும்பினாள். என்னப்பா என்னை மட்டும் தங்கச்சிக்குக் கொடு... கொடுன்னு சொல்றே. அப்பாவை மட்டும் அத்தைக்கு ஒண்ணுமே கொடுக்க வேண்டாம்னு சண்டைபோடுறே. அத்தையும் அப்பாவுக்கு... தங்கச்சி தானேம்மா... சதீசின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவள் இதயத்தை சவுக்கால் அடித்தது போலிருந்தது.

தாத்தா... அம்மா சாப்பிட கூப்பிடு றாங்க வாங்க... என்று அழைத்தான் சதீஸ். மோகனும் அவனது அப்பா மகாலிங்கமும் எழுந்து வந்து அமர்ந்தார்கள். மோகன் மனைவி சாந்தி சாப்பாடு. குழம்பு பாத்திரங்களைக் கொண்டு வந்து வைத்துவிட்டு பிறகு வரிசையாக தட்டைக்கொண்டு வந்து வைத்தாள். என்னம்மா இலை இல்லையா? எனக் கேட்டார் மகாலிங்கம்.

அப்பா நான் வரும்போது அரசடிச் சந்தி வரியலும் போட்டாச்சு. சொக்கன் கடையில ஒரு ஜோடி தலைவாழை இலை 10ரூபாவாம். மாத்தின காசும் இல்லை... அதுதான்.. சதீஸ் அப்பா என்னிடம் 20 ரூபா இருக்கு. சந்திக் கடையில் போய் வாங்கி வரட்டா... எங்கடா போவே. தெரு முழுக்க ஒரே வாகனம். ஒரே நாய்ப்பட்டாளம் ஏதாவது... கடிச்சி வைக்கணுமா? தாத்தா தட்டுலேயே சாப்பிடுவாரு என்ற சாந்தி உணவை போடத் தொடங்கினாள்.

மகாலிங்கம் எப்போதும் வாழை இலையில்தான் சாப்பிடுவார். முன்பெல்லாம் ஒரு நாள் வாழை இலை இல்லை. தாமரை இலையில் சாப்பிடுங்கள் என்றால் கத்துவார். மோகன் சைக்கிளை எடுத்துக் கொண்டு எங்காவது சுற்றி வாங்கி வந்துவிடுவான். இப்போது அப்படி கத்தமுடியாது. அப்போது குடும்பத்தின் பொறுப்பு இவரிடம் இருந்தது. இப்போது வேலையில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்தவர் என்பதால் ஓய்வுபெறும்போது வந்த தொகையோடு சரி... அதுவும் மகளின் திருமணத்திற்கும் மகனுக்கும் ஸ்கூட்டி பைப் வாங்குவதற்கும் சரியாகிவிட்டது.

மனைவியும் போய்ச் சேர்ந்துவிட்டாள். இப்போது மகனிடம்தான் வாசம். தந்தை பார்த்த அதே வேலையைத்தான் மோகனும் தொடருகிறான். ஆரம்பத்தில் தவறாமல் வாழை இலை வாங்கி வந்துவிடுவான். இப்போது இவ்வளவு காலமும் வாழை வேண்டின காசுக்கு ஒரு மாடி வீடு கட்டியிருக்கலாம். சாந்தி பேசாமல் இரு...

பக்கத்து வீட்டுக் காசிநாதரைப் பாருங்கோ.. உங்க அப்பா வயசுதான் அவருக்கும். என்ன புத்திக்கூர்மையாய் இப்பவும் என்ன துடியாட்டம். காலையில் இருந்து ஒவ்வொரு நாளும் நானும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறன். நாயன்மார்கட்டுக் குளத்துக்குத் தனியாகப் போவார். வரும்போது கட்டுக்கட்டாய் தாமரை இலை. தாமரைக் கிழங்கு. தாமரைப் பூ எல்லாம் கொண்டுவருவார். எனக்கும் சிலநேரம் தருவார். பதினொரு மணி எண்டால் கோவிலுக்கு வெளிக்கிடுவார்... அவரின் மகள் சொல்லுவாள் கோவில் கொடியேறிட்டால் தாங்கள் உலையே வைக்கமாட்டார்களாம். தாத்தாவுக்குத் தாமரைக் கிழங்கு கறி அம்மா சமைப்பா. அதோடு நாங்களும் சாப்பிடுவம். தாத்தா வரும்போது மண்டபத்தில் சாப்பாடு வாங்கிவருவார். குடிக்கப் போத்தலில் யூசும்... மோரும் கொண்டுவருவார். ஆமிக்காரர் கொடுத்த சாப்பாடு பார்சலும் கிடந்து இழுபடும்... எங்களுக்கும் இருக்கும்போதே பெரிசு! அடியே பெரிசாய் சத்தம்போட்டு கதைக்காதே. அப்பா பக்கத்து றூமில்தான் இருக்கிறார்.

இனி இந்த மௌனம்தான் தொடருமா? என்று நினைத்த மகாலிங்கத்துக்கு மனசு கனத்தது. தொண்டையில் சாப்பாடு இறங்குவேனா பார் என்றது. அரைகுறை யாய் சாப்பிட்டுவிட்டு எழுந்துகொண்டார். மறுநாள் ரீ.வியில்... ஒரு நாடகத்தை பார்த்துக் கொண்டிருக்கும்போது மோகனுடன் வேலை செய்பவன் வந்தான்... வாப்பா.. என்ன ஓபீஸ் போகலையா? எனக் கேட்டார். அங்கிருந்துதான் வரேன் என்றவன்... தயங்கினான்.... என்ன விசயம் என்று கேட்டார் குழப்பத்துடன்...

மோகன் காலையில் வரும்போதே வழியில் அக்ஸிடென்ட் ஆயிடுச்சி போலிருக்கு. ஆஸ்பத்திரியில் இருந்து ஓபிசுக்கு போன் வந்தது. கம்பனி விசிட்டிங் கார்ட்டை வச்சு போன் செய்தாங்க என்றான்.

கடவுளே! ஐயையோ அவருக்கு என்ன ஆச்சு! மாமாவை இப்படி நான் பேசியதற்கு எனக்கு தண்டனை தராமல் அவர்மூலம் எனக்குப் பாடம் புகட்டி விட்டாய். இனிமேல் எக்காரணம் கொண்டும் நான் கதைக்காமல் இருக்க நல்லூர் பெருமானே எனக்கு புத்தியைக் கொடு என மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்...! ``பயப்படாதீங்க.. போய் பார்த்தோம். கால்லதான் பயங்கரமான அடி... என்றான்.'' அவன்.

மூவரும் மருத்துவமனைக்குக் கிளம்பினார்கள். பத்து நாள் கழித்து வீட்டிற்கு அழைத்துவந்தார்கள். இரண்டு கால்களுமே பலத்த அடியைப் பெற்று இருந்தது. பூரண குணமாக ஒரு ஆண்டாவது ஆகும் எனக்கூறிவிட்டார்கள்.

வேலைசெய்யும் அலுவலக நிர்வாகம் வந்து ஆறுதல்கூறி சொற்ப தொகையைத் தந்தது. ஓராண்டு கழித்து பணியில் சேர்த்துக்கொள்வதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டது.

இந்தப் பணத்தை வெச்சுக்கிட்டு எப்படி ஒரு வருசம் குடும்பத்தை நடத்த முடியும் என்றான் மோகன் கவலையாக. கவலைப் படாதேடா நான் வேலைக்குப் போறேன் என்றார் மகாலிங்கம்.

``ஆ... அப்பா என்ன சொல்... சொல்றீங்க? ஆமாண்டா நம்ம சிவத்தாரின் ஜவுளிக்கடைக்கு ``பில்'' போட ஒரு ஆள் தேவையாம். ஒரு நாளுக்கு 800 ரூபா தருவினமாம். மாதம் 25 ஆயிரம் தருவதாக சிவத்தாரின் மகன் என்னுடன் கதைச்சவர். வயசு பற்றி பிரச்சினையில்லையாம். காலை எட்டு மணியிலிருந்து இரவு ஏழு மணிவரை கஸ்டம் இல்லே. அதனால் வருவதாக சொல்லிவிட்டேன். ``முடியுமாப்பா... முடியும்டா உனக்கு நல்ல குணமாகிற வரைக்கும் போறேன்... இல்லைன்னா குடும்பத்தை ஓட்டறது கஸ்டம் என்றார்.

மறுநாளே... வேலைக்கும் புறப்படத் தயாரானார்... ``மாமா மத்தியானம் சாப்பாடு கட்டித் தந்துடட்டுமா? எனக் கேட்டாள் சாந்தி.

வ.குணபாலசிங்கம், நல்லூர்.

வேணாம்மா மத்தியானம் இரண்டு மணிநேரம் லீவு இருக்கு. அதனால வந்தே சாப்பிடுறன். பக்கத்திலேதானே எனக் கூறிவிட்டுப் புறப்பட்டார்.

மத்தியானம் வீடு திரும்பினார். சாப்பிட வாழை இலை வைக்கப்பட் டது. என்னம்மா இது யார் வாங்கி வந்தா? நான்தான் மாமா மார்க்கெட் போய் வாங்கிவந்தேன்... என்றவளை நிமிர்ந்து பார்த்துவிட்டுச் சொன்னார்....

``மருமகளே'' நான் துர்க்கா மண்டபத்தில் வடிவாகச் சாப்பிட்டுவிட்டு மோர்த்தண்ணியும் குடிச்சு உங்க ளுக்கும் வாழை இலைச் சாப்பாடு இருக்கு. வடிவாக போதுமானவரை சாப்பிடுங்கள். பெரிய பெப்சி போத்தலில் சர்பத் யூசும் இருக்கு. சதீஸ், மைதிலி க்கும் கொடுங்கோ. சர்பத்தை கொண்டே பிறிச்சில் வையுங்கோ.. சூடாயிருக்கும்...

வேணாம்மா.. இனிமேல் வாங்காதே. உபயோகிச்சு முடிஞ்சதும் தூக்கிப் போட்டுடற வாழை இலையைவிட தட்டே போதும்...

**(உண்மை கலந்த கற்பனை)**

# உலகை உலுக்கிய புகைப்படத்தை எடுத்த பெண் புகைப்படக் கலைஞர்



உலக நாடுகளின் மனச்சாட்சியை உலுக்கி, ஒரு புகைப் படத்தின் அசாதாரண-மான வலிமையை பறைசாற்றிய இந்தப் புகைப்படமே நம்மை செயலற்றுப் போகச் செய்கிறது என்றால், இந்தப் புகைப்படத்தை எடுத்த, துருக்கியைச் சேர்ந்த டோகன் செய்தி நிறுவனத்தில் புகைப்பட-நிருபராக பணியாற்றும் நிலுபர் டெமிர் என்ற பெண்ணின் உணர்வுகளை நினைத்துப் பார்க்கவே பயமாயிருக்கிறது.

சிரியாவில் நிலவும் போர்ச்சூழல் காரணமாக இந்த ஆண்டில் ஆயிரக்கணக்கானோர் ஐரோப்பாவிற்கு சென்று தஞ்சம்புக கடல் வழியாக பாதுகாப்பற்ற பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இவர்களில் 23 பேர், கடந்த புதன் (02)அன்று, துருக்கியிலிருந்து கிரீஸ் செல்ல இரு படகுகளில் சென்றனர். அதில் படகு கவிழ்ந்து 12 பேர் நடுக்கடலில் மூழ்கி மூச்சுத்திணறி, துடிதுடித்து பலியாகினர். 9 பேர் மட்டுமே பிழைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் ஒருவன்தான் மூன்று வயதேயான ஐலன். அவனோடு சேர்ந்து அவன் தாயும் 5 வயது அண்ணனும் நீரில் மூழ்கி இறந்தனர். முன்னரே இதுபோன்ற சம்பவங்கள் பல நிகழ்ந்திருந்தும்கூட தன்நாட்டிற்கு அகதிகளை அழைத்துக்கொள்வதில் ஆர்வம்காட்டாமல் பிடியை இறுக்கியபடியே இருக்கிறார்கள் ஐரோப்பிய கொள்கை வகுப்பாளர்கள்.

இந்த நிலையில், நிலுபர் டெமிரின் இந்த புகைப்படம், உலகின் கள்ள மௌனத்தை அசைத்து பார்க்கத் துவங்கியுள்ளது. இந்த கொடூர சம்பவம் நடந்த துருக்கியின் போட்ரம் மாவட்டம், கடல் கடந்துவரும் அகதிகளின் சந்திப்பு புள்ளியாக உள்ளது. இங்குள்ள அகியர்லார் கடற்கரையில், கடந்த புதன்கிழமை(02) காலை 6 மனியளவில் இந்த புகைப்படத்தை எடுத்துள்ளார் டெமிர்.

இந்த அனுபவம் குறித்து அவரளித்துள்ள பேட்டியில், "3 வயது குழந்தையான ஐலன் குர்தியை பார்த்த நொடி நான் அப்படியே உறைந்து போய்விட்டேன். அய்லான் குர்தியின் முகம் கடற்கரை மணலில் புதைந்திருந்தது. அப்போது என்னால் முடிந்த ஒரே விஷயம், அவனது அலறல் சத்தம், இந்த உலகின் காதில் கேட்கும்படி செய்வது ஒன்றுதான். அதுதான் ஒரு நிருபராக என்னால் முடிந்தது.

ஐலனின் சகோதரனான காலிப், அங்கிருந்து 100 மீற்றர் தூரத்தில் கிடந்தான். அங்கு இருந்த யாருமே ஆபத்து கால ஜக்கெட் (மிதவை சட்டை) அணிந்திருக்கவில்லை. இது எவ்வளவு கொடூரமானது என்பதை இந்த புகைப்படம் உலகிற்கு உணர்த்தும். இது துருக்கியின் எல்லையைக் கடந்த ஒரு சர்வதேச பிரச்சினை." என்றார்.





# உயிரைத் தந்தவளின் உயிரைக் காக்கும் வாய்ப்பு...

"சுமந்த பிள்ளையாய் நானிருந்தேன் அம்மா! நான் சுமக்கும் பிள்ளையாய் நீ ஆனாய் அம்மா!" என்ற பாடல் வரிக்கு ஏற்ப எல்லா மகன்களின் பாசத்தையும் ஒரே மகனாக தனது தாயிடம் பொழிந்துகொண்டுள்ளார், சீனாவைச் சேர்ந்த ஒரு அன்பு மகன்.

பெண் குழந்தைகளின் மனதில், தந்தை எப்போதுமே ஹீரோதான். இதை ஊர்ஜிதப்படுத்தும் விதமாகவே பெண் குழந்தைகள் தான் செய்யும் காரியங்களால் தந்தைக்கு அவ்வப்போது அதை நினைவூட்டிக்கொண்டே இருப்பர். ஆனால், ஆண் பிள்ளைகள் தங்களின் தாயின்மீது வைத்துள்ள அன்பை வெளிப்படுத்த நமது சமூகங்களில் வாய்ப்பு கிடைப்பது மிகமிக அரிது. இந்த வாய்ப்பு கிடைக்கும் ஒரு சில மகன்கள் மட்டுமே பாக்கியசாலிகள்.

தென்மேற்கு சீனாவில் உள்ள சாங்க்காங் நகரத்துக்கு அருகே உள்ள டோங்க்சின் கிராமத்தில் வாழ்ந்து வரும் சென் க்சிங்யின்(48) என்பவர் விவசாயக் குடும்பத்தில் ஆறாவது பிள்ளையாக பிறந்தார். தனது ஏழு வயதில் மின்சாரம் தாக்கியதில், பாதிக்கப்பட்டு இரு கைகளையும் முழுமையாக இழந்தவர், தனது அன்றாடப் பணிகளை தானே கவனித்துக்கொள்கிறார்.

அதுமட்டுமின்றி குடும்பத் தொழிலான விவசாயம், ஆடு மேய்த்தல் என தினந்தோறும் பல்வேறு வேலைகளையும், பொறுப்புடன் கவனிக்கும் சென் க்சிங்யின், ஒரு நல்ல மகனாக நடந்து கொண்டதாலேயே சீனப் பத்திரிகைகளின் முழுக்கவனத்தையும் தற்போது தனது பக்கமாக ஈர்த்துள்ளார்.

கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னர், மூச்சுக்குழாய் அழற்சியால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாய் இருக்கும் தனது தாயை, அவரே முழுமையாக கவனித்து வருகிறார். இரு கைகளும் இல்லாத நிலையிலும், மூன்று வேளையும் சமைத்து, தனது வாயால் பற்றியிருக்கும் கரண்டியால் உணவை எடுத்து தாயாருக்கு பாசத்துடன் ஊட்டியும் விடுகிறார்.

கை, கால் நன்றாக இருக்கும் பலரும் தமது தாய், தந்தையரை கவனிக்க நேரமின்றி, பணம் சம்பாதிக்கவும் நாள் முழுவதும் அவசர வேலைகள், தம் மனைவி, குழந்தைகள் என மட்டுமே அலைந்துகொண்டிருப்பர்.


எந்தப் பிரயோசனமுமின்றி வீட்டிலிருக்கும் பெற்றோரை, குப்பையாய் வீட்டை விட்டு அனுப்பும் பிள்ளைகளுக்கு இடையே தனது 88 வயது தாயை கவனித்துக்கொள்ளும் அந்தக் கிராமத்தின் ஹீரோவாக சென் க்சிங்யின் மாறியுள்ளார். அனைத்து தாயாரும், இதுபோல பிள்ளை தங்களுக்கு இருக்க வேண்டுமென ஆசைப்படும் வகையில் தன்னுடைய தாயாரை அவர் கவனித்துவருகிறார்.

இதுபற்றி கேட்டபோது, "கை இல்லையென்றால் என்ன? என் தாயை கவனித்துக்கொள்ள கால் இருக்கிறது. அது போதும்!" என்கிறார் சென் க்சிங்யின்.

ஒரு மனிதனுக்கு நிறைய பிள்ளைகள் இருக்கலாம். ஆனால் ஒரே தாய்தான் இருக்க முடியும். ஊரே நம்மை முதியவனாய் பார்க்கும்போதும், எப்போதும் குழந்தையாகவே எண்ணும் தாயை நேசிப்போம். அவர்கள் நம்மை கோபப்படுத்துவதாலோ, தொல்லை கொடுப்பதாலோ தாயில்லை என ஆகிவிடுமா என்ன?

கைகள் இல்லாதவரே இவ்வளவு அழகாக தனது தாயை கவனித்துக் கொள்ளும்போது, நேரமில்லாமையால் தாயை கவனிக்க முடியவில்லை என்று இனியும் காரணம் கூறாதீர்!

# இராட்சத உணவுப் பண்ணை



ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த கட்டடக் கலைஞர்கள் நீரில் மிதக்கக்கூடிய இராட்சத உணவுப் பண்ணையை உருவாக்கியுள்ளனர்.

மூன்று தட்டுக்களைக் கொண்ட இப்பண்ணையில் நாளாந்தம் அதிகரித்துவரும் சனத்தொகைக்கு ஏற்றவாறு வருடாந்தம் 10 தொன்கள் வரையான மேலதிக உணவை உற்பத்தி செய்யமுடியும்.

இவற்றில் 1.7 தொன் மீன்களும், 8.1 தொன்கள் மரக்கறி மற்றும் பழவகைகளும் அடங்கும். இங்கு உணவு உற்பத்திசெய்வதற்கு நிலமோ அல்லது தூய நீரோ அவசியம் இல்லை என்பது விசேட அம்சமாகும்.

அதாவது சூரியசக்தியின் உதவியுடன் இயக்கப்படும் இப் பண்ணையில் உப்பு அகற்றப்படாத கடல் நீரே நேரடியாகப் பயன்படுத்தப்படுகின்றது.

மேலும் இப்பண்ணையின் அடிப்பகுதி மீன் உற்பத்திக்கு எனவும், மேற்பகுதி மரக்கறி மற்றும் பழவகை உற்பத்திக்கு எனவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்பண்ணையானது 200 மீற்றர் அகலம், 350 மீற்றர் நீளம் உடைய தாக அமைந்துள்ளது.



# இருபுறமும் காட்சிகள்

தொலைக்காட்சி துறையில் முன்னணியில் திகழும் LG நிறுவன மானது இருபுறமும் காட்சிகளை (Double Sided) உருவாக்கக்கூடிய திரையினை உருவாக்கியுள்ளது.

இதனை, ஜேர்மனியின் தலைநகர் பெர்லினில் இடம்பெற்ற IFA 2015 நிகழ்வில் அறிமுகம் செய்துள்ளது.

OLED (organic light-emitting diode) தொழில்நுட்பத்தினைக் கொண்டு உருவாக்கப்பட்ட இத்திரையில் 281 சென்ரிமீற்றர், 139 சென்ரிமீற்றர் அளவுகளைக்கொண்ட இரு வகைகளை உருவாக்கியுள்ளது.

இதேவேளை இவற்றின் தடிப்பு 5.3 மில்லி மீற்றர் தடிப்பினை கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது மாதிரிகளை மட்டுமே அறிமுகம் செய்துள்ள LG நிறுவனம் விரைவில் விற்பனைக்கு விடக்கூடிய திரைகளை உருவாக்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.




# முதலைப் பிரியன்

முதலை வேட்டை என்றதுமே நினைவுக்குவருவது, எப்போதும் தொலைக்காட்சியில் முதலைகளுடன் வலம் வரும் ஸ்டீவ் இர்வின்தான். முதலைகளின் காதலனாக திகழ்ந்த இவர், சில வருடங்களுக்கு முன் விஷமீன் கடித்து இறந்தது உலகம்முழுவதும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. அந்த சோகத்தைப் போக்கும்வகையில் தற்போது உதயமாகியிருக்கிறான் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த குட்டி ஸ்டீவ் இர்வின். இவனது பெற்றோர்களான க்ரெக், ஜூலியா இருவருமே வனவிலங்கு ஆர்வலர்கள். புலிக்கு பிறந்தது பூனையாகுமா? 3 வயதிலேயே தனியாக முதலைகளைப் பிடிக்க தொடங்கிய "குட்டி ஸ்டீவ் இர்வின்" சார்லி பார்கருக்கு தற்போது 5 வயது.

இவனது பெற்றோர் விக்டோரியா நகரில் பலாரட் என்ற வனவிலங்கு பூங்காவை நிர்வகித்துவருகின்றனர். பள்ளிக்குச் செல்லும் சார்லி, பள்ளி முடிந்து வீட்டுக்கு வந்ததும் விலங்குகளுக்கு உணவிடுவது, சுற்றுலாப் பயணிகளை காட்டிற்கு அழைத்துச் செல்வது, உப்பு நீர் முதலையை பின் பக்கத்தில் இருந்து வளைத்துப்பிடிப்பது என்ற ஒரு முழுமையான காட்டு ரேஞ்சராகவே மாறியுள்ளான். இதனால், அந்த பூங்காவிற்கு வரும் அனைவரும் சார்லியை ஜூனியர் ஸ்டீவ் இர்வின் என்றே அழைக்கின்றனர்.



# பாஞ்சாலியின் புலம்பல்

எனக்குச் சேதி வந்ததும்.
"குரு வம்சத்து அரசியை
ஆணையிடத் துரியனுக்கு
உரிமை இல்லை!" என்று
மறுமொழி அனுப்பினேன்.
"உன்னைப் பணயம்
வைத்துத் தோற்றுவிட்டார்
உன் கணவர். எனவே.
உன்மீது உரிமை எனக்கு
இருக்கிறது!" என்று சொல்லி
அனுப்பினான்.
"தான் தோற்றபிறகு.
என்னைப் பணயம் வைக்க
அவருக்கு உரிமை இல்லை!"
என்று மறுத்தேன் நான்.
"இப்படிச் சொன்னால்
அவள் வரமாட்டாள்.
அவளைப் பற்றி இழுத்து வா!"
என்று தம்பி துச்சாதனனை
அனுப்பினான் துரியன்.
அவன் பிடியிலிருந்து
தப்பி ஓட முயன்ற என் நீண்ட
கருநீலக் கூந்தலைப் பற்றி.
என்னைத் தரையில் புரட்டி
இழுத்துக்கொண்டல்லவா
வந்தான் அந்தப் பாவி
துச்சாதனன். அவனது
தீச்செயலை யார்
கண்டித்தார்கள்? இந்த
முறையற்ற செயலைக்
கண்டித்து எழுத ஒருவர் கூடவா
இல்லாது போய்விட்டார்கள்.
இந்தப் புண்ணிய பூமியில்?!
"மாதவிடாய் காலத்தில்
இருக்கும் என்னை இந்த
குரு வீரர்கள் முன்னிலையில்
இழுத்துவருகிறாய். உண்மை
யில் இது தகாத காரியம்.
ஆனால் இங்கிருக்கும் ஒருவரும்
இதைக் கண்டிக்கவில்லை.
நிச்சயமாக இவர்களும்
உன்னைப் போன்ற மனம்
கொண்டவர்களே! சீ...
உண்மையில் பாரதர்களிடம்
அறம் மறைந்துவிட்டதா?
உண்மையில் க்ஷத்திரிய
ஒழுக்கமும் மறைந்துவிட்டதா?
அல்லது ஒழுக்கத்தின் எல்லை
களைக் கடக்கும் இந்தச்
செயலை. இந்தச் சபையில்
இருக்கும் ஆசான்கள் அனை-
வரும் அமைதியாகப் பார்த்துக்
கொண்டிருக்கிறீர்களே!! என்று
அழுதேன். அரற்றினேன்.
அந்த அத்தினாபுரத்து அர-
சவையில் யாரும் என் பக்கம்
பேசவில்லையே. வாய்மூடி
அமைதிதானே காத்தார்கள்!
"ஓ. துரோணரும். பீஷ்மரும்.
விதுரரும். இந்த மன்னரும்
திருதராஷ்டிரரும் தங்கள்
சக்தியை இழந்துவிட்டனரே.
அல்லது. குரு வம்சத்தவர்களில்
முதன்மையான இந்த
மூத்தவர்கள் ஏன் இக்
குற்றத்தைக் கண்டும்
அமைதியாக பார்க்கின்றனர்?"
என்று கதறினேனே. யாராவது
எனக்காகத் தமது சுண்டுவிரலைக்
கூட அசைத்தார்களா?
"நீங்கள் தோற்றபின்
என்னை வைத்துச் சூதாட
உங்களுக்கு என்ன உரிமை
இருக்கிறது? அடிமைக்கு
மனைவி. மக்கள் என்ற
உறவேது?" என்று
இடித்துரைத்தும். இடித்த
புளியாகத்தானே சமைத்து
இருந்தார் தருமபுத்திரர்!
கடைசிவரை ஒரு சொல்கூட
அவர் வாயிலிருந்து
உதிரவில்லையே!
நீங்களும் அந்த அவை
யினரைப் போலத்தானே
அமைதி காக்கிறீர்கள்!
கேட்டால். நான் துரியன்
தடுக்கி விழுந்ததைப் பார்த்துச்
சிரித்தேன். கர்ணனை
அவையோர் முன்னர்
அவமானப்படுத்தினேன்
என்று எனக்கு எதிராகவே
வழக்காடுகிறீர்கள்!
தடுக்கி விழுந்தால் தாயும்
நகைப்பல் என்ற பழமொழிப்
படித்தானே நான் நண்டந்து
கொண்டேன்!
என்னைத் "தாசியே!"
என்று ஏசினானே துச்சாதனன்.
அந்த வார்த்தைகளைக்
கேட்ட கர்ணன் மிகவும்
மகிழ்ந்து அந்தப் பேச்சை
அங்கீகரித்து. சத்தமாகச்
சிரித்தானே. அவனைக்
கடிந்து நீங்கள் ஏன் ஒரு
சொல்கூட சொல்லத்
தயங்குகிறீர்கள்?
ஒரு பெண்ணை எப்படி
யெல்லாம் அவமானப்படுத்த
முடியுமோ. அப்படி அவமானப்
படுத்துவதுதான். நான் என்
தன்னுரிமையை நிலைநாட்டிக்
கொண்டதற்கும். தடுக்கி
விழுந்தவனைக் கண்டு
சிரித்ததற்கும் கொடுக்கப்படும்
தண்டனையா? இதை எப்படி
உங்களால். பெண்மையைப்
போற்றிப் பேசும் உங்களால்
நியாயப்படுத்த முடிகிறது?
அச்சபையில் எனக்குப்
பரிந்து பேசிய இருவர்கள் என்
கணவர்களில் ஒருவரான
பீமனும். துரியனின் இளை-
யோனான. சத்திரிய மனைவி
அல்லது வேறோருத்திக்கும்.
திருதராட்டிரனுக்கும் பிறந்த
விகர்ணனும்தானே!
"சகாதேவா. நன்நெறியற்ற
இச் செயலைச் செய்த
அண்ணனின் கரத்தை
எரிக்கிறேன்!" என்றல்லவா
பீமன் பொங்கி எழுந்தார்!
உங்களால் போற்றப்படும்
மகாகவி பாரதியும். என்
பீமனின் சொற்களைக் கவிதை
மழையாய்ப் பாஞ்சாலி
சபதத்தில் பொழிந்ததும்
தாங்கள் அறிந்ததுதானே!
'சூதர் மனைகளிலே...
அண்ண!
தொண்டு மகளிருண்டு.
சூதிற் பணய மென்றே...
அங்கோர்
தொண்டச்சி
போவதில்லை. 69
'ஏது கருதிவைத்தாய்?
அண்ணே.
யாரைப்
பணயம்வைத்தாய்?
மாதர் குலவிளக்கை
அன்பே
வாய்ந்த வடிவழகை.
'அவன் சுடர்மகளை.
அண்ணே.
ஆடி யிழந்துவிட்டாய்.
தவறு செய்துவிட்டாய்
அண்ணே.
தருமங் கொன்றுவிட்டாய்.
'துருபதன் மகளைத் திட்டத்
துய்ந னுடற்பிறப்பை.
இருபகடை யென்றாய்.
ஐயோ! இவர்க்
கடிமையென்றாய்!
'இதுபொறுப்ப தில்லை.
தம்பி! எரிதழல் கொண்டுவா.
கதிரை வைத்திழந்தான்
அண்ணன்
கையை எரித்திடுவோம்.'

அதுமட்டுமா? துரியனின்
இளையோன் விகர்ணன்தான்
எப்படி எனக்காக
வாதாடினான்!
"மன்னர்களே. பாஞ்சாலி
கேட்கும் கேள்விக்கு
பதிலளியுங்கள்.

(தொடரும்...)




**✪ எதிர்க்கட்சி தலைவர் பதவியை வைத்துக்கொண்டு நாம் என்ன செய்யப்போகின்றோம் சிந்தியா?**

***மு.சாந்தன், தெல்லிப்பளை.***

நியாயமான கவலைதான். என்ன செய்வது? நீங்கள் வாக்குப் போட்டு தலைவர்களாக்குகின்றீர்கள். அவர்கள் மக்களின் விருப்பம் இதுவாகத்தான் இருக்கின்றது என்றும், மக்களின் விருப்பங்களுக்கு மாறாக நாங்கள் எந்த முடிவையும் எடுக்கமாட்டோம் என்று கூறியபடியே தான் எதிர்க்கட்சித் தலைமையை ஏற்றுக் கொள்கின்றார்கள். நாடாளுமன்றத்தின் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியை பெற்றுக் கொள்கின்றார்கள். அவர்கள் கூறுகின்ற மக்கள் நீங்கள்தானே.

**✪ சிந்தியா! கூட்டமைப்பிடம் எதிர்க்கட்சி தலைமை... இனி நடக்கப்போவது என்ன?**

***எம்.சர்வா, பதுளை.***

உங்களுக்கு முதலில் கேள்வி கேட்டவர், கூட்டமைப்பின் எதிர்க் கட்சி தலைமையை வைத்துக் கொண்டு என்ன செய்யலாம் என்று கேட்டிருக்கின்றார். நீங்களோ, இனிமேல் என்ன நடக்கப்போகின்றது என்று கேட்கின்றீர்கள். தமிழ் மக்களுக்கு எதிர்க்கட்சித் தலைமையை கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டிருப்பது பிடிக்கவில்லைபோல் தெரிகின்றது.

**✪ இலங்கையிடம் சர்வதேச விசாரணை மேற்கொள்ள வேண்டுமென பலதரப்பட்டவர்களும் பகீரதப் பிரயத்தனப்படு கின்றார்களே...?**

***மா.நிலவன், கிளிநொச்சி.***

பலதரப்பட்டவர்கள் என்று நீங்கள் யாரைக் குறிப்பிடுகின்றீர்கள். இந்த சர்வதேச சமூகம் என்றால் அது அமெரிக்கா என்பதுபோல், பலதரப் பட்டவர்கள் என்றால் கஜேந்திரன் அணியும், குறளிவித்தைக்காரர்களுமா? தமிழ் மக்கள் ஏகபோகமாக வாக்களிக்கும் கூட்டமைப்பினர் பிரயத்தனப்பட வில்லையே, அல்லது தமிழ் மக்களுக்கு தாங்களே தலைமைகள் என்று கூறிக்கொள்வோர் யாரும் பிரயத்தனம் செய்யவில்லையே. சிவில் அமைப்புக்கள், புத்திஜீவி புண்ணாக்குகள், ஆயர் படையணி என்று பலபேரும் இந்தப் பிரயத்தனத்தில் ஈடுபடவில்லையே, எல்லோரும் இன்னொரு கூடாரத்துக்குள் நுழைந்து கையெழுத்திட்டு, முகம் காட்டுகின்றார்களே ஒழிய, பல முனைகளிலும் இந்தப் பிரயத்தனத்தை பரவலாக முன்னெடுக்கவில்லையே.

**✪ அரசாங்கத்தின் வெற்றி எவ்வாறு இருக்கப் போகின்றது சிந்தியா?**

***ப.வந்தனா, கொழும்பு -15.***

இரண்டு வருடங்களுக்கு வெற்றி கரமாக இருப்பதை இப்போதைக்கு உடன்படிக்கைமூலம் உறுதி செய்திருக்கின்றார்கள். இரண்டு வருடத்துக்குள் சிலருக்கு சலித்துப் போய்விடலாம், சிலர் புதுச் சவாரிக்கு ஆயத்தமாகலாம். ஆனாலும் தலைமை களை திருப்திப்படுத்தும் கேவலமான அரசியல் வாழ்க்கைதான் அரசியல் என்றாகிவிட்டுள்ள நமது புறச்சூலில் சில கொடுக்கல்கள், வாங்கல்களால் சில முன் ஏற்பாடுகளை செய்துவிடவும் முடியும். அதில் கைதேர்ந்தவர்கள் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பார்கள். நீங்கள் கவலையை விட்டுவிடுங்கள்.

**✪ வாழ்க்கையில் தடுமாற்றம் வந்தால் என்ன செய்யலாம் சிந்தியா?**

***ந.மாளவிகா, கொக்குவில்.***

தடுமாற்றம் வருவது சகஜம்தான். அதைத் தவிர்க்கமுடியாது. ஆனால் அதை எதிர்கொள்ளலாம். எது நம்மை தடுமாறச் செய்கின்றது என்ற காரணத்தை பொறுமையாக சிந்தித்து அடையாளம் கண்டுகொண்டு அதை எதிர்கொள்ளத் தயாராகுங்கள். நிதான மாக நீங்கள் எதிர்கொண்டால் அந்தத் தடுமாற்றமே தடுமாறிப் போகும்.

**✪ தனி ஒருவன் படத்தில் அரவிந்தசாமியின் நடிப்பை பாராட்டுகின்றார்களே. நீங்கள் அதைப்பற்றி ஒன்றும் பகிர்ந்து கொள்ளவில்லையே?**

***எஸ்.காவேரி, காலி.***

ஜெயம் ரவி நேர்மையான ஐ.பி.எஸ் அதிகாரியாக அதே மிடுக்கோடு நடத்திருக்கின்றார். இவரது ஐ.பி.எஸ் காதலியாக நயன்தாரா அழகோடும் நடிப்போடும் அசத்தியிருக்கின்றார். இவர்களோடு, சுவாரஸ்யம் சேர்க்க நாசர், தம்பி ராமையா, அபிமன்யூ என்ற கதாபாத்திரமாக நடிகர் சித்தார்த் வாழ்ந்திருக்கின்றார். இவர்களை யெல்லாம் ஓரப்படுத்திவிடும் ஸ்டைல் மற்றும் ஸ்மார்ட் வில்லனாக அரவிந்தசாமி கதாநாயகனுக்கு இணையாக படத்தில் புகுந்து விளையாடி இருக்கின்றார்.

நீண்ட இடைவேளைக்குப் பிறகு திரையில் தோன்றி ரசிகர்களை மிரட்டியிருக்கின்றார் அரவிந்தசாமி. படம்பார்த்துவிட்டு வெளியில் வரும்போது, ஜெயம்ரவியின் திட்டங்களையும், நடவடிக்கைகளையும் விடவும் வில்லன் அரவிந்தசாமியின் நடிப்பே நம்மை ஆட்கொள்ளும் அளவுக்கு சிறந்த வில்லன். ஒரு ஐ.பி.எஸ் அதிகாரிக்கும், சமூகத்தில் உள்ள பெரிய குற்றவாளிக்குமிடையே நடக்கும் மோதல் ரசிக்கும்படியாக ஒரு கதைக்களத்தை அமைத்திருக் கின் றார். ஜெயம் ரவியின் அண்ணன் இயக்குநர் மோகன் ராஜா. சிறந்த பொழுதுபோக்கு படமாக பதிவாகும்.



# காதிலை பூதந்தசாமி

**வணக்கமுங்கோ. உலகறிய எதிர்க்கட்சி, உள்ளுக்குள்ள ஆளுங்கட்சி என்ற இரட்டை வேசத்தில கூத்தமைப்புத் தலைவரும், அவருடைய சிஷ்யனும் சிவாஜியை மிஞ்சிய நடிப்பு நடித்துக்கொண்டு இருக்கினமுங்கோ.**

ஜனாதிபதி மாளிகையில மதியச் சாப்பாடும், பிரதமர் மாளிகையில இரவுச் சாப்பாடும் சாப்பிடும் தண்டச் சாப்பாட்டு இராமனாக சம்மந்தமானவரின்ர சிஷ்யன் கடந்த இருபது நாட்களுக்கும் மேலாக உலாவிக்கொண்டு திரிஞ்சவராமுங்கோ.

ஏனெண்டு திங் பண்ணுறியளோ, தமிழ் மக்களின்ர அரசியல் பிரச்சனைக்கு தீர்வை வலியுறுத்தியோ, இல்லாட்டில் அமைச்சுப் பொறுப்புக்களை பெற்றுக்கொண்டு தமிழ் மக்களின் கோரிக்கைக்கு வலிமை சேர்க்கவோ எண்டு மட்டும் முட்டாள்தனமாக திங் பண்ணிப் போடாதேங்கோ.

சுமோவின் குடுமி சும்மா ஆடுமோ, அவர் தண்டச் சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டு திரிஞ்சது, வீணைக் கட்சித் தலைவர் தேசிய அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ள நிலையில் அவருக்கு அமைச்சுப் பொறுப்புக்கள் எதையும் வழங்கிப் போடாதேங்கேங்கோ என்று சொல்லிக்கொண்டேதானுங்கோ சுடலைக் குருவியைப்போல சுத்திக் கொண்டு திரிஞ்சவராமுங்கோ.

அவருக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்கினால் நாங்கள் பார்ளிமெண்டில எதிர்க்கட்சியாக நீங்கள் சொல்லுற மாதிரி நடிக்கமாட்டம் எண்டும் மிரட்டிப் பார்த்திருக்காருங்கோ.

வடமாகாணத்துக்கு ஒரு அமைச்சரும் தமிழ் அமைச்சர் எங்களை அறியாமல் நியமிக்கப்படக் கூடாது எண்டு ஒற்றைக்காலில நிண்டவராமுங்கோ. அதிலையும் வீணைக்கட்சியின்ர தலைவர் அமைச்சராகினால் கூத்தமைப்பு பதினாரு பேர் எம்.பியாகியதிலையும், எதிர்க்கட்சி ஆனதிலையும் வேலை இல்லாமல் போய்விடும். அந்த ஆள் நாங்கள் இருபத்தி ரெண்டு பேர் எம்.பியாக இருக்கேக்கையே எங்களையெல்லாம் ஓரம் கட்டிப்போட்டு அரசியலில பிரகாசிச்ச மனிசன்.

அவரை எங்களாலை கட்டுப்படுத்த முடியாது, நாங்களும் எங்களுடைய முழு பலத்தையும் பிரயோகித்து அவரை ஓரம்கட்ட முயற்சிக்கின்றோம். ஆனால் அந்த வீணைக்கட்சியின் தலைவர் ஏதோ ஒரு வழியிலை எங்களை தள்ளிவிட்டுப்போட்டு போய்விடுகின்றார்.

இம்முறை அவர் விடயத்தில நாங்கள் ரொம்பக் கவனமாக இருக்கின்றோம், ஆளும் தரப்பாக இருக்கவேண்டிய நாங்கள், ஆளும் கட்சியின் எதிர்க்கட்சியாக இருப்பதற்கு சம்மதிச்சதே எங்கட கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வீரகள் என்பதாலைதான். எங்களை ஏமாற்றிப்போடாதேங்கோ. காலில விழாத குறையாக மண்டாடிக் கொண்டு திரிஞ்சவராமுங்கோ.

சோந்த மக்களுக்கே ஒரு அமைச்சர் நினைத்து பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் கூட எரிச்சலாகி இருக்கும் எண்டு பக்கத்திலிருப்போர் சொல்லினமுங்கோ. தாங்களும் அமைச்சுப் பொறுப்பை எடுக்க மாட்டினமாம், வேறு ஒரு தமிழருக்கும் கொடுக்கவும் விடமாட்டினமாமுங்கோ. வைக்கோல் பட்டடை நாய்க்கதைதான் நமக்கு ஞாபகம் வருகுதுங்கோ.

ஆனால் கூத்தமைப்பையும் சேர்த்துக் கொள்ளுங்கோ, அவர்களும் ஆளுங்கட்சியாக பங்கெடுத்தால் அதனால் தமிழ் மக்களுக்கு கூடுதலான நன்மைகள் கிடைக்கும், தீர்வையும் உள்ளே இருந்துகொண்டே வலியுறுத்திப் பெற்றுக் கொள்ளமுடியும் எண்டுதான் முன்னைய காலங்களில வீணைக்கட்சித் தலைவர் அரசாங்கங்களிடம் கூறியும், கூட்டமைப்புக்கு பகிரங்கமாகக் கூறியும் வந்திருக்காருங்கோ.

இப்பவும், அமைச்சுக்களை பொறுப்பு எடுங்கோ, அதைக்கொண்டு சாதிக்கலாம் எண்டு கூறினார். எதிர்க்கட்சியாக தெரிவான போது, எதிர்க்கட்சியாக அரசை சரியான வழியில் நடத்தும் கட்சியாக இருங்கோ, அரசின் நல்ல திட்டங்களையும் கண்ணை மூடிக்கொண்டு எதிர்க்கும் எதிரிக்கட்சியாக இருக்காதீரகள் எண்டுதான் வீணைக்கட்சியின் தலைவர் கூறியிருந்தாருங்கோ.

என்ன செய்வது நாம நல்லவர்களாக இருக்கலாம், மற்றவர்களும் அப்படியே இருக்கவேணும் எண்டு எதிர்பார்க்க முடியாதுதானே.

இது மட்டுமில்லையுங்கோ, பார்ளிமெண்டில கூத்தமைப்பு எதிர்க்கட்சி எண்டு ஒரு கௌரவத்தோடு இருந்துகொள்ள அதன் தலைவர் செடுல் ஏத்திக்கொண்டு இருக்கின்றார். ஆனால் மறுபக்கத்தில ஆளுங்கட்சியின் ஒருவருக்கு வழங்கப்படும் பார்ளிமெண்ட் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியை கூத்தமைப்பின் இன்னொரு தலைவராக செல்வம் வகிக்கிறார்.

அப்புடியெண்டால் செல்வம் ஆளும் கட்சி சம்மந்தமானவர் எதிர்க்கட்சி எப்புடி இருக்குது கூத்தமைப்பின்ர கூத்து பார்த்தியளோ. தன்மானமுள்ள தமிழ் மக்கள் இதுமாதிரியான கூத்தையெல்லாம் விரும்புகினமுங்கோ. இந்தக் கூத்தெல்லாம் சேர்த்துத்தான் தமிழ் தேசியம் எண்டு தன்மானத் தமிழர்கள் நம்பினமுங்கோ.

ஆகவேதான் கைநீட்டி வாங்கும்போது யார் எண்டு பார்க்காமால் வாங்குகின்ற தன்மானத் தமிழர்கள், வாக்குப் போடேக்க மட்டும் இன்னாருக்குத்தான் போடுவம் எண்டு வாக்குப் போடுவினமாமுங்கோ. இந்த தன்மானத்தை நினைக்கும் போதேல்லாம் பெருமையாக இருக்குதுங்கோ. தேர்தல் முடிஞ்சதும், பிறகு யார் அரசாங்கத் தோடை இருக்கினம், யாடைரப் புடிச்சால் வேலைவாய்ப்பைப் பெறலாம் எண்டு தன்மானத்தை இழந்து அலுவலகம் அலுவலகமாக அலைந்து திரியுவினமுங்கோ.

அடே நாம இவர்களுக்கு வாக்குப் போடவில்லையே, வாக்குப்போட்ட ஆக்களிட்ட போகமுடியலையே எண்டு கொஞ்சம்கூட கூச்சமில்லாமல், தன்மானத் தமிழன் நடிப்பான் பாருங்கோ ஒரு நடிப்பொண்டு. அது பாகுபலி படத்தைவிடவும் பிரமாண்டமாக நடிப்பாங்களுங்கோ. பார்த்துக்கொண்டு இருக்கிற நமக்குத்தான் சங்கடமாக இருக்குமுங்கோ.

"யாவும் கலப்படமற்ற கற்பனை"

## வரலாறு படைத்த வல்லுநனர்கள் ஒப்பற்ற தலைவன் மாசேதுங்



1921இல்சீனகம்யூனிட் கட்சியைத்தோற்றுவித்து, தம்மைப் போன்ற இளைஞர்களைச் சேர்த்துக்கொண்டு, கம்யூனிஸ்ட் கொள்கைகளைப் பரப்பவும் அங்கத்தினர்களைச் சேர்க்கவும் ஆரம்பித்தார். சீனாமுழுவதும் குடியானவர்களிடையே கம்யூனிஸக் கொள்கைகளைப் பரப்பலானார்.

1912 இல் சீனாவின் கடைசி மன்னர் பரம்பரையை ஒழித்துவிட்டு கோமிங்டாங் அரசாங்கம் ஆட்சி நடத்திவந்தது. அதன் தலைவரான சியாங்கே ஷேக், சீனாவை ஐரோப்பிய பாணியில் தொழில்வளமும் நாகரிகமும் மிக்க நாடாக மாற்ற முயன்று கொண்டிருந்தார். அத்தகைய நவ சீனாவுக்குத் தாமே தலைவராகவேண்டும் என்ற ஆசையும் இருந்தது சியாங்குக்கு. சீனாவை ஒற்றுமைமிக்க ஒரே நாடாக கம்யூனிஸ்டுகளின் நட்பை நாடினார் சியாங். இப்பணியில் சியாங்குடன் மிகநெருக்கமாக ஒத்துழைத்து உழைத்தார் மாஸேதுங்.

ஆனாலும் சியாங் 1927 கம்யூனிட்டுகளின் நட்பை உதறினார். அதுமட்டுமல்ல. சீனாவில் கம்யூனிஸ்டுகளே இருக்கக்கூடாதென்று, பயங்கரமான படுகொலையில் இறங்கினார். ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்டுகள் கொல்லப்பட்டார்கள். ஏராளமான பேர் தப்பி ஒடி மறைவிடங்களில் பதுங்கினார்கள். சிறைப்படுத்தப்பட்ட மாஸேதுங் லஞ்சம் கொடுத்துத் தப்பி வெளியேறினார்.

பழிவாங்கும் சியாங்கின் பிடியில் இருந்து தப்பி மாசேதுங்கும் அவர் தோழர்கள் சிலரும் சியாங்ஷி மாகாணத்திலுள்ள யாராலும் அணுகமுடியாத மலைக்குகைகளில் மறைந்திருந்து கம்யூனிச நடவடிக்கைகளை தொடர்ந்தார்.

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(10.09.2015 தொடக்கம் 16.09.2015 வரை)

### மேடம்

உடம்பில் தோல் மற்றும் இரத்த சம்பந்தமாகிய பிணிகள் வந்துபோகும். விட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளதால் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. கண்களில் கவனமுடன் இருப்பது நல்லது. பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டாலும் மிகுந்த பிரயாசையின்பேரில் சமாளித்துக்கொள்வீரகள். குடும்பத்தில் ஏற்படும் உடல்நிலை பாதிப்புகள் நீங்குவதற்காக மருத்துவத்திற்காக வெளியூர் பயணங்களை மேற்கொள்வீர்கள். நெடுநாட்களாகப் பிரச்சினையில் இருந்த குடும்பச்சொத்துக்கள் கைக்கு வந்துசேரக் கூடிய காலமாகும். அரசு வழக்குகளில் சாதகமான நல்ல தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம் விபீத எண்ணங்களை விட்டுக் காரியத்தைக் கவனிக்கவும் வேலை இல்லாதவர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும் காலமாகும்.

### இடபம்

கணவன் – மனைவி உறவுகளில் இருந்து வந்த பிரச்சினைகள் தீர்ந்த சுமூகமான உறவுகள் ஏற்படும். நண்பர்களால் வீண் விவாதங்களும் தொல்லைகளும் வந்துபோகும். உடம்பில் மூளை நரம்பு எலும்பு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். சூதாட்டம் போன்ற காரியங்களில் தலையிட்டு பொருள் இழப்பு ஏற்பட இருப்பதால் சூதாட்டங்களைத் தவிர்தல் நல்லதாகும். வீடுகளைப் புதுப்பித்துக் கட்டுவதற்காக பணச்செலவுகள் வந்துசேரும். பூர்வீக இடங்களைவிட்டு மாறிச் செல்லத் திட்டம் போடுவீர்கள். ஆதரவு அற்ற ஏழைகளுக்காக உதவி செய்து அதனால் மனமகிழ்ச்சி அடைவீர்கள். எதிர்பாராமல் வடதிசையில் இருந்து பொருள்வரவும், நல்ல செய்திகளும் வந்துசேரும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### மிதுனம்

குலதெய்வ ஆலய வழிபாடு செய்து வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். சொத்து சம்பந்தமாகிய வழக்கு விசயங்களில் நல்ல முடிவுகள் ஏற்படும். தாயின் உடல்நிலையில் பாதிப்புகள் உண்டாகுவதோடு மருத்துவச் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணஉதவிகள் உறவினர்களால் கிடைக்கும். நீண்டகாலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடு வந்துசேரும் காலமாகும். தீராத நாட்பட்ட நோய்களுக்கு விடை காணுவீர்கள். பிள்ளைகளால் எதிர்பாராத சிற்சில ஆதாயங்களை அடைய வாய்ப்புகள் உள்ளது. பணவிசயங்களுக்கான நீண்டதூரப் பயணங்களை சற்று தள்ளிப்போடுதல் நல்லது.

### கடகம்

குலதெய்வ ஆலயங்களைத் திருத்தி கட்டப்போட்ட திட்டங்களில் சிறிய தடைகளின் பேரில் வெற்றியடைவீர்கள். வெளிநாடு சென்று வருவதற்கான புதிய முயற்சிகளில் சம்பந்தம் இல்லாத நபர்களால் சில ஆதாயங்கள் வந்துசேருவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது. ரேஸ், லோட்டரி போன்ற சூதாட்ட சம்பந்தமான விசயங்களினால் பணம் கைவிட்டுப் போக இருப்பதால் சூதட்டங்களைத் தவிர்ப்பது நல்லதாகும். சம்பந்தம் இல்லாத அடுத்தவர்களின் பிரச்சினைகளில் தலையிட்டு மனக்கவலை அடையாதீர்கள். குலதெய்வ வழிபாடு செய்துவருதலால் கிரகதோசங்கள் நீங்க வாய்ப்பு உள்ளது. உறவினர்கள் மற்றும் சொந்தபந்தங்களால் ஆதரவு இல்லை.

### சிங்கம்

வெளிநாடு செல்லுதல் போன்ற புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கண், காதுகளில் கவனமுடன் இருக்கவும். விபரீதமான எண்ணங்களை விட்டொழித்து காரியத்தில் கவனமாய் இருங்கள். சொத்து சம்பந்தமாகிய வழக்கு விசயத்தில் சாதகமான நல்ல முடிவுகளை எதிர்பார்க்கலாம். உடம்பில் முதுகு மற்றும் வயிறு ஆகிய உபாதைகள் வந்துபோகும். உற்றார் மற்றும் உறவினர்களின் எதிர்பாராத திடீர்வரவுகளால் பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் எதிர்பாராத சிற்சில ஆதாயங்களை அடைவீர்கள். தேவையற்ற நண்பர்களின் தொடர்புகளால் பிரச்சினைகள்வர இருப்பதால் கவனமுடன் பழகுதல் நல்லதாகும். கூட்டுத்தொழில் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள்.

### கன்னி

குடும்பத்தில் திருமணம்போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்பு உள்ளது. உத்தியோகத் துறையினருக்கு பணி இடமாற்றமும் பதவி உயர்வுகளும் வரக்கூடும். குலதெய்வ ஆலயங்களைப் புதுப்பித்தலுக்கான முயற்சிகளில் நற்பெயர் பெறுவீர்கள். நாட்பட்ட பழைய கடன்கள் மீண்டும் தொல்லைதர வாய்ப்பு உள்ளது. நீண்டகாலமாக புதிய கட்டடம் கட்டப்போட்ட திட்டங்கள் நிறைவேறும். குலதெய்வ வழிபாட்டிற்காக தொலைதூரப் பயணங்களை மேற்கொள்ள நேரும். மூத்தசகோதரர்களால் பொருட்செலவுகள் மற்றும் மனநிம்மதிக் குறைவுகள் ஏற்படலாம். பெண்கள் சம்பந்தமான காதல் விசயத்தில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும் காலமாகும்.

### துலாம்

பொருளாதாரத்தில் இதுநாள் வரையில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறிச் சற்று முன்னேற்றம் காணப்படும். எதிர்பாராத நீண்டதூரப் பயணங்களின் மூலம் மனநிறைவடைய வாய்ப்பு உள்ளது. திருட்டுப்போன பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்ப வீடு வந்துசேரும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் காரணமற்ற பிரச்சினைகள் வர இருப்பதால் மிகவும் எச்சரிக்கையுடன் பேசிப்பழகுதல் நல்லதாகும். வராத கடன் கொடுத்துள்ள பணம் எதிர்பாராமல் திரும்பக் கிடைக்கும். வெகுதூரப் பயணங்களில் மிகுந்த எச்சரிக்கையுடன் சென்றுவருவது நல்லது. சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். காதல் விடயத்தில் கவனமாக இருக்கவும்.

### விருச்சிகம்

உறவினர்களின் வரவால் பொருள்வரவும் மனச்சந்தோசமும் உண்டாகும். உடல் நிலையில் இருந்துவந்த நாட்பட்ட நோய்கள் நீங்கி மனநிம்மதி உண்டாகும். நண்பர்களால் ஆதாயம் இல்லை. பெண்கள் விசயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நன்று. புதிய கடன் வாங்குவதற்காக முயற்சிப்பீர்கள். நீண்டநாட்களாக தடைப்பட்டுவந்த சகோதர சகோதரிகளின் திருமண காரியங்களில் வெற்றி அடைவீர்கள். ஒரு சிலருக்கு புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். விவசாயம் செய்வோர்களுக்கு நல்ல விளைச்சலும், இலாபமும் கிடைக்கும். புதிய வீடுகளை வாங்கப்போட்ட திட்டங்களுக்காக வங்கிகளில் எதிர்பார்த்திருந்த கடன்தொகைகள் கிடைக்கக்கூடிய காலமாகும்.

### தனுசு

குடும்பத்தில் தடைப்பட்டிருந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும். உடல்நிலையில் கண் காதுகளில் மிகவும் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். விட்டுப்போன கணவன், மனைவி உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. தந்தை – மகன் உறவுகளில் இருந்துவந்த மனக்கசப்புகள் நீங்கி ஒற்றுமை ஏற்படும். பலகாலமாக தீராத நோய்களுக்கு புதிய மருத்துவர்களின் உதவியால் நோய் நீங்கும். திடீர் அதிர்ஸ்டம்மூலம் எதிர்பாராத தனவரவு உண்டாகும். புதிய தொழில் ஆரம்பம்செய்வதற்காக வங்கிகள்மூலம் நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த கடன்தொகைகள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. காதல் சம்பந்தமான விசயங்களில் பெண்களால் அவப்பெயர்கள் வரக்கூடும் என்பதால் எச்சரிக்கையுடன் பழகுதல் நல்லது.

### மகரம்

மற்றவர்களை நம்பிப் பணம், பொருள் கடன் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். அநாதைகளுக்கு உதவுவதில் மனமகிழ்ச்சி அடைவீர்கள். வெகுகாலமாக நினைத்துக்கொண்டு இருந்த கூட்டுத்தொழில் முயற்சிகளைத் தொடங்கினால் மிகவும் நல்ல பலன்கள் கிடைக்கும். பொருளாதாரத்தில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து நிம்மதி அடைவீர்கள். பிள்ளைகளுக்கு எதிர்பார்த்துவந்த வேலைவாய்ப்புகள் கிடைக்கும். கணவன், மனைவி உறவில் விரிசல்களும் வீண் மனக்குழப்பங்களும் வந்து போகும். நீண்டநாட்களாக வராத பணம் திரும்பக் கைவந்து சேரக்கூடிய காலமாகும். உறவினர்களால் வீண் பொருட்செலவுகள் உண்டாகும். திருமண விசயங்களுக்காக முயற்சி செய்யலாம்.

### கும்பம்

பொதுநலக் காரியங்களுக்காக மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு நற்பெயர், புகழ் எடுப்பீர்கள். தந்தை – மகன் உறவில் சிறிய கருத்து வேறுபாடுகள் வந்துநீங்கும். உடம்பில் வாயு மற்றும் வயிறு ஆகிய உபாதைகள் வந்துபோகும். குடும்பத்தில் தடைப்பட்டுவந்த சகோதர சகோதரிகளின் திருமணம்போன்ற சுபகாரியங்கள் நிறைவேறும் வாய்ப்பு உள்ளது. குடும்பச் சொத்துக்கள் போன்ற விசயத்தில் நல்ல தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம். வங்கிகளால் எதிர்பார்த்து இருந்த கடன்தொகைகள் கிடைக்கும். கலைத்துறையினர்கள், அணு ஆராய்ச்சித் துறையைச் சார்ந்தவர்கள், மீன் முட்டை மாமிசம் போன்ற உணவுப் பொருட்களின் வியாபாரிகள், ஆகியோர்கள் நல்ல ஆதாயங்களை அடைவார்கள்.

### மீனம்

உற்றார், உறவினர்களின் வருகையால் பொருட்செலவுகள் உண்டாகலாம். புதிய நண்பர்களின் சேர்க்கையால் செய்யாத குற்றங்களுக்காக காரணமற்ற வீண் பிரச்சினைகள் வந்துசேரும் என்பதால் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவும். சம்பந்தம் இல்லாத நபர்களால் எதிர்பாராத தனவரவுகள் உண்டாகும். வீட்டைத் திருத்திக் கட்டுவதில் மிகுந்த அக்கறையுடன் திட்டம்போடுவீர்கள். கணவன் – மனைவி உறவுகளில் இருந்துவந்த பிரச்சினைகள் நீங்கி சுமூகமான சூழல் உருவாகும். காதல் விசயத்தில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லது. சொத்து சம்பந்தமாகிய வழக்கு விசயங்களில் எதிர்பார்த்த முடிவுகள் கிடைக்க காலதாமதமாகலாம்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)







இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் செப்ரெம்பர் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.